|| श्रीः ||

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசாரியாளாகிய

ஸ்ரீ உத்தராதிமடம் ஸம்ஸ்தாநாதிபதி

ஸ்ரீ ஸத்யத்யானதீர்த்த ஸ்வாமிகள்

கும்பகோணத்தில் நடத்திய

2541

# த்வைதாத்வைத விவாதம்.

கும்பகோணம்

"மாத்வமித்திரன்" பத்திரிகையின் ஆசிரியர்

ஸ்ரீமான்

(ஆத்யம்) பாகவத. ரங்கநாதாசாரியாரால்

எழுதி வெளியிடப்பட்டது.

1931

TH
This bo
below :

॥ श्रीः ॥



ஸ்ரீத்வைதஸித்தாந்த ப்ரதிஷ்டாபநாசாரியாளான
ஸ்ரீஉத்தராதிமடம்பீடாதிபதி ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய
**ஸ்ரீஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகள்.**

# பிழை திருத்தம்.

அந்தந்தநாள் ரிபோர்ட்டுகளை அப்போதைக்கப்போது கொடுப்ப தாய் முதலில் யோசித்திருந்ததால் பக்கங்களுக்கு தொடர்ந்த லக் கங்கள் போடப்படவில்லை. அந்தந்த நாட்களின் ரிபோர்ட்டின் பக்கங்களுக்கு தொடர்ந்த லக்கங்கள் போடப்பட்டிருக்கின்றன.

| நாள். | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 1 | 1 | 4 | குப்பகோணம் | கும்பகோணம் |
| ,, | ,, | 6 | நடைபெறும் | நடைபெற்ற |
| ,, | ,, | 7 | விஷயவிசாரங்கள் | விஷயவிசாரங்களின் |
| ,, | ,, | 18 | டாக்டரும் | டாகூரும் |
| 2 | 3 | 3 | வென்று சித்தித்தது | ஸ்ரீசங்காரியாளின் அபிப்பிராயமென சித் தித்தது. |
| ,, | ,, | 29 | அபின்னர்களன்று | அபின்னர்களென்று |
| ,, | ,, | 28 | எம்மதத்திற்கு | எங்கள் மதத்திற்கு |
| ,, | 5 | 6 | இதை | இதுபிரமாணவிருத்தமெ ன்று |
| ,, | 7 | 6 | பிராமாண்யமில்லை. | பிரமாணமில்லை. |
| ,, | ,, | 8 | வேதத்திங்கு | வேதத்திற்கு |
| ,, | 13 | 7 | விஷயங்கள் | அர்த்தங்கள் |
| 3 | 3 | 10 | काल: | कालविचार: |
| ,, | 5 | 3 | மித்யாஜகத் | மித்யாத்வம் |
| ,, | ,, | 28 | ஜகத் பின்னன் | ஜகத் அபின்னன் |
| ,, | ,, | 29 | என்று | என்ற |
| ,, | 8 | 16 | रक्ते | रक्तो |
| ,, | ,, | 23 | பிரம்மமான | பிரம்மபின்னமான |
| ,, | 9 | 30 | தப்புவதாய் இல்லை | தப்பிக்கிறதில்லை. |
| ,, | 10 | 7 | பிரம்மம் | பிரம்ம |
| ,, | ,, | 8 | பிரம்மனே | பிரம்மமே |
| 4 | 4 | 18 | விஷேசன | விசேஷ |
| 5 | 3 | 2 | தங்த்ர்ம்நீள்கஅ | நீங்கள் அர்த்தம் |
| 6 | 1 | 18 | அடியிற்கண்டவாறு | அடியிற்கண்டதை |
| ,, | 3 | 25 | ப்ரத்யக்ஷாதிகளின் | ப்ரத்யக்ஷாதிகள் |
| ,, | 6 | 19 | விருத்தியாகவே | விருத்தியாலேயே |
| ,, | ,, | 31 | அர்த்தத்தால் | அர்த்தாபத்தியால் |
| 7 | 2 | 20 | பிரம்மன் | பிரம்மம் தானே, |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | ,, | ,, | காமாதிகள் | கர்மாதிகள் |
| ,, | 3 | 4 | வ்யாஹாரமாக | வ்யவஹாரம் |
| ,, | ,, | 12 | விஷயமாவதில்லை | விஷயமாகிறது |
| ,, | 4 | 5 | வித்யா | அவித்யா |
| ,, | ,, | ,, | ஸாமக்ரயத்தால் | ஸாமக்ரிகளால் |
| ,, | 5 | 1 | அஸம்பந்தம் | அஸம்பத்தம். |
| ,, | ,, | 21 | கர்மா இவைகளை | இவைகளை |
| ,, | 6 | 19 | சாஸ்திரத்தில் | சாஸ்திரத்தால் |
| ,, | ,, | 25 | சாஸ்திரக்ஞானத்தில் | உங்கள் சாஸ்திர க்ஞானத்தில் |
| 16 | 19 | 28 | சப்தத்திற்கு மாக | சப்தத்திற்கு மகா பூதாதி திருத்யந்தம் அர்த்தம் என்று ஏற்படுகிறது. ஆகவே மகா |
| ,, | 21 | 32 | பதத்தால் அர்த்தமாவதில்லை, | பதத்தின் அர்த்தமில்லை |
| 16 | 22 | 3 | கீதாவாலும் | கீதையாலும் |
| ,, | 26 | 8 | பாஷியத்தால் | பாஷியத்தில் |
| 17 | 27 | 11 | எதினாலென்றால் | எதிலென்றால் |
| ,, | ,, | 14 | நிரூபித்த | நிரூபித்திருக்கிற |
| ,, | ,, | 21 | சரீரம் | சரீரம் க்ஷேத்திரம் |
| ,, | ,, | 22 | க்ஷேத்கிரம் என்னும் | என்று |
| ,, | ,, | 32 | கீதாவிலும் | கீதையிலும் |
| ,, | 34 | 4 | ज्ञान | ज्ञानेन |
| ,, | 35 | 13 | சுலோகத்தை | சுலோகத்தை அநுஸரித்து |
| ,, | ,, | 17 | என்றும் | என்று |
| ,, | 37 | 2 | க்ஷேத்ர | க்ஷேத்ரக்ஞ |
| ,, | 38 | 25 | கீதாவின் | கீதையின் |
| ,, | 40 | 2 | 9-வது | 8-வது |
| ,, | 44 | 7 | சப்பவம் | சப்தம் |
| ,, | 45 | 2 | 9-வது | 8-வது |

நாள் 2 பக்கம் 3 வரி 10-ல் 1-வதுபாரா அடியிற்கண்டபடி திருத்தப்பட்டிருக்கிறது.

1. அநந்தமான வேதவாக்யங்களில் பேதம் சொல்லப்பட்டிருக்கும்பொழுது அதற்கு விரோதமான அபேதத்தை 7, 8 வாக்யங்கள் சொல்லுமென்பது அசம்பாவிதமே. இதனால் பேதவாக்யங்கள் பஹுவாயிருப்பதால் பேதவாக்யங்களுக்குத்தான் பிராபல்யம் சொல்லவேண்டும். அபேதவாக்யங்கள் பிரபலமானவைகளென்றும் பேதவாக்யங்கள் துர்பலமானவைகளென்றும் சொல்வது சரியல்ல.

॥ श्रीः ॥

॥ श्रीरामचन्द्राय नमः ॥

# ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பிருதாங்கிதர்களா யுள்ள ஸ்ரீ உத்திராதிமடம் ஸம்ஸ்தானாதிபதிகளாகிய ஸ்ரீமத்ஸத்யத்யானதீர்த்தமகாஸ்வாமிகளின் ஸன்னிதானத்தில்குப்பகோணத்தில் 4-3-31உமுதல் திவான் பகதூர் ரகுநாதராவ் அவர்களுடைய புத்தகசாலையின் விசாலமான ஹாலில்நடைபெறும் ஸ்ரீவேதாந்தவிமர்சனி சபையில் நடந்த விஷயவிசாரங்கள் சாராம்சம்.

## முதல் நாள் நடவடிக்கை.

**4—3—31** புதவாரம்.

*இன்று மைசூர் ஸ்ரீமான் H. சுப்பராயர் அவர்கள் M. A. ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகளின் முன்னிலையில் உபன்யாஸம் செய்தார். அதன் ஸாராம்சம் பின்வருமாறு:—*

ஸ்ரீகிருஷ்ணபகவான் உபதேசித்த பகவத்கீதையானது அனைவராலும் மதிக்கப்பட்டதாயுள்ள மிக்க பிராமாணிகமான கிரந்தம். அந்த கீதையில் வர்ணாசிரமதர்மங்களைப்பற்றி வெகுவாய் சொல்லப்பட்டிருக்கின்றன. நாம் ஜன்மம் எடுத்தமாத்திரத்தாலேயே அவைகள் ஏற்பட்டு அவைகள் அவசியம் அனுஷ்டிக்கத்தகுந்ததாய் ஆகின்றன. ரவீந்திரநாத் டாக்டரும் மற்றும் சில ஆங்கிலேய கிரந்தகாரர்களும் (Division of Labour) கர்மபேதத்தினால் நூதனமாய் மனிதர்கள் செய்யவேண்டியதாய் ஏற்பட்டுள்ள அந்தந்த காலத்துக்குத் தகுந்த வ்யவஸ்தைகள்தான் வர்ணாசிரமதர்மங்கள் என்று சொல்லுகின்றனர். ஸ்ரீமத்பகவத்கீதையில் சொல்லப்பட்டிருப்பது முதலில் சொன்னபடி வர்ணாசிரமதர்மங்கள் ஜன்மத: பிராப்தமான கர்த்தவ்யதர்மங்களென்றா அல்லது பின்னாடி அபிப்பிராயப்பட்டிருக்கிறபடி கர்மபேதத்தினால் நூதனமாய் பிராப்த

மான மனுஷ்யநிர்மித நியமங்களென்றுவென்பதை இன்றையதி னம் விமரிசை செய்கிறேன்.

வர்ணுசிரமதர்மங்கள் அனுஷ்டிக்கப்பட சாத்தியமா இல்லையா என்பதையும் அவைகள் தற்போதுள்ள உலகநிலமைக்கு இஷ்ட கரமாயிருக்கிறதா இல்லையாஎன்பதையும் குறித்து நான் சொல்வ தில்லை. அதைப்பற்றி மற்றொருதினம் நான்சொல்லுகிறேன்.

பலவகையாய் பரிசீலனை செய்தாலும் ஸ்ரீகிருஷ்ணபகவான் சாசுவதமான வர்ணுசிரமவிபாகங்களை ஒப்புக்கொண்டிருக்கிறு ரென்றே நிச்சயமாகிறது. எப்படிஎனில்;

चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः ॥ (4—13)

"ஸத்வாதிகுணவிபாகத்துடனும் கர்மவிபாகத்துடனும் என்னுல் நான்குவர்ணசமூகம் சிருஷ்டிக்கப்பட்டது" என்று பகவான் கூறி யிருக்கிறுர். இந்த சுலோகத்தால் ஸ்ரீகிருஷ்ணர் சுயம் நான்குவர் ணங்களையும் குணவிபாகத்தினுல் சிருஷ்டிசெய்து வேறுவேறுன கர்மவிபாகங்களை செய்திருக்கிறுரென்று ஏற்படுகிறது. ஸ்ரீகிருஷ் ணர் நாராயணரேயாவார். அவரே, புருஷசூக்தத்தில் சொல்லப் பட்டிருக்கிறபடி ब्राह्मणोऽस्य मुखमासीत् முதலிய பிரமாணங்களின் படி ஸத்வகுணம்மிகுந்த தேகத்துடன் பிராம்மணர்களையும், குண ங்களால் அவர்களுக்கு படிப்படியாய் குறைவான ஸத்வகுணமுள்ள தேகங்களுடன் க்ஷத்திரியர்கள் முதலியோரையும் சிருஷ்டித்தார். அத்துடன் கர்மங்களை விபாகமும்செய்தார். ஆகவே பிராம்மணர்கள் ஸாத்விகதேகத்திற்கு அனுகுணமாகவுள்ளஷட்கர்மங்களில் அதாவ து; அத்யயனம், அத்யாபனம், யஜனம், யாஜனம், தானம், ப்ரதிக் ரஹம் ஆகிய ஆறுகர்மங்களில் ஈடுபட்டிருக்கவேண்டும். க்ஷத்திரி யர்களோ யஜனம், அத்யயனம், தானம் என்னும் மூன்றுகர்மங்க ளில்தான் ஈடுபட்டிருக்கவேண்டும். வைசியர்கள் வியாபாராதிகளி லும் சூத்திரர்கள் அவர்களின் உத்தமவர்ணத்தார்களுக்கு தொண்டு புரிவதிலும் ஈடுபட்டிருக்கவேண்டும். இவ்வாறுன சாஸ்திரவிதி யை பகவான் நியமனம் செய்தார். ஆனுல் சமம் தமம் முதலான தர்மங்கள் நான்கு வர்ணத்தாருக்கும் பொதுவானவைகள்தான். அப்படியிருந்தும் சமதமாதிகுணங்கள் பிராம்மணர்களில்மட்டில்

மிருந்திருக்கவேண்டும். இந்த அபிப்பிராயத்தை அறிவிக்கவே தான் சமதமாதிகள் பிராம்மணர்களின் தர்மங்களென்று பகவான் 18-வது அத்தியாயம் 42-வது சுலோகத்தில் பிரதானமாய் எடுத்துக்காட்டியிருக்கிறார். இந்த கர்மவிதிகள் ஸ்ரீபரமாத்மாவின் ஆக்ஞைகள். இவைகளை அவசியமாய் அனுஸரிக்கவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணர் 16-வது அத்யாயம் 23, 24-வதுசுலோகங்களில்,

यः शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारतः ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥
तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥

"எவன் சாஸ்திரத்தில் காணப்படும் என் ஆக்ஞையை மீறி சுயேச்சையாய் (தர்மத்தை கல்பித்துக்கொண்டு) ஆசரணைகளை செய்கின்றானோ அவன் ஞானசித்திகளை அடைவதில்லை. துக்கத்தை அடைகிறான். உத்தமகதியை அடைவதில்லை. ஆகையால் இது தர்மம் இது அதர்மம் என்று வ்யவஸ்தை செய்ய உனக்கு சாஸ்திரம் தான் ஆதாரமாகவேண்டும். சாஸ்திரத்தின் தாத்பர்யவிஷயமான விதிகளை அறிந்து தர்மானுஷ்டானத்தைச் செய்யவேண்டும்.

இவ்வாறு பகவானான ஸ்ரீகிருஷ்ணனே சாஸ்திரத்தில் கர்மவிதானங்களை செய்திருப்பதால் அவைகளை தெறிந்துகொண்டு ஆசரிப்பது எதுவோ அதுதான் தர்மமாகும். வேதாதிசாஸ்திரத்தில் பிராம்மணர்களுக்காகவென்று சொல்லப்பட்டிருக்கும் கர்மங்கள் பிராம்மணர்களுக்கு ஸ்வதர்மங்களாகின்றன. அவைகளைத்தவிர்த்துள்ள இதரதர்மங்கள் அவர்களுக்கு அதர்மங்களாகும்.

இப்பேர்பட்டதாயுள்ள சாஸ்திரோக்ததர்மங்கள் சாசுவதமானவைகளென்று ஸ்ரீகிருஷ்ணர் சொல்லுகிறார்.

ब्रह्मणो हि प्रतिष्ठाहममृतस्याव्ययस्य च ।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च ॥

என்று 14-வது அத்யாயம் 27-வது சுலோகத்திலும் त्वमव्ययः शाश्वतधर्मगोप्ता என்று 11-வது அத்யாயம் 18-வது சுலோகத்திலும் காணப்படுகிறது. இதன் தாத்பர்யமாவது:— "நான் (ஸ்ரீகிருஷ்

ணன்) சாசுவதமான தர்மத்திற்கு நியாமகனாகஇருக்கிறேன். அப்படியே நீ (ஸ்ரீகிருஷ்ணன்) சாசுவதமான தர்மத்தின் ரக்ஷகன். ஆகவே இவ்வாறு சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதுதான் தர்மமாகிறது. சாஸ்திரத்தில் வர்ணாசிரமதர்மங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்னும் விஷயத்தில் விவாதமே இல்லை. ஆனால்சிருஷ்டிகாலத்தில் எந்த நாராயணர் தேகவிபாகத்தைச் செய்து தேகானுகுணமான கர்மங்களின் விபாகத்தையும்செய்து அந்ததர்மங்களை சாசுவதமாய் பிரதிகல்பத்திலும் புன:புன: சிருஷ்டிப்பதுடன் அவைகளை நன்கு பரிபாலித்துவருகிறாரென்ற விஷயமுண்டோ அது மேற்கண்ட சுலோகங்களால் சித்தமாகிறது. மேலும் மேற்கண்ட சுலோகத்திலுள்ள காமகாரத: என்ற பதத்தால் நாங்கள் எங்களிச்சைக்கு அனுகூலமாய் அல்லது அந்தந்த காலத்திற்கு அனுகுணமாய் ஏற்பாடுசெய்துகொள்ளும் வ்யவஸ்தையானது தர்மமாகமாட்டாதென்று வெளியாகிறது. இத்தகைய சாசுவதமான தர்மம் ஸ்ரீகிருஷ்ணருக்கு பிராணப்ரியமானது. எப்படிஎன்றால் ஸ்ரீராமர் தூக்கிக்கொண்டுபோன தம் பத்னியை சத்ருநிக்ரஹம்செய்து திரும்பி எப்படி அவளை மீட்டுக்கொண்டு வந்தாரோ அப்படி வர்ணாசிரதர்மத்திற்கு குறைவு வந்தகாலத்தில் ஸ்ரீகிருஷ்ணர் அதின் ரக்ஷணார்த்தமாய் புன:புன: அவதாரம் செய்து துஷ்டநிக்ரஹம்செய்து அதை ஸம்ஸ்தாபனம் செய்கிறார். ஸ்ரீகிருஷ்ணர் சொல்வதாவது:—

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥
परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

"பரதவம்சத்திலுதித்தவனே! வர்ணாசிரமதர்மத்திற்கு எந்தெந்த காலத்தில் குறைவு நேரிடுகிறதோ அப்படியே அதர்மத்திற்கும் விருத்தி உண்டாகிறதோ அந்தந்த காலத்தில்நான் அவதாரம் செய்கிறேன். வர்ணாசிரமதர்மானுஷ்டானம் செய்யும் சாதுக்களின் ரக்ஷணார்த்தமாயும் அதற்கு மாறாக கர்மங்களைச்செய்யும் துஷ்டஜனங்களின் சம்ஹாரார்த்தமாயும் க்ஷீணமடைந்த வர்ணாசிரமதர்மத்தை திரும்பி ஸ்தாபிக்கவும் உசிதமானகாலத்தில் நான் அவதாரம் செய்கிறேன்" என்றார். ஆகவே அரசாங்கத்தார் தம் சட்டங்களை சுயம் ரக்ஷித்துக்கொள்வதில் ஆவலுள்ளவராய் இருப்பது

போல் பரமாத்மா தம்முடைய ஆக்ஞாரூபமாகிய வர்ணாசிரமதர்மங்களின் ரக்ஷணவிஷயத்தில் திடமான ஸங்கல்பம்கொண்டிருக்கிறார் ஸ்ரீகிருஷ்ணபகவான் தான் சொன்னபடியே செய்திருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணன் தர்மவிரோதிகளை அவர்களின் சைன்யங்களுடன் நாசம்செய்து வர்ணாசிரமதர்மங்களின் பாதகங்களை பரிகரித்திருக்கிறார். மேலும் அவரும் க்ஷத்திரியோசிதமான தம்முடைய தர்மங்களை அனுஷ்டித்து உள்ளார். ஸ்ரீகிருஷ்ணர் சொல்வதாவது:—

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किञ्चन ।
नानवाप्तमवाप्तव्यं वर्त एव च कर्मणि ॥
यदिह्यहं न वर्तेयं जातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥
उत्सीदेयुरिमे लोका न कुर्यां कर्म चेदहम् ।
संकरस्य च कर्ता स्यां उपहन्यामिमाः प्रजाः ॥

"ஹேபார்த்த! நான் எந்த கர்மத்தாலும் கட்டுப்பட்டவனன்று. நான் பூர்ணகாமன். ஆயினும் நான் வர்ணாசிரமத்திற்கு உசிதமான கர்மத்தில் ஈடுபட்டிருக்கிறேன். நான் ஆலஸ்யமின்றி என்னுடைய தர்மத்தை அனுஷ்டானம் செய்யாமலிருந்தால் எல்லோரும் என் வழியை கைக்கொண்டுவிடுவார்கள். நான் எனக்கு உசிதமாயுள்ள கர்மத்தைச் செய்யாவிடில் சகலலோகங்களும் ப்ரஷ்டர்களாகி நரகத்தில் விழுவார்கள். (சிக்ஷை இல்லாமற்போய் ஸ்திரீகள் துஷ்டர்களாகிப்போய்) வர்ணசாங்கர்யத்தை நானே செய்து நானே ஜனங்களை நரகங்களில் போட்டதுபோலாகும்".

ஸ்ரீகிருஷ்ணரின் சரித்திரத்தை விசாரித்தாலும்கூட அவர்க்ஷத்திரியோசிதமான கர்மங்களைச் செய்தாரென்று ஏற்படுகிறதேயொழிய அவர்பரசுராமர் வேதவியாஸர் இவர்களைப்போல்பிரதானமான பிராம்மணோசிதமான காரியங்களைச் செய்யவில்லை. மேலும் பிராம்மணர்களுக்கு விதியுக்தமாயுள்ள தனித்தனியான தர்மமில்லாமலிருந்தால் பெரும்பாலும் எல்லாகர்மங்களும் தர்மங்களேயாகும். பிறகு ஸ்ரீகிருஷ்ணர் அவதாரம் செய்து யாரையும் சிக்ஷிக்க காரணமில்லை. தொழிலின் வித்யாசத்தாலேயே தர்மங்கள் ஏற்படுவதானால் இன்று நான் கள்ளை குடிப்பது பஞ்சமனுக்கு குடி அவிருத்தமான தர்மமாயிருப்பதன் நிமித்தம் எனக்கு தோஷமில்லாமற்போகவேண்டிவரும். இன்றையதினம் நான் வியாபாரம் செய்தால்

வைசியதர்மத்தின் புண்யபலனும் எனக்கு வந்துசேரவேண்டும். துஷ்டஸம்ஹாரம் செய்தால் க்ஷத்திரியதர்மத்தின் புண்ணியமும் வந்துசேரவேண்டும். இப்படி வாதித்துப்போனால் எல்லோரும் தர்மிஷ்டர்களேயாவார்கள். ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்து அநேகர்களை அதர்மங்களைச் செய்தார்களென்று சம்ஹரிக்கக் காரணமே இருந்திருக்கமாட்டாது.

மேலும் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்வதர்மங்களென்றும் பரதர்மங்களென்றும் இரண்டு விபாகங்களைச் செய்திருக்கிறார். ஸ்வதர்மத்தை (தனக்கு ஏற்பட்டுள்ள தர்மத்தை) சற்று குறைவாகவே அனுஷ்டித்தாலும்கூட சிரேயஸ்கரமென்றும் பரதர்மம் (இதராளுக்கு ஏற்பட்டதாயுள்ள அதர்மம்) பூராவுமே, செவ்வனே அனுஷ்டிக்கப்பட்டாலும் நரகத்தைத்தான் தருமென்றும் பகவானே சொல்லியுள்ளார்.

श्रेयान् स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वभावनियतं कर्म कुर्वन्नाप्नोति किल्बिषम ॥
सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत् ।
सर्वारंभा हि दोषेण धूमेनाग्निरिवावृताः ॥

"ஹேபார்த்த! சிறிது அங்கவைகல்யமுள்ளதானாலும் ஸ்வதர்மமே சிரேயஸ்கரம். சம்பூர்ணமான என்றால் ஸர்வாங்கங்களினால் பூர்ணமான பரதர்மம் நன்கு அனுஷ்டிக்கப்பட்டாலும் சிரேயஸ்கரமன்று. ஆகையால் ஜன்மத: ப்ராப்தமான வர்ணாசிரமதர்மமென்னும் நியமானுகுணமாய் கர்மத்தைச் செய்பவன் பாபத்தை அடைகிறதில்லை ஹே கௌந்தேய! ஸஹஜமாக என்றால் ஜன்மத்தாலேயே ப்ராப்தமான கர்மத்தை அங்கவைகல்யமாகிற தோஷத்துடன் யுக்தமாயிருந்தாலும் (அதாவது சமீசீனமாய் செய்யமுடியாமற்போயினும்) விடவேகூடாது. ஏனெனில்; அக்னியானது புகையால் ஆரம்பத்தில் மூடப்பட்டிருப்பதுபோல் சர்வகர்மானுஷ்டானங்களும் ஆரம்பத்தில் (அங்கவைகல்யரூபமாகிய) தோஷத்தால் யுக்தமாயிருக்கும்."

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

"ஹேபார்த்த! கொஞ்சம் குறைவாயிருந்தாலும் ஸ்வதர்மமே ச்ரேயஸ்கரம். சமீசீனமாய் அனுஷ்டிக்கப்பட்டாலும் பரதர்மம்

அச்ரேயஸ்கரம். ஸ்வதர்மத்தில் மரணம் ஏற்பட்டாலும் புண்ய ஸாதனம்தான். பரதர்மம் பூராவாய் பயாவஹ: என்றால் நரகம் முதலான அனர்த்தத்தையே கொடுக்கக்கூடியது.”

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः ।
स्वकर्मनिरतः सिद्धिं यथा विन्दति तच्छृणु ॥

“அவரவர்களின் வர்ணாசிரமதர்மத்தில் ஈடுபட்டவன் ஞானசக்தியை அடைகிறான். ஸ்வவர்ணாசிரமோசிதமான தர்மத்தில் ஈடுபட்டவன் ஸித்தியை அடைகிறான்.”

यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम् ।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ॥

“எல்லாபிராணிகளின் பிரவிருத்தியும் யாரால் உண்டாகுமோ புன: இந்த ஜகத் யாரால் வ்யாப்தமாயிருக்குமோ அந்த பகவானை மனுஷ்யன் தன்னுடைய வர்ணாசிரமங்களுக்குரிய தர்மங்களை அனுஷ்டித்தலாகிய ஆராதனையால் பூஜித்து ஞானஸித்தியை அடைவான்”. இதனால் என்ன நிச்சயமாகிறதென்றால் ப்ராம்மணாதிகளுக்கு ஸ்வதர்மம் என்பதும் ஒன்றுண்டு அப்படியே பரதர்மம் என்பதும் மற்றொன்று உண்டு. பரதர்மத்தை எக்காலத்திலாவது சரியாக ஆசரித்தாலும்கூட அவனுக்கு சுகமில்லை. மேலும் அவனுக்கு நரகப்ராப்தியேயாகும். ஸ்வதர்மத்தை சிறிது குறைவாய் ஆசரித்தாலும் அவனுக்கு சிரேயஸ்ஸு உண்டு. ஆனால் அவனுக்கு துக்கரூபமான பலமில்லை. இப்படியிருக்க தொழிலின் வித்யாஸத்தால் பிராம்மணாதிவிபாகங்கள் உண்டாயிருந்தால் பெரும்பாலும் எல்லா ஆசாரணைகளும் ஏதாவது ஓர் வர்ணத்தின் தர்மமே ஆகும். அப்பொழுது ஸ்வதர்மமென்றும் பரதர்மமென்றும் பாகுபடுத்தக் கொஞ்சமேனும் அவகாசமில்லை. ஸ்ரீகிருஷ்ணபகவான் ஸ்பஷ்டமாய் ஒவ்வொரு வர்ணத்திற்கும் ஸ்வதர்மம் உண்டென்றும் பரதர்மம் பயங்கரமென்றும் சொல்லியிருப்பதால் ஒவ்வொருவர்ணத்திற்கும் பிரத்யேகமான ஸ்வதர்மம் இருப்பதாய் சித்தமாகிறது. மனுஸ்மிருதி என்ன, மகாபாரதம் என்ன இவைமுதலியவைகளில் பிராம்மணாதிகளின் தனித்தனியாயுள்ள தர்மங்கள் விஸ்தாரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியே அவர்களுக்கு ஆபத்துநேரிட்ட காலத்தில் அவர்கள்செய்ய அனுமதித்ததாயுள்ள

தர்மங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் நான்கு வர்ணங்களென்பது அனாதியாய்சிருஷ்டிகாலம்முதல்வந்துகொண்டிருக்கிறதேயல்லாது நவீனமாக ஏதோ பலவகை தொழில்பேதத்தால் ஏற்பட்டது அல்லவென்பது ஸ்ரீகிருஷ்ணருடைய அபிப்ராயமாகும்.

வர்ணசாங்கர்ய முண்டாகும் பிரகாரத்தை ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் வர்ணித்திருப்பதாலேயே வர்ணாச்ரமதர்மங்கள் பரம்பரையாய் பிறப்பாலேயே உண்டாயிருப்பதாகவும் தொழிலின்பேதத்தால் வந்ததல்லவென்பதாகவும் சித்திக்கும்.

स्त्रीषु दुष्टासु वार्ष्णेय जायते वर्णसङ्करः ।
सङ्करो नरकायैव................................ ॥

"ஹே அர்ஜுன ! ஸ்திரீகள் கெட்டுப்போனால் (அவர்களின் பாதிவ்ரத்யம் கெட்டுப்போனால்) வர்ணங்களின் ஸாங்கர்யம் (கலப்பு) உண்டாகும்."

उत्सन्नकुलधर्माणां मनुष्याणां जनार्दन ।
नरके नियतं वासो भवतीत्यनुशुश्रुम ॥

" குலதர்மங்களை விட்டவர்களுக்கு அதாவது ஜன்மபரம்பரையாய் ப்ராப்தமான வர்ணாச்ரமதர்மங்களை விட்டவர்களுக்கு நரகத்தில் வசிப்பது நிச்சயம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்."

மேற்கண்ட வாக்யங்கள் பிராம்மணாதிவர்ணங்களின் பாகுபாடு ஸ்திரீகளின் வியபிசாரத்தால் நாசமாகிறதென்று சொல்லியிருப்பதைக்கொண்டு ப்ராம்மண்யம் முதலியவைகள் பிறவியிலிருந்தே ப்ராப்தமான தர்மங்களேயன்றி தொழிலின் வித்யாஸத்தால் ஏற்பட்ட அவஸ்தையல்லவென்று சித்தமாகிறது.

नियतं कुरु कर्म त्वं नियतं...................कर्म यत्तत्सात्विकमुच्यते

இப்படிப்போன்றதான ஸ்ரீகிருஷ்ணரின் நியமனங்களாலும் शास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ முதலான வாக்யங்களாலும் சாஸ்த்ர விஹிதமான ஆசாரணைகள் தர்மம்தானென்று சித்தமாகிறது மனுதர்மசாஸ்திரத்திலும் பாரதம் முதலான சாஸ்திரங்களிலும் வர்ணாச்ரமதர்மங்கள் ஸ்பஷ்டமாய் வெவ்வேறாய் சொல்லப்பட்டிருக்குமென்று கே. வி. டெலாங், எம். ஏ. பண்டித மதனமோஹனமாளவியா, மற்றும் பல ஆங்கிலேய பண்டிதர்களும் ஒப்புக்கொண்டி

ருக்கிருக்கிறார்கள். ஆகையால் பகவத்கீதையை ஆதரிக்கிறவர்களெல்லோரும் வர்ணாச்ரமதர்மங்களை அவசியமாய் ஒப்புக்கொள்ள வேண்டும்.

பாண்டுரேங்கி. வி. ராமசந்திராசாரியார் M. A:— சிருஷ்டிகாலத்திலேயே ப்ராம்மணனுக்கு சாத்வீகபிரசுரமான தேகத்தையும் க்ஷத்திரியர்களுக்கு கொஞ்சம் குறைவாயுள்ள தேஹத்தையும் ஸ்ரீ பரமாத்மா கொடுத்தாரென்று நீங்கள் சொன்னீர்கள். அவ்விதமாய் ஸ்ரீபரமாத்மா சிருஷ்டிப்பதற்கு காரணம் என்ன? மற்றும் தர்மவித்தியாசங்களினால் தேஹவித்தியாசங்கள் ஆகமாட்டாதோ?

விடை. பரமாத்மா சிருஷ்டிகாலத்தில் சாத்விகாதிகுணவைசித்திரியத்தையும் மற்றும் தாரதம்யத்தையும் மாத்திரமே உண்டுபண்ணவில்லை. ஆனால் யோனிபேதங்களாலும் குலபேததாரதம்யங்களாலும் ஞானபேததாரதம்யங்களாலும் ரூபபேததாரதம்யங்களாலும் ஐச்வர்யபேததாரதம்யங்களினாலும் இவைமுதலான அநேக விசித்திரமான தாரதம்யங்களினால்கூடியதாயுள்ள சுரநரதிர்யகாதி பலவகை பிராணிகளை பகவான் சிருஷ்டித்திருக்கிறார். இதன் காரணத்தை நிதானமாக வேறே உபந்நியாசத்தில் நிரூபிக்கிறேன்.

தொழிலின் வித்தியாசத்தினால் தேஹவித்தியாசங்கள் ஆகமாட்டாது. ஏனென்றால் ப்ராம்மணனுடைய சாத்வீகதேகமென்பது பரமாத்மாவின் அனுக்ரஹத்தினாலும் மற்றும் ஷோடசஸம்ஸ்காரங்களினாலும் மந்திரங்களினாலும் உண்டானதும் அதீந்திரியமானதுமான ஓர் பவித்திரமான சக்திரூபமாயிருக்கிறது. அது ஆகாரபேதத்தினால் ப்ராப்தமானதன்று. ப்ராப்தமாகவுமாட்டாது. ஆனால் மந்திரம்முதலான படனங்களினால் அது சூத்திரனுக்கு வரமாட்டாது ஏனென்றால் சூத்திரன் மந்திரங்களை படனம் செய்தால் அது அவனுக்கு பரதர்மமாவதன்நிமித்தம் அவன் பதிதனாய் போய் சண்டாளனுக்கு சமானமாகிறான். ஆதலால் பிறவிமுதற்கொண்டு பிராம்மணாதிவர்ணங்களில் பிறந்தவர்களே அந்தந்த வர்ணாச்ரமதர்மங்களின் ஆசரணைக்கு அருகமாயிருக்கிறார்கள்.

லோகத்திலும் இதற்கு திருஷ்டாந்தமுண்டு. அரசாங்கத்தார் ராணுவம், போலீஸ், நியாயஸ்தானம் முதலிய இலாகாக்களுக்கு வெவ்வேறு உடைகளைக்கொடுத்து வெவ்வேறு கர்மங்களை விதித்திருக்கிறார்கள். அவரவர்கள் அந்தந்த உடைகளை தரித்து

அந்தந்த கர்மங்களைச் செய்தால் அவர்கள் சர்க்காரின் ப்ரீதிக்கு பாத்திரமாகிறார்கள். இல்லாவிடில் தண்டிக்கப்படுவார்கள். இப்படியே ஸ்ரீபரமாத்மா சாத்வீகாதிகுணவித்தியாசத்தினால் அதிகாரிகளுக்கு (அவரவர்களுடைய கர்மங்களின் நிமித்தமாகச் செய்து) விஷமதேகங்களைக்கொடுத்து விஷமகர்மங்களை விதானம்செய்திருக்கிறார். அந்தந்த கர்மங்களினாலேயே பரமாத்மா ப்ரீதனாகிறார். ஆனால் இவ்வளவுமாத்திரம் வித்தியாசமிருக்கிறது. அதாவது இந்த லோகத்தில் ராணுவத்திலுள்ளவனை போலீஸ்இலாகாவுக்கு ஒன்று அல்லது இரண்டு வருஷங்களில் மாற்றப்படுவதுண்டு. ஆனால் ஸ்ரீபரமாத்மா ப்ராம்மணாதிகளுக்கு அவரவர்களின் தேஹத்தை கொடுத்தபின் அந்த தேஹம் விழுந்தபிறகுதான் மற்றொரு தேஹத்தை அவர்களுக்கு (ஜன்மாந்தரத்தில்) கொடுக்கிறார்.

ஆனால் எல்லாவர்ணத்திலிருக்கிறவர்களும் பரமாத்மாவின் தியானம், விரதோபாசனைகளைச் செய்து சமானபுண்ணியத்தை அடையக்கூடும். ராணுவ அதிகாரிக்கும ரூ 1000 சம்பளம். நியாயாதிகாரிக்கும் ரூ. 1000 சம்பளம். போலீஸ் அதிகாரிக்கும் ரூ. 1000 சம்பளம். கல்வி இலாகா அதிகாரிக்கும் ரூ. 1000 சம்பளம். ஆயினும் ராணுவஇலாகா உத்தியோகத்தைக் காட்டிலும் கல்வி இலாகா உத்தியோகம் ஞானாபிவிருத்திக்கு சிலாக்கியமல்லவா? அதுபோல் ப்ராம்மணதேஹத்திலேயே வேதசாஸ்திராப்யாசத்திற்கு அதிகாரமிருப்பதனால் ஞானப்ராப்திக்கு அதிகமாய் அநுகூலகரமானது இந்த வர்ணம்தான்.

ஸ்ரீகிருஷ்ணன்கூட ப்ராம்மணதேஹம் கொஞ்சம் அதிகம் புண்ணியம்பண்ணியவர்களுக்கே வருமென்று சொல்லியிருக்கிறார்.

मां हि पार्थ व्यपाश्रित्य ये पि स्युः पापयोनयः ।
स्त्रियो वैश्यास्तथा शूद्रा स्तेऽपि यान्ति परां गतिम् ॥
किं पुनः ब्राह्मणाः पुण्याः भक्ता राजर्षयस्तथा ।

இதிலிருந்து வைச்யசூத்ராதிஜன்மங்கள் ஸ்வல்பபாபமூலமாய் வந்ததென்றும், பிராம்மணஜன்மம் அதிகபுண்ணியமூலகமானதென்றும் சித்தமாகும்.

இதே நியாயத்தினாலேயே சண்டாளர்களுடைய தேஹம் அதிகபாபமூலமாய் வந்திருக்கிறதென்று நிச்சிதமாகும். ஆகையால் அவருடைய ஸ்பர்சத்தினால் பிராம்மணர்களுக்கு கெடுதி

உண்டு. உத்தமவர்ணத்தார்களின் ஸ்பர்சத்தினுல் சண்டாளர்களுக்கும் ஹானியுண்டு. இது சாகலேயரின் வாக்கியம்.

अस्पृश्यः खलु चण्डालः श्रेष्ठवर्णं स्पृशेद्यदि ।
अज्ञानादपि लोकेऽस्मिन् प्रेत्य स्थावरतां व्रजेत् ॥

"சண்டாளன் தொடத்தகாதவன்தான். அவன் சிரேஷ்டவர்ணத்திலிருக்கிறவர்களை அஞ்ஞானத்தினுலாகிலும் ஸ்பரிசம்செய்தால் அவன் மரணமடைந்தபிறகு ஸ்தாவர(விருக்ஷ)ஜன்மத்தை அடைகிறுன்".

ஆகையினுல் நாம் சண்டாளர்களுக்கு ஹிதத்தை நினைக்கக்கோறினுல் அவர்களுக்கு நாம் இவ்வாறு உபதேசிக்கவேண்டும். "மாதாபித்ரு சிராத்தபரித்யாகம் முதலான ப்ராசீன ஜன்மத்தின் தோஷங்களினுல் உங்களுக்கு இந்த சண்டாளதேஹம் வந்திருக்கிறது. நீங்கள் பரபிரம்மனுன நாராயணனின் த்யானம்செய்து ஏகாதசி முதலான விரதங்களைச் செய்து பகவானை ஆராதித்தால் ஜன்மாந்தரத்தில் ஸ்ரீபரமாத்மா உங்களுக்கு உத்தமஜன்மத்தையும் ஞானத்தையும் கொடுப்பான்" என்று உபதேசம்செய்து அப்படி அவர்களுக்கு உபகாரம் செய்யவேண்டும். அப்படியில்லாமல் நாங்கள் அவர்களை ஸ்பரிசம் செய்தால் நாங்கள் அசுத்தர்களாவதுமன்றி அவர்களும் அனர்த்தத்தை அடைகிறுர்களாதலால் அவர்களை நாம் நாசமாக்கியதாகவே ஆகிறது.

பண்டிட் மாளவியா முதலான பண்டிதர்களும்கூட சண்டாளன் அஸ்பிருசியனென்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதாய் சொல்லியிருக்கிறுர்கள். இன்னது தர்மம், இன்னது அதர்மம் என்ற வியவஸ்தையில் சாஸ்திரமே ஆதாரமென்று ஸ்ரீகிருஷ்ணர் சொல்லியிருக்கிறுர். ஆகையால் ஸ்ரீகிருஷ்ணரை அனுசரிக்கிறவர்களெல்லோரும் வர்ணுச்ரமதர்மானுகுணமாய் தேசசேவையும் பிரஜாசேவையும் செய்து சுகத்தை அடையவேண்டுமே ஒழிய நமது இஷ்டப்படி நியமங்களைச் செய்தால் ஸ்ரீகிருஷ்ணவிரோதம் வருமன்பதில் சந்தேகமில்லை. சிறையிலிருக்கிற ஒரு ராஜவிரோதியை நாம் ராஜசாஸனத்தை மீறி பலாத்காரத்தினுல் விடுவித்தால் ராஜதூதர்கள் எங்களைப் பிடித்து தண்டிக்கிறுர்கள். தப்பித்துக்கொண்டுபோன கைதிக்கும் தண்டனையை அதிகப்படுத்துகிறுர்கள்.

॥ ஶ்ரீ: ॥

# ஸ்ரீ வேதாந்தவிமர்சினி ஸபை.

## இரண்டாவது நாள் நடவடிக்கை.

**5—3—31** குருவாரம்.

ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகள்:— **மானாதீனா மேயஸித்தி:** அப்படி என்றால் ஓர் பிரமேயமானது ஏற்படுகிறது என்று நிச்சயிப்பதற்கு அதற்கு ஸமர்த்தமான பிரமாணம் வேண்டும். பிரமாணமென்ற பதத்தில் **ப்ர**, **மாங்**, **ல்யுட்**, என்ற மூன்று பதங்களிருக்கின்றன. **ப்ர** நிஜமான **மா** ஞானத்தை **ல்யுட்** உண்டுபண்ணுவது என்பது **ப்ரமாண** சப்தத்தின் அர்த்தம். கடம், படம், முதலிய வஸ்து விஷயமான பதார்த்தஞானத்தை சக்ஷுராதி இந்திரியங்கள் உண்டுபண்ணும். ஆதலால் பிரத்யக்ஷகோசரமான விஷயத்தில் இந்திரியாதிகள் பிரமாணமாகும். பர்வதத்திலுள்ள வன்ஹிஞானத்தை தூமஞானமானது உண்டுபண்ணுகிறது. இதற்கு அனுமானமென்று பெயர். பிரம்மம், முக்தி, தர்மம், அதர்மம், முதலான சம்பூர்ண அதீந்திரிய விஷயத்தில சப்தம்தான் பிரமாணம். பிரகிருதத்தில் த்வைதிகளும் அத்வைதிகளும் வைதிகர்கள்தான் என்றால் வேதத்திலிருந்துதான் பரப்ரம்மத்தின சொரூபத்தை அறியவேண்டுமென்று வைதிகர்களாகிய நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். அதை ப்ரத்யக்ஷம் அனுமானம் இவைகளினால் அறியமுடியாதென்றும் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். அபௌருஷேயமாயிருப்பதன் நிமித்தம் நிர்துஷ்டமாயுள்ள வேதத்தில் சொல்லப்பட்ட மதம் தான் பிராமாணிகமதமாகும். இவ்வளவும் இருகக்ஷியினருக்கும் சம்மதமானது. இப்படியிருக்க, வேதத்தில ஜீவப்ரம்மர்கள் பின்னர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றனவா; அல்லது அபின்னர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றனவா; என்ற விவாதம் ஏற்பட்டிருக்கிறது. இதுதான் த்வைதாத்வைத விசாரமென்பது. த்வைதாத்வைதத்தில் எந்தமதம் பிரமாணமுள்ளதென்ற விஷயத்தில்

விசாரம் செய்யத்தகுந்தது. ஸ்ரீசங்கராசாரியாள் செய்த பிருஹத் பாஷ்யத்தில் அடியிற்கண்டவாறு பூர்வபக்ஷசங்கையை நிரூபிக்கும் பொழுது எழுதியுள்ளார்:—

न केवलमुपनिषदो ब्रह्मैकत्वं प्रतिपादयन्त्यः स्वार्थविघातं कर्मकाण्डप्रामाण्यविघातं च कुर्वन्ति । प्रत्यक्षादिनिश्चितभेदप्रतिपत्त्यर्थप्रमाणैश्च विरुध्यन्ते । तस्मादप्रामाण्यमेवोपनिषदां अन्यार्थता वास्तु न त्वेव ब्रह्मैकत्वप्रतिपत्त्यर्थता । (பிருஹச்சங்கரபாஷ்யம் 2—1—20)

இதன் அர்த்தம்:— (தத்வமஸ்யாதி உபநிஷத்துகள் பிரம்மைக்யத்தை சொல்லுகின்றனவென்று சொன்னால் கேவலமாயுள்ள (சிருஷ்டிமத்வ உபாஸனவிதாயகமான) இதர உபநிஷத் பாகங்களுக்கு மட்டில் தான் விரோதம் செய்ததாய் ஆவதில்லை. தவிரவும் வேதத்தின் (மந்திரப்ராம்மணநிரூபமான) ஸகல கர்மகாண்ட பாகங்களுக்கும் விருத்தமாகும். பேதத்தை போதிப்பதாக நிச்சிதமான பிரத்யக்ஷம் அனுமானம் ஆகிய பிரமாணங்களுக்கும் விருத்தமாகும். ஆதலால் தத்வமஸ்யாதி உபநிஷத் வாக்யங்களுக்கு அப்ராமாண்யம் வந்தாலும் வரட்டும். இல்லாவிடில் பேதரூபமான வேறு அர்த்தத்தையாவது கல்பிக்கக்கலாமேயல்லாது ஜீவபிரம்ம ஐக்யபரமாயிருப்பதாய் சொல்லக்கூடாது. சித்தாந்த வாக்யத்தில் இந்த பூர்வபக்ஷத்தை பூரா நிராகரிக்கவில்லையாதலால் இதைக் கொண்டு ஸ்ரீசங்கராசாரியாளுடைய அபிப்பிராயம் அடியிற்கண்டபடிக்கு என்று சொல்லலாம்.

1. பிரத்யக்ஷப்ரமாணம் பேதத்தை போதிப்பதாயும் ஐக்கியத்திற்கு விரோதியாகுமாகும்.
2. அனுமான பிரமாணமும் ஐக்கியத்திற்கு விரோதியாகும்.
3. கர்மகாண்டத்தின் ஸகல வேதபாகங்களும் ஐக்கித்திற்கு விரோதியாகும்.
4. சிருஷ்டியை அறிவிக்கக்கூடிய உபநிஷத் பாகங்களும் ஐக்கியத்திற்கு விரோதியாகும்.
5. உபாஸனங்களை நிரூபிக்கும் உபநிஷத் பாகங்கள் ஐக்கியத்திற்கு விரோதியாகும்.

பாக்கியிருக்கும் எல்லாபிரமாணங்களுக்கும் விருத்தமாயுள்ள 7, 8, வேதவாக்யங்கள் ஐக்யத்திற்கு ஆதாரமாயிருக்கின்றன வென்று சித்தித்தது. தத்வமஸ்யாதி சில வாக்யங்களைத் தவிர இதர எல்லா பிரமாணங்களும் பேதபோதகமென்பதில் அத்வைதிகளுக்கும் நமக்கும் யாதொரு விவாதமுமில்லை. ஆனால் தத்வமஸ்யாதி வாக்யங்களில் அபேதம் சொல்லப்பட்டிருப்பதால் இதர எல்லா பிரமாணங்களில் சொல்லப்பட்டிருக்கும் பேதம் மித்யை என்று ஸ்ரீசங்காராசாரியாள் சித்தாந்தவாக்யத்தில் கூறுகின்றார். அது ஒப்புக்கொள்ளத்தகுந்ததல்ல. ஏனெனில்;

1. எல்லா வேதங்களும் அத்யந்தம் பிரமாணமே. இப்படியிருக்க அனந்தமான வேதவாக்யங்களில் பேதம் சொல்லப்பட்டிருக்கும்பொழுது அதற்கு விரோதமான அபேதத்தை 7, 8 வாக்யங்கள் சொல்லுமென்பது அசம்பாவிதமே. இதனால் பேதவாக்யங்கள் பஹுவாய் இருப்பதால் அதன் நிமித்தம் அபேதவாக்யங்களுக்கு பிராபல்யம் என்று சொல்லவேண்டும். பேதவாக்யங்கள் பிரபலமானவைகளென்றும் அபேத வாக்யங்கள் துர்பலமானவைகளென்றும் சொல்வது சரியல்ல. ஏனெனில் எல்லா வாக்யங்களும் வேதவாக்யங்கள்தான்.

2. தத்வமஸ்யாதி வாக்யங்களுக்கு ஜீவனும் பிரம்மனும் அபின்னர்களென்று முக்யவிருத்தியால் அர்த்தம் ஏற்படுவதில்லை என்று அத்வைதிகளே ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அபேத வாக்யங்கள் அகண்டவிருத்தியால் பிரம்மத்தை போதிக்குமென்பது அவர்களுடைய மதம். அப்படி என்றால் தத்வமஸி என்பதற்கு பிரம்மமென்று அர்த்தம். அஹம் பிரம்மாஸ்மி என்பதற்கு பிரம்மமென்று அர்த்தம். இவ்வாறு எல்லா மஹாவாக்யங்களுக்கும் பிரம்மமென்று அர்த்தமே ஒழிய ஜீவபிரம்மர்கள் அபின்னர்களென்று அர்த்தமில்லை. இப்படியிருக்க ஜீவபிரம்மர்கள் பின்னர்களென்று சொல்லும் எம்மதத்திற்கு எப்படி பாதகமாகும்? அல்லது ஜீவபிரம்மர்கள் அபின்னர்களன்று சொல்லும் அத்வைத மதத்திற்கு எப்படி ஸாதகமாகும்?

3. தத்வமஸ்யாதிவாக்யங்களுக்கு முக்கியவிருத்தியால் ஜீவபிரம்மர்கள் அபின்னர்களென்று அர்த்தம் செய்ய முடிவதில்லை.

என்று ஸ்ரீ சங்கராசாரியாளே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் சொல்வதாவது:—

सर्वेशत्वस्वतन्त्रत्वसर्वज्ञत्वादिभिर्गुणैः ।
सर्वोत्तमस्सत्यकामः सत्यसङ्कल्प ईश्वरः ॥
तत्पदार्थस्त्वमर्थस्तु किञ्चिद्ज्ञो दुःखजीवनः ।
संसार्ययं तद्गतिको जीवः प्राकृतलक्षणः ॥
कथमेकत्वमनयोः घटते विपरीतयोः ।
प्रत्यक्षेण विरोधोऽयमुभयोरुपलभ्यते ॥
विरुद्धधर्माक्रान्तत्वात्परस्परविलक्षणौ ॥
जीवेशौ वह्नितुहिनाविव शब्दार्थतोऽपि च ॥
प्रत्यक्षादिविरोधः स्यात् ................................ ॥

ஸர்வவேதாந்தஸித்தாந்தஸாரஸங்கிரஹம்.

தவிரவும்;

ऐक्यं तयोर्लक्षितयोर्नवाच्ययोः
निगद्यतेऽन्योन्यविरुद्धधर्मिणोः ।
खद्योतभान्वोरिव राजभृत्ययोः
कूपाम्बुराश्योः परमाणुमेर्वोः ॥

விவேகசூடாமணி.

மேற்கண்ட வசனங்களின் தாத்பரியம் யாதெனில்; தத்வமஸி என்றவாக்கியத்தில் தத்பதத்தின் அர்த்தம் ஸர்வக்ஞத்வாதிகுணங்களுடன் விசிஷ்டனான பிரம்மம். த்வம் பதத்தின் அர்த்தம் அல்பக்ஞனான ஜீவன். இவ்வாறு விசிஷ்டங்களான ஜீவபிரம்மர்களில் ஐக்யமானது பாதிக்கப்படுவதால் லக்ஷணாவிருத்தியால் அல்பக்ஞத்வாதிகுணரஹிதனான ஜீவசைதன்யமும் ஸர்வக்ஞத்வாதிகுணரஹிதமான பிரம்மசைதன்யமும் ஒன்றே என அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே ஐக்யமானது லக்ஷணாவிருத்தியைக்கொண்டு (Secondary meaning) ஏற்படுகிறது.

4. முக்யார்த்தத்தைவிட்டு லக்ஷணாவிருத்தியை ஸ்வீகரித்தால் அநந்தமான தோஷங்களுண்டு. அதற்கு திருஷ்டாந்தமாக இரண்டு தோஷங்கள் காட்டப்படுகின்றன. (1) வேறு எந்த வாக்

யத்திலாவது ஐக்யமானது முக்யவிருத்தியால் சொல்லப்பட்டிருந்தால் தத்வமஸிவாக்யத்தில் எப்படியாவது அந்த ஐக்யத்தை லக்ஷியார்த்தமாய் ஸ்வீகரிக்கலாம் ஆனால் வேதத்தில் எங்கும் ஐக்யமானது முக்யவிருத்தியால் கூறப்படவில்லை. அஹம் பிரம்மாஸ்மி முதலான எல்லா வாக்யமும் முக்யவிருத்தியால் விசிஷ்ட ஐக்யத்தைத்தான் அறிவிக்கிறது. இதை ஸ்ரீசங்கராசாரியாளே ஒப்புக்கொண்டு லக்ஷணாவிருத்தியைத்தான் ஸ்வீகரித்திருக்கிறார். இப்படியிருக்க ஐக்யபரமாகவே தத்வமஸிவாக்யத்திற்கு எப்படி அர்த்தம் சொல்லமுடியும்? (2) சம்பூர்ணமாய் அவாச்யனான அத்வைதபிரம்மனுக்கு லக்ஷணாப்ரதிபாத்யத்வம் (லக்ஷணையால் சொல்லப்படும் தன்மை) சம்பவிக்கிறதில்லை. அத்வைதபிரம்மனுக்குவாச்யத்வநிமித்தங்களும் யாதொன்றும் காணப்படுவதில்லை. ஆகவே எங்கும் முக்யவிருத்தியால் ப்ரதிபாதிக்கப்படாத அவாச்யபிரம்மத்தின் ஐக்யத்தை தத்வமஸி வாக்யமானது ப்ரதிபாதிக்குமென்பது அசம்பாவிதமே. மேலும் லக்ஷணார்த்தத்தை ஒப்புக்கொண்டாலும் பேதபரமாக லக்ஷணை ஏற்படுத்த அநேகஉபநிஷத்வாக்யங்கள் சகாயகமாய் இருக்கின்றன.

5. தத்வமஸிவாக்யத்திற்கு பேதபரமாகவே முக்யார்த்தம் சம்பவிக்கும். सुपांसुलुक् முதலான வியாகரணசூத்ரத்தால் तत् என்ற சப்தத்திற்கு तेन, तस्मात्, तस्मै, तस्य, तस्मिन् முதலான எல்லாவிபக்தி அர்த்தங்களும் பொருந்தும். இந்த சுருதியின் துவக்கத்திலேயே सन्मूलाः सर्वा इमा प्रजाः सदायतनाः सत्प्रतिष्ठाः । என்று பேதமே சொல்லப்பட்டிருப்பதால் தத்வமஸி என்றால் நீ பரபிரம்மத்தினால் உற்பன்னனாய் இருக்கிறாய், முதலான அநேக அர்த்தங்களை முக்யவிருத்தியாலேயே செய்யலாம்

6. தவிறவும் स आत्मातत्त्वमसि என்பதை स आत्मा अतत्त्वमसि என்றும் பதம் பிரிக்கலாம். இப்படி செய்யும்பொழுது முக்யார்த்தத்தாலேயே பேதம் சித்திக்கும். இப்படியிருக்க அத்யந்தம் அப்ராமாணிகமான அபேதபரமாய் அர்த்தத்தை செய்யலாகாது. இவ்வாறே அஹம்பிரம்மாஸ்மி முதலான சகலவிடங்களிலும் அபேதமாக அர்த்தம் செய்வதற்கும் சங்கடமிருக்கிறது. அஹம் பிரம்மாஸ்மி என்பது பிரம்மத்தின்வசனம். प्रज्ञानं ब्रह्म என்பதில் பரபிரம்மமே ப்ரக்ஞானசப்தவாச்யனான வஸ்து என்று ஸ்ரீ

சங்கரபாஷ்யத்திலேயே தெரியவருகிறது. அப்படியானல் प्रज्ञानं ब्रह्म என்பதற்கு ஞானஸ்வரூபான பிரம்மன் பூர்ணன்என்று அர்த்தமாயிற்று. अयमात्मा ब्रह्म என்னுமிடத்திலும் அபேதத்திற்கு சாதகமில்லை. ओं द्युभ्वाद्यायतनं स्वशब्दात् என்னும் பிரம்ம சூத்திரத்தின் பாஷ்யத்திலும் ஸ்ரீசங்கராசாரியார் ஆத்மசப்தமானது முக்யமாய் பரமாத்மாவையே போதிக்குமென்று நிர்ணயித்திருக்கிறார். இதன்படி अयमात्मा ब्रह्म என்றால் இந்த பிரம்மன் பூர்ணன் என்று அர்த்தமாகும். இந்தவிதமாக சகலவேதங்களும் பேதத்திற்கு சாதகமாயும் அபேதத்திற்கு பாதகமாயுமிருப்பதால் பேதமே வேததாத்பர்யத்திற்கு சம்மதமானதென்று ஒப்புக்கொள்ளவேண்டும்.

ஆகவே இந்தவிஷயத்தைப்பற்றி யாராவது ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லலாம்.

நல்லூர் சுப்பிரமணியசாஸ்திரிகள்:— இதைப்பற்றி நான் சற்று சொல்லுகிறேன். வேதமே பிரமாணமென்று தாங்கள் சொன்னதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன் ஆனல் பிரமாணமென்பது अनधिगतार्थगन्तृप्रमाणं என்றால் வேறுபிரமாணங்களால் ஏற்படாத அபூர்வமான அர்த்தத்தை போதிப்பதாயுள்ள வாக்யமே பிரமாணமென்பது ஸர்வஜனங்களாலும் அங்கீகிருதமான நியாயம். ஆகவே வேறு பிரமாணங்களால் சித்தமான அர்த்தத்தை வேதம் அறிவிப்பதாகில் வேதத்திற்கு பிராமாண்யததை ஒப்புக்கொள்ளக்கூடாது. பேதமோ அன்யப்ரமாணங்களால் சித்தமாயிருக்கிறது.

ஸ்ரீஸ்ரீகள்:— இந்த நியாயம் ஸர்வஜனங்களாலும் அங்கீகிருதமானதன்று. இது பாட்டமதத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. நையாயிகர்கள்முதலியவர்களும் நாமும் (த்வைதிகளும்) अबाधितार्थकत्वं प्रामाण्यं என்றுதான் ஒப்புக்கொண்டிருக்கிறோம். என்றால் வேதவாக்கியத்தினின்றும் உற்பன்னமான ஞானம் பாதிக்கப்படாதிருக்குமாயின் அது பிரமாணமாகும். பிருகிருதத்தில் பேதத்தை போதிப்பதான வாக்கியங்களால் பேதஞானம் பிறக்கும். இதற்கு பாதம் எதனல் உண்டாகும்?

ந-சு:— प्रमाणान्तराप्राप्यार्थबोधकत्वमेव प्रामाण्यमित्यङ्गीकार्यः ।
प्रत्यक्षेणानुमित्या वा यस्तूपायो न बुध्यते ।
एनं विदन्ति वेदेन तस्माद्वेदस्य वेदता ॥

முதலிய சுலோகத்தில் சொன்னபடி अग्निर्हिमस्य भेषजं முதலிய வேதவாக்யங்கள் அனுவாதரூபமாக இருக்கின்றன. அவைகள் வேதத்தில் பிராமாண்யமில்லை. அப்படியே பேதம் இதரபிர மாணத்தால் சித்தமானதால் அந்தவிஷயத்தில் வேதம் பிரமாண மாகமாட்டாது. ஐக்யம் அபூர்வார்த்தமானதால் வேதத்திங்கு ஐக் யார்த்தத்தாலேயே பிராமாண்யம் சம்பவிக்கலாம். பேதவாக்யங் கள் அனுவாதரூபமாக இருக்கின்றன.

ஸ்ரீஸ்ரீ:— பிராமாண்யமென்றாலென்ன?

ந-சு:— वेदत्वमेव प्रामाण्यम्.

ஸ்ரீஸ்ரீ:— இது தவறு. वेदत्वमेव न प्रामाण्यम्. அபூர்வதை யுள்ள வாக்யமே பிரமாணமென்றால் வெகு தோஷங்கள் வரும். வேதமானது ப்ரத்யக்ஷாதிகளால் கிரஹிக்கப்படாத அர்த்தங்களை சொல்லட்டும். ஆனால் வேதத்தில் சொன்ன அர்த்தம் அபாதித மாயிருந்தால அதற்கு பிராமாண்யம் சம்பவிக்கலாம். இப்பொழுது வேதத்தில் சொல்லியிருக்கும் பேதத்திற்கு பாதகமாய் ஐக்யம் எங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

ந-சு.— மகாவாக்யங்களில்.

ஸ்ரீஸ்ரீ:— இதோ பாருங்கள். நாம் இப்பொழுதுகாட்டும் ஸர்வவேதாந்தசித்தாந்தஸாரஸங்கிரஹசுலோகங்களில் உம்முடைய மகாவாக்யத்திற்கு முக்யார்த்தத்தை ஒப்புக்கொள்வதற்கு பாதகத் தை ஸ்ரீசங்காாசாரியாளே காட்டியிருக்கிறார்.

புரோபஸர் K. சுந்தரராமய்யர்வாள் M A — ஸ்ரீசங்கரபாஷ்யத் தைவைத்துக்கொண்டு பேசுவோம். பலர் பலகாலங்களில் ஆசாரியா ளின் பெயர் வைத்து பலநூல்களை சேர்த்துவிடுகின்றனர். ஆத லால் மற்றநூல்களை எடுக்கவெண்டாம். ஸ்ரீசங்காாசாரியாளின் பாஷியத்தின்மீது விசாரம் நடக்கட்டும்.

ஸ்ரீஸ்ரீ:— அப்படியே சரி. ஐக்யபோதகவாக்யமெது?

ந-சு:— அஹம் பிரம்மாஸ்மி.

ஸ்ரீஸ்ரீ:— தத்வமஸி என்பது தற்போது பிரஸக்தமானதா யிற்றே; அதை ஏன்விட்டீர்? மேலும் நீங்கள் எடுத்திருக்கும் இந்த வாக்யமும் உங்கள் மதத்தின்படி லக்ஷணையால் ஐக்யத்தை போதிப்பதுதானே?

புரோபஸர் கே-சு:— எதானாலும் சரி. சுலபத்தினின்றும் கஷ்டத்திற்கு போகவேண்டும். சாஸ்திரிகளே! நீர் सदेव सोम्य என்பதை எடுத்துப் பேசுங்கள்.

ந-சு — சரி. सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं என்னும் வாக்யம் ஐக்யத்திற்கு பிரமாணம்.

ஸ்ரீஸ்ரீ:— இதில் இரண்டு வாக்யங்கள் உண்டு. அவைகளில் எது ஐக்யபோதகமானது? எந்த பதத்தால் எந்த அர்த்தத்தைச் சொல்லுகிறீர்?

ஜகதீசுவரசாஸ்திரிகள்:— இரண்டுவாக்யங்களிலுமே ஐக்யம் சொல்லப்பட்டிருக்கிறது. एकमेवाद्वितीयं என்றவாக்யம் ஸ்பஷ்டமானது. இந்த வாக்யம் ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகத, பேதராஹித மான பிரம்மத்தைச் சொல்லுகிறது.

ஸ்ரீஸ்ரீ:— எந்தபதத்தால் எந்த அர்த்தத்தை அறிவிக்கிறீர்?

ஜ-சா:— எந்த பதத்தாலும் எந்த பேதமில்லாமையையும் சொல்லலாம். நமக்கு அதுல ஆக்ரஹமில்லை. இது வாக்யார்த்தம். इदं இந்த ஸர்வப்ரபஞ்சமானது अग्रे சிருஷ்டியின் பூர்வதசையில், सदेवासीत्, सन्मात्रमेवासीत् என்றால் ஸன்மாத்ரமாகவே இருந்தது. அது ஏகமேவாத்விதீயம் ஸஜாதீயவிஜாதீயஸ்வகதபேதசூன்யம். இதில் ஏகமேவ என்னும் பதத்தால் விஜாதீயமானதும் அப்படியே ஸ்வகதமானதுமான பேதராஹித்யமும் அத்விதீயமென்னும்பதத்தால் ஸஜாதீயபேதராஹித்யமும சித்திக்கும். ஆகவே பிரம்மம ஸஜாதீய விஜாதீய ஸ்வகத பேத சூன்யமென்று அர்த்தமாயிற்று.

ஸ்ரீஸ்ரீ:- உங்கள் பாஷ்யத்தை அனுசரித்தல்லவா நீங்கள் இந்த அர்த்தம் சொல்லுகிறீர்கள்.

ஜ-சா:— ஆம்.

ஸ்ரீஸ்ரீ:— இதோ பாருங்கள் உம்முடையபாஷ்யத்தை. நீங்கள் சொன்னபடி இருக்கிறதா என்று. இதிலுள்ள வாக்யங்களை படித்துக்காட்டுங்கள். ஆகவே இந்த உங்கள் வாக்யத்திற்கும் ஸ்ரீ சாங்கரபாஷ்யம் அனுகூலமாகஇல்லை, எமக்குத்தான் அனுகூலம்.

ஜ-சா:— படிக்கிறார்.

एकमेवेति । स्वकार्यपतितमन्यन्नास्तीत्येकमेवेत्युच्यते । अद्वितीयमिति । मृद्व्यतिरेकेण मृदो यथा अन्यद्घटाद्याकारेण परिणामयितृकुलालादिनिमित्तकारणं दृष्टं तथा सद्व्यतिरेकेण सतः सहकारिकारणं द्वितीयं वस्त्वन्तरं प्राप्तं प्रतिषिध्यतेऽद्वितीयमिति ।

ஸ்ரீஸ்ரீ:— இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? "ஏகமேவ" என்றால் स्वकार्यपतितमन्यन्नास्ति என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சிருஷ்டிக்கு பூர்வத்தில் பிரம்மனால் ஜன்யமான (உண்டான) பதார்த்தங்கள் ஒன்றுமிருக்கவில்லை என்று அர்த்தம். விவாஹகாலத்தில் புத்ராதிகள் இல்லை என்றால் வரனுக்கு தாய், தந்தை, பந்துக்கள் முதலியோர் இல்லை என்று அர்த்தமாவதில்லை. இப்படியே பிரளயகாலத்தில் பிரம்மத்தால் சிருஷ்டமான ஜகத் இருக்கவில்லை என்றால்; இதர நித்யபதார்த்தங்களும் இருக்கவில்லை என்று ஏற்படுவதில்லை. அத்விதீயமென்றால் சிருஷ்டி செய்யத்தக்க பிரம்மனுக்கு ஸஹகாரிகாரணம் ஏதுமிருக்கவில்லை என்று அர்த்தம் சொல்லப்பட்டது. இதனாலும் அத்வைதம் சித்திக்கவில்லை. திறமையுள்ள வக்கீலுக்கு ஸஹகாரியானவன் இருக்கவில்லை என்றால் சபையில் அந்த வக்கீல் ஒருவரே இருந்தாரென்று சித்திக்கிறதில்லை. அப்படியே சிருஷ்டியின் துவக்கத்தில் பிரம்மனுக்கு ஸஹகாரிகாரணம் யாதுமிருக்கவில்லை என்றால் சமர்த்தனான பிரம்மனுக்கு சஹாயம் செய்பவர் யாருமிருக்கவில்லையென்று அர்த்தமாகிறது. நித்ய வஸ்துக்களான ஜீவன் காலம் அவித்யை முதலியவர்கள் பின்னர்களாக இருக்கவில்லை என்று சித்திக்கிறதில்லை.

ஜ. சா:— ஏகமேவ என்பதற்கு स्वपतितमन्यन्नास्ति என்றும் कार्यपतितमन्यन्नास्ति என்றும் அர்த்தம். அதன் தாத்பர்யமாவது:— காரணத்வவிசிஷ்டமானது ஒன்றுமிருக்கவில்லை, கார்

யத்வவிசிஷ்டமானதும் ஒன்றுமிருக்கவில்லை என்றாகும். ஆகவே எல்லா காரணங்களும் எல்லா காரியங்களும் இருப்பதில்லை என்று அர்த்தமாகும். அத்வைதமும் ஜகத்தின் மித்யையும் சித்திக்கிறது.

ஸ்ரீ ஸ்ரீ:— स्वकार्यपतितं என்பதில் स्वपतितं என்றும் कार्यपतितं என்றும் பிரத்யேகமாய் விபாகம் செய்து அர்த்தம் சொல்வது உசிதமல்ல. தவிரவும், அது நிஷ்பலமாகும். அப்படியே ஆகட்டும். அது சொன்னால்தான் என்ன ஏற்பட்டது? कार्यपतितमन्यन्नास्ति என்றால் கார்யத்வவிசிஷ்டமான வேறொருபதார்த்தமில்லை என்று அர்த்தமாயிற்று. இப்படியே स्वपतितमन्यन्नास्ति என்றால் ஸ்வத்வவிசிஷ்டமான வேறு எந்த பதார்த்தமுமில்லை என்று அர்த்தமாகவேண்டும். ஆகவே இரண்டு பரப்ரம்மன்களிருந்திருக்கவில்லை. காரியங்கள் யாவும் இருந்திருக்கவில்லை என்று அர்த்தமாயிற்று. நித்யபதார்த்தங்கள் இருந்திருக்கவில்லை என்று எப்படி சித்தித்தது.

ந. சு:— நித்யபதார்த்தங்கள் இல்லவே இல்லை.

ஸ்ரீ. ஸ்ரீ:— இல்லை என்பது இந்த வாக்யங்களால் சித்திப்பதில்லை. இந்த வாக்யத்திற்கு நீங்கள் அர்த்தம் சொன்னபடி ஸ்வத்வவிசிஷ்டமென்றால் வேறு ஒரு பிரம்மமிருப்பதில்லை அதாவது ஜன்யகாரியங்களிருப்பதில்லை என்று தான் சித்தித்தது.

ஜ. சா:— ஸ்வத்வவிசிஷ்டமானது இருப்பதில்லை என்றால் காரணசாமான்யமும் இருப்பதில்லை என்று அர்த்தமாகும். ஸ்வ சப்தத்திற்கு காரணத்வவிசிஷ்டமான பிரம்மமென்று அர்த்தம்.

ஸ்ரீ. ஸ்ரீ:— ஸ்வ என்ற பதத்திற்கு இங்கு காரணத்வவிசிஷ்டபிரம்மமென்று எப்படி அர்த்தம் செய்யமுடியும்? स्वपतितं नास्ति என்றால் स्वत्वाक्रान्तं नास्ति என்று அர்த்தம். स्वत्वं என்றால் பிரம்மத்வம் स्वस्य भावः स्वत्वं खलु । मूर्खस्य भावः मूर्खत्वं மூர்க்கத்வம் என்று சொன்னால் மனுஷ்யத்வமென்று அர்த்தம் செய்யக்கூடாது. சண்டாளத்வமென்றால் மனுஷ்யத்வமென்று அர்த்தம் செய்யக்கூடாது. இப்படியே ஸ்வத்வம் என்றால் பிரம்மத்வமென்று அர்த்தம் செய்யவேண்டுமேயொழிய காரணத்வமென்று அர்த்

தம் செய்யக்கூடாது. ஆகையால் ஸ்வத்வவிசிஷ்டம் நாஸ்தி என்றால் பிரம்மத்வவிசிஷ்டமானது அதாவது அநேக பிரம்மன்கள் இருப்பதில்லையென்று அர்த்தமாகிறது. இதர ஜீவாதிகளிருப்பதில்லை என்று அர்த்தமாகாது. இதைத்தவிர்த்து;

जीव ईशो विशुद्धाचिद्भेदस्तस्यास्तयोर्द्वयोः ।
अविद्यातच्चितोर्योगः षडस्माकं ह्यनादयः ॥

என்ற அத்வைதிகளின் வாக்யத்தாலும் சிருஷ்டியின் பூர்வத்தில் அநேக பதார்த்தங்களிருந்தனவென்றுதெரியவருகிறது. तमआसीत् முதலான சுருதிகள் பிரம்மபின்னமான பதார்த்தங்களின் ஸத்பாவத்தை போதிக்கின்றன.

ஜ. சா:— ஸ்வத்வவிசிஷ்டமானதும் இருப்பதில்லை என்றால் காரணத்வவிசிஷ்டமானதும் இல்லை என்று அர்த்தம். ஸ்வ சப்தத்திற்கு இவ்விடத்தில் காரணமென்று அர்த்தம்.

ஸ்ரீ. ஸ்ரீ:— அது எப்படி கூடும். உங்கள் அர்த்தமோ சப்தத்தால் உண்டாவதில்லை. தவிரவும், ஸ்வசப்தமானது விசேஷ்ய வாசகமானதன்றோ? सदेव सोम्य என்பதில் सत् பதார்த்தம் பிருகிரதத்திலிருக்கிறது. அதுதான் ஸ்வசப்தத்தின் அர்த்தமாகவேண்டும். தவிரவும் உங்கள் மதத்தில் ஸத்பதார்த்தமோ சுத்தபிரம்மன். சிருஷ்டியின் பூர்வத்திலிருந்த வஸ்துவின் நிரூபணமாயிருப்பதால் ஸத்பதார்த்தமானது காரணத்வவிசிஷ்டமான பிரம்மனென்று சொல்வதாய் ஆகமாட்டாது. சுத்தபிரம்மனுக்கு காரணத்வாதிகள் ஒன்றுமில்லை. ஆகவே இந்த இடத்தில் காரணத்வாதிகளுக்கு பிரஸக்தியே இல்லாமலிருப்பதன் நிமித்தம் ஸ்வபதத்திற்கு காரணத்வ விசிஷ்டமான பிரம்மமென்று அர்த்தம் செய்யக்கூடாது.

ஜ. சா:— सदेव सोम्य என்பதில் सत् பதார்த்தம் காரணத்வவிசிஷ்டபிரம்மமே.

பு. சுங்:— நான் இந்த அர்த்தத்தை ஒப்புக்கொள்வதில்லை.

ஸ்ரீஸ்ரீ:- சரி. இது விசாரிக்கவேண்டியவிஷயம். एकं एव अद्वितीयं என்ற பதங்களில் எந்த பதத்திற்கு எந்த அர்த்தமானாலும்

ஆகட்டும். अद्वितीयं என்ற பதத்தால் பிரம்மத்தினிடம் ஸஜாதீய மான பேதமில்லை என்று நீங்கள் சொன்னீர்கள். நமக்கு ஒன்றும் விரோதமில்லை. एव சப்தத்தால் स्वगतभेदराहित्यं என்று சொன்னதும் நமக்கு விரோதமில்லை மீதி एक சப்தத்திற்கு विजातीय-भेदराहित्यं என்று அர்த்தம் செய்வதற்கு பிரமாணமில்லை. நீங்கள் அவ்வாறு அர்த்தம் செய்ததற்கு விசேஷகாரணமென்ன ?

ஐ. சா:— भाष्यकारः प्रष्टव्यः பாஷியகாரரை ஸ்ரீசங்கராசாரியாரை கேளுங்கள்.

ஸ்ரீஸ்ரீ:— அதைத்தான் நாம்கேட்கிறோம். அத்வைதபாஷ்யத்தில் பிரம்மன் விஜாதீயபேதாஹிதரென்று அர்த்தம் செய்யப்பட்டதற்கு காரணமென்ன ?

பு. சு:— எனக்கு ஒன்று தோன்றுகிறது. एकं என்றாலேயே அத்வைதமானது சித்தித்தது. एव என்று சொன்னது அவதாரணார்த்தமாக. अद्वितीय மென்று சொன்னது. மீண்டும் அதையே திருடப்படுத்தச் சொன்னது. (for the sake of emphasis) ஆகையால் தனித்தனி பதங்களின் அர்த்தத்தின் சிந்தையே வேண்டியதில்லை.

ஸ்ரீஸ்ரீ:— இது உங்களுடைய அர்த்தமா? உங்கள் பாஷ்யகாரரின் அர்த்தமா?

பு. சு:—என்னுடைய அர்த்தம்.

ஸ்ரீஸ்ரீ:— அதைப்பற்றி பின்பு விசாரிப்போம். உங்கள் பாஷியகாரர் செய்தஅர்த்தத்தின்பேரிலேயே இவ்வளவு கலகம் நடக்கிறது. உங்கள் அர்த்தத்தின்பேரில் விசாரணைசெய்யமுடியாமலிருக்கமுடியுமா? பிருகிருதத்தில் एकमेवाद्वितीयं என்றதில் அத்வைதபாஷ்யமே அத்வைதத்தை சாதிக்காது என்று காட்டிவருகிறோம். एक பதத்திற்கு விஜாதீயபேதாஹிதமென்று அர்த்தம் செய்யவேண்டுமாய் இந்த சாஸ்திரிகள் சொல்லுகிறார். இதற்கு காரணமென்ன ?

பு. சு:— வேறு என்ன அர்த்தம்தான் இருக்கும் ?

ஸ்ரீஸ்ரீ:— எவ்வளவோ அர்த்தம்தான் இருக்கலாம். एके मुख्यान्यकेवलाः என்று அமரகோசத்தில் மூன்று அர்த்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. एकस्सुपर्णः என்ற சுருதியின் வியாக்யானத்தில் வித்பாரண்பரே एकः என்றால் असहाय னென்று அர்த்தம்

செப்திருக்கிறார். இப்படியே அத்விதீயம் என்றசப்தத்திற்கும்கூட सदृशराहित னென்று அர்த்தமாகும். सदृश गोर्द्वितीयोऽन्वेष्टव्यः என்ற பிரயோகத்தில்द्वितीयமென்றால் सदृशமென்று ஸ்ரீசங்காசாரியாரே அர்த்தம் செப்திருக்கிறார். न त्वत्समोऽस्त्यभ्यधिकः कुतोऽन्यः முதலான ஸ்மிருதிகள் பரமாத்மா ஸமரஹிதன் அதிகரஹிதனென்றும் சொல்லுகிறது. ஆகையால் अद्वितीयं என்றால் समाभ्यधिकराहित னென்று அர்த்தமாகும். இப்படி அநேகவிஷபங்கள் சம்பவிக்கும் பொழுது एक மென்பதற்கு अप्रामाणिक மான विजातीयभेदराहित மென்று அர்த்தம் அங்கீகரிப்பதற்கு காரணமென்ன ?

ந. சுப்:— सहकृतानां ..................... என்ற நியாயத்தால், தற்போது இருக்கும் 3-பேதராஹித்பத்தில் இரண்டுபேதராஹித்யத்தை நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். மற்றொருபதத்தால் மூன்றுவதுபேதராஹித்யத்தை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது ?

ஸ்ரீஸ்ரீ:— இந்த நியாயம் பிரயோஜனமில்லை. இந்த நியாயத்தின்பலத்தால் மூன்றுவதுபேதமும் பிரம்மனிடமில்லைஎன்று நீங்கள் சொல்லலாகாது. சசவிஷாணத்தின்பேதத்தை பிரம்மனிடம் நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்களல்லவா?

பு சு:— சசவிஷாணம் துச்சம் அஸத் அது.

குருசாமிசர்மா:— ஸத்பதார்த்தவிசாரத்தில் அதன் பிரஸக்தி ஏன் ?

ஸ்ரீஸ்ரீ:— அப்படிகூடாது. அஸத் என்பது விஜாதீயமானது தானே! அந்த பேதத்தை ஒப்புக்கொள்ளாவிடில் பிரம்மனிடம் சசவிஷாணபேதமில்லை என்று பிராப்தமாகிறது. பிறகு பிரம்மன் மலடிமகன்போல் அஸத் என்று சித்தமாகும்.

குரு. சர்:— இன்று இந்த வாதம் இத்துடன் நிற்கட்டும், நாளை இரண்டுவிஷபங்களில் வாதத்தின் தொடர்ச்சி நடக்கட்டும். सदेवसोम्य என்பதில் ஸத்பதார்த்தம் कारणत्वविशिष्ट பிரம்மன்தான் என்ற ஜகதீசுவரசாஸ்திரியாரின் வாக்கியார்த்தத்தின்மேலும் பிரம்மனிடம் விஜாதீயபேதத்தையும்கூட सहकृतानां முதலிய நியாயங்களை அனுஸரித்து பரித்யாகம் செய்யவேண்டுமென்ற சுப்பிரமணியசாஸ்திரியாரின் வாக்யார்த்தத்தின்பேரிலும் நாளையதினம் விசாரம் நடக்கட்டும்.

॥ श्रीः ॥

# ஸ்ரீ வேதாந்தவிமர்சினி ஸபை.

## மூன்றாவது நாள் நடவடிக்கை.

**6—3—31** சுக்ரவாரம்.

குருஸ்வாமி சர்மா:— பிரம்மத்தைத் தவிர எந்தபதார்த்தமுமில்லை என்று ஏகமேவாத்விதீயம் என்ற சுருதிக்கு அர்த்தம் சொன்னால் பாதகமென்ன? சிருஷ்டியின் பூர்வத்தில் எந்த பதார்த்தமும் இருந்திருக்கவில்லை அன்றோ!

ஸ்ரீ. ஸ்ரீ அவர்கள்:- **तम आसीत् मृत्युनैवेदमावृतमासीत्, इदमग्रे** முதலான பல சுருதிகளாலும், **प्रकृतिं पुरुषंचैव विद्ध्यनादी उभावपि** முதலான ஸ்மிருதிகளாலும்,

**जीवईशो विशुद्धाचिद्भेदस्तस्यास्तयोर्द्वयोः ।**
**अविद्या तच्चितोर्योगः षडस्माकं ह्यनादयः ॥**

முதலான சுலோகங்களில் அத்வைதிகள் அங்கீகரித்திருப்பதாலும், தமஸ், மிருத்யு, காலம், பிருகிருதி, ஜீவாதி அநேக பதார்த்தங்கள் அனாதியாகவே இருக்கின்றனவென்று பிரமாணத்தால் சித்தமாகின்றது. ஆகையால் **एकमेवाद्वितीयं** என்ற சுருதியில் பிரம்ம பின்னமான ஒரு பதார்த்தமும் சிருஷ்டிகாலத்தில் இருக்கவில்லை என்று அர்த்தம் செய்வது அப்ராமாணிகம்.

கு. சர்:— பாஷ்யத்தின் பதத்தின்பேரில் நான் விசாரிக்கிறேன். **स्वकार्यपतितमन्यन्नास्ति** என்றால் பிரம்மம் சிருஷ்டிசெய்த ஒரு பதார்த்தமும் இருக்கவில்லை என்று பாஷ்யகாரர் அர்த்தம் செய்திருக்கிறார். பிரம்மம் சிருஷ்டி செய்யாத பதார்த்தம் இல்லவே இல்லை. ஆகையால் பிரம்மபின்னமான யாதொருபதார்த்தமும் இல்லை என்று சித்திக்கிறதல்லவா?

ஸ்ரீ. ஸ்ரீ:— சித்திக்காது. பிரம்மத்தால் சிருஷ்டிக்கப்படாத அநேக பதார்த்தங்களிருப்பதாய் சுருதிஸ்மிருதிகளில் நிரூபிக்கப்

பட்டிருக்கின்றன. அத்வைதிகள் ஆறு அநாதிபதார்த்தங்களிருப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அநாதிபதார்த்தங்களென்றால் அசிருஷ்டமான அதாவது சிருஷ்டிக்கப்படாததான பதார்த்தங்களென்று அர்த்தம். இவ்வாறு பிரம்மத்தால் சிருஷ்டிக்கப்படாத அநேக பதார்த்தங்களிருப்பதாய் பிரமாண சித்தமாயிருப்பதால் பிரம்மம் ஸர்வபேதராஹிதனாய் ஒருவரே இருந்தாரென்று சொல்வதற்கில்லை.

தவிரவும் ஏகசப்தத்திற்கு முக்யமென்றும் அன்யமென்றும் ஸ்ரீவித்யாரண்யரின் வ்யாக்யானப்படி அஸஹாயரென்றும் பிரமாணிகமான இதர அர்த்தங்கள் அநேகமிருக்கின்றன. இப்படியிருக்க, கேவலமென்ற பாதிக்கப்பட்டதாயுள்ள அர்த்தத்தை வைத்துக்கொண்டு வ்யாக்யானம் செய்வதற்கு காரணமென்ன?

[ இச்சமயம் ஜகதீசுவரசாஸ்திரிகள் வந்தார். சுப்பிரமணியசாஸ்திரிகள் வந்திருக்கவில்லை. ]

ஜகதீசுவரசாஸ்திரி:— இப்படி நீங்கள் சொல்வதானாலுங்கூட ஏகபதத்திற்கு வைத்துக்கொள்ளவேண்டியது, "அன்ய" என்ற அர்த்தமா 'முக்ய' மென்ற அர்த்தமா, 'அஸஹாய' மென்ற அர்த்தமாவென்று நிச்சயிக்கமுடியாமலிருப்பதால் விநிகமனாவிரஹாத் அசோகவனிகா நியாயாபத்தி: [ என்றால் நிச்சயிக்கமுடியாமலிருக்கிறது. ]

ஸ்ரீ. ஸ்ரீ:— ஒரு பதத்திற்கு அநேக அர்த்தங்களிருப்பினும் இந்த இடத்தில் எந்த அர்த்தத்தை வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை இதர பிரமாணங்களின் பர்யாலோசனையாலும் பிரகரணாதி பர்யாலோசனையாலும் நிர்ணயிக்கவேண்டும்.

ஜ. சா:— உபக்ரமாதிலிங்க ப்ரகரணாதிகளும் எமக்குத்தான் அநுகூலமாக இருக்கின்றன. பூர்வத்தில் ஏகவிக்ஞானத்தால் ஸர்வவிக்ஞானம் பிருகிருதமாயிருக்கிறது. இதைத் தவிர ஏகபதத்திற்கு ஸர்வபேதராஹிதமென்று அர்த்தம் வைத்துக்கொள்ளாவிடில் பாதகமுமுண்டு.

ஸ்ரீ. ஸ்ரீ:— அநாதிபதார்த்தங்களை ஒப்புக்கொள்கிறீர்களல்லவா?

ஜ. சா:— ஒப்புக்கொள்கிறோம். சந்தேகமே இல்லை.

ஸ்ரீஸ்ரீ:—அநாதியான பதார்த்தங்கள் இருந்தனவென்று ஒப்புக்கொண்டுவிட்டு த்விதீயவஸ்து ஒன்றும் சிருஷ்டிகாலத்தில் இல்லையென்று சொன்னால் வ்யாஹதியானது வரவில்லையா? சிருஷ்டிகாலத்தில் பிரம்மபின்னமான அநாதிபதார்த்தங்கள் இருந்தனவென்று சொல்லி அடுத்தாப்போல் சிருஷ்டிகாலத்தில் பிரம்மபின்னமான எந்தபதார்த்தமுமில்லை என்று சொல்வது பரஸ்பரம் விருத்தமானவார்த்தையல்லவா?

ஜ. சா:— अनादिः नानन्तः அநாதிபதார்த்தங்கள் இருந்தனவாயினும் அவை நாசமடையாதிருக்கும் பதார்த்தங்களன்று.

ஸ்ரீஸ்ரீ:— सृष्टिकालः इदानीं இந்த சுருதியில் சொல்லியிருக்கும் காலமானது சிருஷ்டிகாலமானது. பின்னுடி இந்த பதார்த்தங்கள் நாசமடைபட்டும். அடையாதிருக்கட்டும். அதன விசாரத்தை பின்பு சாவகாசமாய்ச் செய்வோம். சிருஷ்டிகாலத்தில் அநேகபதார்த்தங்களிருந்தன, சிருஷ்டிகாலத்தில் ஒருபதார்த்தமுமில்லை என்று சொல்வது வ்யாஹதமான உக்தியல்லவோ?

ஜ. சா:— प्रसक्तस्य प्रतिषेधः । ज्ञात्वा .................. मुच्यते; भूयश्चान्ते विश्वमायानिवृत्तिः; இத்யாதிசுருதிகளால் அநாதிபதார்த்தங்களும் நாசமடையும். இவையெல்லாம் ஞானத்தால் த்வம்ஸத்தை அடையும்.

ஸ்ரீஸ்ரீ:— அது வேறு விசாரம். பின்னுடி ஞானம் உதித்தபொழுது இவைகளெல்லாம்போகட்டும். சிருஷ்டிகாலத்தில் இவைகள் இருந்தனவோ இல்லையோ?

ஜ. சா:— இவை இருந்தன. இவைகள் அநாதிகள்தான்.

ஸ்ரீஸ்ரீ:— அப்படியானால் एकमेव என்ற சுருதிக்கு த்விதீயவஸ்து சூன்யமென்று அர்த்தமோ அல்லது த்விதீயவஸ்து நாசமடைகிறது என்று அர்த்தமோ?

ஜ. சா:— द्वितीयवस्तुराहित्यं द्वितीयात्यन्ताभाव एवार्थः (த்விதீயவஸ்துக்கள் அத்யந்தமாய் இருப்பதில்லையென்றுதான் அர்த்தம்.)

ஸ்ரீஸ்ரீ:— த்விதீயபதார்த்தங்களின் அத்யந்தமான அபாவத்தை ஒப்புக்கொண்டு அநாதிபதார்த்தங்கள் இருந்ததென்று எப்படி ஒப்புக்கொள்கிறீர்?

ஜ.சா:- तत्वमस्यादिवाक्योत्थसम्यग्धीजन्ममात्रतः ।
अविद्या सह कार्येण नासीदस्ति भविष्यति ॥

என்ற சுலோகத்தில் சொன்னபடி பிரம்மத்தின் அதிரிக்தமாக வேறு எந்த பதார்த்தமும் முக்காலத்திலும் இல்லவேஇல்லை. ஆகையால் பிரம்மாதிரிக்தமான ஸர்வத்துக்கும் மித்யாத்வமானது சித்தித்தது என்பதே நம்முடைய சித்தாந்தமானது.

ஸ்ரீஸ்ரீ:- பிரம்மாதிரிக்தமாக முக்காலங்களிலும் எந்தபதார்த்தமும் இருப்பதில்லை என்று சொல்லி பிரம்மாதிரிக்தமாக சிருஷ்டி காலத்தில் பதார்த்தங்கள் இருப்பதாய் எப்படி ஒப்புக்கொள்ளுகிறீர்கள் ?

சிவராமசாஸ்திரிகள்:— सद्व्यतिरेकेण न सन्ति सद्रूपेण सन्ति. என்ருல் (அநாதிபதார்த்தங்களெல்லாம் பிரம்மரூபமாகவே இருந்தன. பிரம்மபின்னமாக இல்லை)

ஜ. சா:— ஆம். வியாவஹாரிகரூபமாக இருந்தன.

ஸ்ரீஸ்ரீ:— அப்படியாளுல் இருந்திருக்கவில்லை என்று அர்த்தம். அநாதிபதார்த்தங்கள் ஒன்றுமில்லை என்ருகும்.

ஜ. சா:— பிரம்மாதிரிக்தமான ஸர்வமும் மித்யை என்பது நம்முடைய சித்தாந்தம். சிருஷ்டிகாலத்தில் பிரம்மம் இருந்தது. இதரமானது எல்லாம் மித்யாவே. அநாதிபதார்த்தங்கள் இருந்திருக்கவில்லை என்று நாம் சொல்லவில்லை.

ஸ்ரீஸ்ரீ:— மித்யை என்ருல் என்னவோ ?

ஜ. சா:— அது என்னவாளுலும் சரி. அந்த விசாரம் வேறு.

ஸ்ரீஸ்ரீ:- அது தற்போது பிரஸக்தமாயிருக்கிறது. त्रैकालिकनिषेधप्रतियोगित्वरूपं தான் मिथ्यात्व மானது. என்ருல் மூன்றுகாலத்திலும் இல்லை என்ற ஞானத்திற்குவிஷயமாகிறதுமித்யைஎன்பது. பிரம்மபின்னமானதெல்லாம் மூன்று காலத்திலுமில்லை என்ருல் அநாதி என்பது எப்படிஎன்ற சங்கடம் எப்போதுமுண்டு.

ஜ. சா:- மித்யாத்வம் பிரம்மரூபம். மித்யாத்வமானது பிரம்மஸ்வரூபமானது.

ஸ்ரீஸ்ரீ:— அது எப்படி கூடும். பிரம்மமோ நிருபாதிகஸ்வரூபன். மித்யாபதார்த்தம் ஸோபாதிகஸ்வரூபமுள்ளது. ஸோபாதிகமான மித்யா ஜகத், நிருபாதிகமான பிரம்மனுகமாட்டாது.

ஐ. சா:— ஆகும். மித்யை என்பது அத்யந்த அபாவரூபமானது. பிரபஞ்சாபாவமானது அதிகரணஸ்வரூபம்தான். ஏனெனில் அத்யந்தாபாவமானது அதிகரணஸ்வரூபமென்று நியாயமிருக்கிறது. அதிகரணமானது பிரம்மம். ஆகையால் மித்யாத்வமானது பிரம்மரூபமென்று நான் சொன்னேன்.

ஸ்ரீஸ்ரீ:— அதுவும் ஏற்படுவதில்லை. அபாவமானது (ப்ரதியோகிப்ரதீதிஸாபேக்ஷையாயிருப்பதன் நிமித்தம்) ஸோபாதிகமானது. பிரம்மன் நிருபாதிகன். ஆகையால் பிரபஞ்சாபாவமானது பிரம்மரூபமாக இருக்காது.

ஐ. சா:— உபலக்ஷித:.

ஸ்ரீஸ்ரீ:— உபலக்ஷிதமானாலும் ஞானஞாப்யமாக ஆகவேண்டும். மேலும் மித்யாத்வமானது பிரம்மரூபமாகில் மற்றொரு பாதகமிருக்கிறது. विमतं मिथ्या दृश्यत्वात् என்ற உங்களுடைய அனுமானத்தின் ப்ரதிக்ஞாவாக்யத்தில் மித்யா என்பதற்கு பிரம்மவத் பிரம்மவிசிஷ்டமென்று அர்த்தமாகும் (எப்படிஎன்றால் मिथ्या = मिथ्यात्ववत् ; मिथ्यात्वं = ब्रह्म ஆகையால் मिथ्या = ब्रह्मवत् ) இவ்வாருகில் विमतं ब्रह्मवत् दृश्यत्वात् என்ற அனுமானத்தால் ஜகத்துக்கு நிஷேதமானது ஸித்திக்கவில்லை. மேலும் த்ருச்யத்வஹேதுவானது ப்ரம்மவத்வத்தை எப்படி சாதிக்கும்.

ஐ. சா:— மித்யாத்வமானது பிரம்மரூபமே. ஆனால் தாதாத்ம்யசம்மந்தத்தால் பிரபஞ்சமானது பிரம்மதாதாத்யமுள்ளதென்ற அபிப்பிராயம்.

ஸ்ரீஸ்ரீ:— அப்படியானால் பிரம்மத்திற்கு பிரபஞ்சரூபத்வம் வந்துசேர்ந்தது. நீலோ கட: முதலான ஸ்தலங்களில் எப்படியோ அப்படியே பிரம்மன் ஜகத்பின்னன் என்ற அர்த்தமாயிற்று. इदं सदेवासीत् என்று சுருதியிலும் ஸாமானாதிகரண்யமிருப்பதால் ஜகத் ஸத்ரூபபிரம்மாபின்னயாஸீத் என்றால் ஜகத் பிரம்மரூபமா

யிருந்தது என்று ஏற்பட்டது. இதனல் உமக்கு இஷ்டமான ஜகத்தின் நிஷேதமானது ஸித்திக்கவே இல்லை.

ஐ. சா:— जगत् तादात्म्येन ब्रह्मवत् என்றால் அத்யந்த அபின்னமென்று சொல்லக்கூடாது. தாதாத்மயத்தின்சம்மந்தமிருக்குமிடமெல்லாம் பேதாபேதத்தைச் சொல்லலாம்.

ஸ்ரீஸ்ரீ:— நல்லது. ஜகத் பிரம்மத்தினின்றும் பின்னுபின்னமென்று ஏற்பட்டது. सदेवसोम्येदमग्र आसीत् என்ற சுருதிக்கு ஜகத் பிரம்மனிடமிருந்து பின்னுபின்னமென்று அர்த்தமாகுமே தவிர்த்து ஜகத்துக்கு நிஷேதரூபமான மித்யாத்வமானது சித்திக்கவில்லை. ஜகந்நிஷேதமானது இங்கு சொல்லப்படவே இல்லை. இந்த சுருதியால் உங்கள் வாக்யார்த்தரீதிப்படி ஜகத்து பிரம்ம இவைகளுக்கு பேதாபேதம் உண்டாயிற்றே ஒழிய இது ஜகந்நிஷேதத்திற்கு பிரமாணமாகவே இல்லை. அத்வைதத்திற்கும் சாதகமாக இல்லை.

ஐ. சா:— उत्तरवाक्ये निषिध्यते । प्राप्तस्य प्रतिषेधः । (உத்தரவாக்யத்தில் நிஷேதமானது செய்யப்படும். நிஷேதம் செய்யவேண்டுமானல் முதலில் ப்ராப்தி இருக்கவேண்டுமல்லவோ?) सदेव सोम्येदमग्र आसीत् என்பதில் ஜகத்துக்கும் பிரம்மனுக்கும் பேதாபேதம் ப்ராப்தமாயிற்று. ஏகமேவாத்விதீயம் என்றதில் பேதாபேதமானது நிஷேதம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீஸ்ரீ:— இதனல் மூன்று தோஷங்கள் நூதனமாய் உண்டாகின்றன. (1) स्वयमेव अनूद्य स्वेनैव निषेधः न लोकसिद्धः தானே பிரமத்தை உண்டுபண்ணி தானே நிராகரணம் செய்வது லோகத்தில் காணப்படுவதில்லை. வேறொருவனுக்கு பிரமமானது காரணாந்தரத்தால் ப்ராப்தமானல் நாம் அதை நிராகரிக்கலாம். (2) एकमेवाद्वितीयं என்பதில் நிஷேதவாசகமான ஒரு பதமுமில்லை. நிஷேதசின்ஹங்களும் தோன்றுவதில்லை. सदेवसोम्येदमग्रआसीत् என்றதில் இது அனுவாதமென்று காட்டும் யாதொரு பதமுமில்லை. एकमेव முதலியவைகளில் நிஷேதம் செய்யப்படும் பதமுமில்லை. தவிரவும், (3) एक என்ற பதத்திற்கு அஸஹாயம் முக்யம் முதலான அர்த்தங்களுமுண்டு. இப்படியிருக்க இந்த இடத்தில்

ஜகத்தின் நிராகரணம் செய்யப்பட்டிருப்பதாய் எப்படி சித்திக்கும். மேலும் அனுவாதம் செய்து நிஷேதம் பண்ணும் சுருதியும் இதற்கு பின்னடியேயிருக்கிறது. அதன் ரீதியைப்பாருங்கள்.

"तद्धैकआहुरसदेवेदमग्रआसीत् एकमेवाद्वितीयं तस्मादसतः सज्जायत। कुतस्तु खलु सोम्यैवंस्यादितिहोवाच कथमसतः सज्जायेतेति सत्वेन सोम्येदमग्रआसीत् एकमेवाद्वितीयम्।"

என்ற சுருதியில் அஸன்மதத்தை அனுவாதம் செய்து நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. அஸத் முதலில் இருந்ததென்று சிலர் சொல்லுகின்றனர். அது எப்படி கூடும். அஸத்திலிருந்து பாவபதார்த்தங்கள் உண்டாவதெப்படி? என்பது சுருதியின் அர்த்தம். இந்த ரீதிப்படி அனுவாதபோதகமான பதங்களாலேயே அப்ராமாணிக மதத்தை அனுவாதம் செய்து பிறகு சுருதியானது அதை நிஷேதித்திருக்கிறது. பிறகு ஸன்மதத்தை ஸ்தாபித்திருக்கிறது. பிரகிருதத்தில் பிரபஞ்சமானது பிரம்மணிடமிருந்து பின்னபின்னமென்று அனுவாதம் செய்து பிறகு அவைகளை நிஷேதிக்கிறது என்று சொல்வதற்கு சாதகமொன்றுமில்லை.

ஜ. சா:— தானே அனுவாதம் செய்து தானே நிஷேதிக்கிறதில்லை என்று சொல்வது பொய். நாமே பிராந்தர்களாகி நாமே விளக்கைக்கொண்டு பார்த்து ப்ராந்தியை நிவிர்த்தியை அடைவதுண்டு. (2) அஸஹாயம் முக்யம் முதலிய அர்த்தங்கள் இங்கு அஸங்கதமானவைகள். (3) நிராகரணம் செய்யும் ரீதியோ நானாவகையானது. तद्धैकआहुः என்பதில் பௌத்தவாதம் நிராகரணம் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீஸ்ரீ:— அப்படியாகாது. सदेवसोम्य என்பதில் அனுவாதம் செய்யப்பட்டிருக்கிறது என்று போதிப்பதாயுள்ள इति முதலிய எந்த பதமும் அங்கில்லை. அதிருக்கட்டும்; இந்த வார்த்தை அனுவாதரூபமென்று ஒப்புக்கொண்டால் स्वयं विधाय என்றால் தானே சொல்லி நிஷேதித்ததா அல்லது सिद्धस्य निषेधोवा என்றால் பிரமாணாந்தரத்தால் சித்தமான ஜகத்பேதாபேதத்தை பிறகு நிஷேதிக்கிறதா?

சிவராமசாஸ்திரிகள்:— सिद्धस्यैव சித்தமானதற்கே நிஷேதமானது.

ஐ. சா:— அதுதான் சரி.

ஸ்ரீஸ்ரீ:— எந்த பிரமாணத்தால் பிரம்மனுக்கு ஜகத்தாதாத்மியம் சித்திக்கிறது.

ஐ. சா:— प्रत्यक्षादिना ப்ரத்யக்ஷாதிகளால் ஸங்கட:, ஸங்பட: இது முதலிய ப்ரதீதிகளில் பிரம்மகதமான ஸத்வம் கடாதிகளில் ப்ரதீதமாகிறது. ஆக பிரம்மஜகத்தாதாத்ம்யம் சித்திக்கிறது. ஸங்கட: முதலான ப்ரத்யக்ஷத்தால் சித்தமாயிருக்கிறது. இப்பேற்பட்ட பிராந்தியை सदेव सोम्य என்பதில் அனுவாதம் செய்து एकमेव என்பதில் நிஷேதம் செய்திருக்கிறது.

ஸ்ரீஸ்ரீ:— ஸங்கட: ஸங்பட:, என்பதில் பாதகமென்ன? பிரம்மகதமான ஸத்வம் கடத்தில் தோன்றுவதே இல்லை. கடகதமான ஸத்வம் தான் கடத்தில் தோன்றுகிறது असन् नरशृङ्गं, असन् शशविषाणं என்பதில் பிரம்மகதமான அஸத்வம் தோன்றுமா என்ன? रक्तं घट: என்பதில் பிரம்மகதமான ரக்தவர்ணமானது தோன்றுமா என்ன? ஸங்கட: என்ற ப்ரதீதியானது ஸத்பிரம்ம என்பதில் எப்படியோ அப்படி प्रमात्मகமாகவே (யதார்த்தமாகவே) இருக்கும். அது பிரமமன்று.

ஐ. சா:— ஸன்கட: என்னும் ப்ரதீதியானது चन्द्रप्रादेशप्रत्यक्षवत् சந்திரன் சிறியவனென்ற ப்ரத்யக்ஷம்போல், ஏன் பிரமையாக இருக்கலாகாது.

ஸ்ரீஸ்ரீ:— तस्य भ्रमत्वं कथं சந்திரப்ராதேசப்ரத்யக்ஷத்திற்கு புராணம் அல்லது ஜ்யோதிஸ்சாஸ்திர வாக்யங்களால் பாதகமிருப்பதால் அது பிரமமென்று நிச்சயிக்கப்படுகிறது. பிருகிருதத்தில் ஸங்கட: என்ற ப்ரீதீதியானது ப்ரமமென்று எப்படி சித்திக்கிறது? பாதம் ஏற்பட்டபிறகுதானே! பாதகம் ஒன்றும் இல்லையல்லவா? सन्घट: என்னும் ப்ரத்யயத்தில் பிரம்மகதமான ஸத்வமே கடத்தில் ஆரோபிக்கப்படுகிறது. ஆகையால் அது பிரமமென்று சித்திக்கவேண்டுமானால் सदेव सोम्य என்ற சுருதியில் அத்வைதம் உமக்கு சித்தித்து பிரம்மமான பதார்த்தங்களில் ஸத்வமில்லை என்

று சித்தமாக இருக்கவேண்டும். சுருத்யர்த்தமே இன்னும் நிர்ணயமாகவில்லை. ஆகையால் அன்யோன்ச்ரயமென்ற தோஷம் கட்டாயம் நேரிடுகிறது. எப்படியெனில்; திரவியமிருந்தால் வக்கிலாகலாம். வக்கிலானால் திரவியம் ஸம்பாதிக்கலாம். இதில் எப்படி அன்யோன்யாச்ரயமோ அப்படியே सदेव सोम्य என்பது அனுவாதரூபம், एकमेव अद्वितीयं என்பது நிஷேதரூபம் என்று ஒப்புக்கொண்டு விட்டு ஸர்வஜகத்தும் மித்யா, அத்வைதம் ஸத்யமென்றே இந்த சுருதியின் அர்த்தம் என்று ஏற்றுக்கொண்டால் ஸங்கட: முதலான ப்ரத்யயங்களில் பிரம்மத்தின் ஸத்வம் தோன்றுகிறது. ஆகையால் அது பிரமம். வேறு உபாயமில்லை. ஸங்கட: என்பது ஜகத்தாதாத்ம்யத்தைக் காட்டும் பிரமம் என்று முன்னடியே நாம் ஒப்புக்கொண்டால் सदेवसोम्येदमग्रआसीत् என்பதில் பிரமாணாந்தரத்தால் சித்தமாகுவதற்காகவென அனுவாதமும் செய்யப்பட்டு एकमेवाद्वितीयं என்பதில் நிஷேதம் செய்யப்பட்டிருக்கிறதென்று சுருதியையும் யோஜனம் செய்யலாம். சுருத்யர்த்தம் அத்வைதமென்று ஒப்புக்கொண்டால் ஸங்கட: என்ற ப்ரத்யயம் பிரமமென்று சித்தமாகும். ஸங்கட: என்ற பிரத்யயம் பிரமம் என்று நிச்சயமானால் சுருத்யர்த்தம் அத்வைதமென்று நிச்சிதமாகிறது. இல்லாவிடில் இந்த சுருதியானது ஜகத் மித்யாத்வத்தை ஸ்வத: சாதிக்காது. ஆகையால் அன்யோன்யாச்ரயத்திலிருந்து தப்புவதற்கு முடிவதில்லை.

தவிர்த்து நாங்களிருவரும் ப்ராமாண்யத்திற்கு ஸ்வதஸ்தவவாதிகள். நாங்கள் பௌத்தர்களன்று. எங்களிருவர்களின் மதங்களிலும் எல்லாஞானமும் பிரமாணமே. பாதகம் வந்தால்தான் அது அப்பிரமாணமாகும். ஸங்கட: என்ற ப்ரதீதிக்கு பாதகமென்னமோ இல்லை. ஆகையால் இது யதார்த்தமே ஆகவே பிரம்மஜகத்தாதாத்மயம் இந்த ப்ரதீதியால் சித்தமாவதில்லையாதலால் सदेव सोम्य என்ற சுருதிவாக்யம் அனுவாதரூபமென்று நீங்கள் சொல்லலாகாது. அனுவாதரூபமென்று சொன்னால் அன்யோன்யாச்ரயம் தப்புவதாய் இல்லை.

ஜ. சா:— அன்யோன்யாச்ரயம் வரட்டும் சக்ராச்ரயம் வரட்டும். அன்யோன்யாச்ரயம் எல்லாவிடத்திலும் தோஷமாஎன்ன?

எனக்கு அதாதோபிரம்மஜிக்ஞாஸா சூத்ரார்த்தத்தை விசாரிக்க வேண்டுமென்று அபிலாஷை இருக்கிறது.

ஸ்ரீஸ்ரீ:— பிருகருத்தில் சுருத்யர்த்தத்திற்கு ஸங்கதமான விசாரமானது நடக்கட்டும். வேறு விசாரம் செய்யவேண்டியிருந்தால் அதை தனிமையாய் வைத்துக்கொண்டு வாக்யார்த்தத்தை நடத்தலாம்.

சிவ. சா:- ஸத்யம் க்ஞானமநந்தம்பிரம்மம்முதலான சுருதிகளில் பிரம்மனே ஸத்யம் கடாதிகளில் ஸத்வமில்லை என்று ஸித்தமாகிறது.

ஸ்ரீஸ்ரீ:— அப்படி சொல்லுங்கள். ப்ரத்யக்ஷாதிகளால் ஜகத்ப்ரம்மதாதாத்மயம் சித்தமாவதில்லை. ப்ரத்யக்ஷத்தால் சித்தமான ஜகத்தாதாத்மயத்தை ஸதேவஸோம்யஎன்பதில் அனுவாதம்செய்திருப்பதாய் சொல்லக்கூடாது. இந்த சுருதியானது அத்வைதத்தையும் ஜகந்மிதயாத்வத்தையும் சாதிக்காது. வேறு सत्यं ज्ञानं, नेह नानास्ति முதலான சுருதிகளை விசாரிப்போம்.

ஜ. சா:— இந்த சுருதியாலேயே அத்வைதமானது சித்திக்கிறது.

ஸ்ரீஸ்ரீ:— ஆகமாட்டாது. सदेव सोम्य என்பது அனுவாதமென்று சொல்லவேண்டுமானால் सन्घटः முதலான ப்ரத்யயங்கள் ஆரோபிதமென்று முதலில் ஒப்புக்கொள்ளவேண்டும். सन्घटः முதலான ப்ரதீதிகள் பிரமமென்று ஒப்புக்கொண்டால் सदेव सोम्य என்பது அனுவாதரூபமென்று ஏற்படும். அன்யோன்யாச்யரயம் விலகவே இல்லை.

ஜ. சா— அன்யோன்யாச்ரயம் இல்லவேஇல்லை. கடாதிகளில் ஸத்வம் எப்படி வந்தது. सत्यस्य सत्यं என்பதற்கு என்னஅர்த்தம்

ஸ்ரீஸ்ரீ:— चक्षुषश्चक्षुः என்பதில் ஸ்ரீசங்கராசாரியாள் चक्षुः = दर्शनशक्तिप्रदः என்று அர்த்தம் செய்திருக்கிறார். ஆகவே चक्षुषः चक्षुः என்றால் சக்ஷுஸ்ஸுக்கு தர்சனசக்திப்ரதனென்று அர்த்

தம். श्रोत्रस्य श्रोत्रं என்றால் ச்ரோத்ரத்துக்கு சிரவணசக்திப்ரதனென்று அர்த்தம். प्राणस्य प्राणं என்றால் ப்ராணனுக்கு சேஷ்டா சக்திப்ரதன். सत्यस्य सत्यं என்றால் ஸத்யமான ஜகத்துக்கு ஸத்யத்வத்தைத் தருபவன். அதாவது; ஸத்யஜகத்துக்கு ஸத்வநியாமகன். இவ்விடத்தில் என்னகஷ்டம் நேர்ந்தது. ஜகத்மித்யை என்று எப்படி உண்டாகும்? விச்வம் ஸத்யம் என்ற சுருதியால் ஸத்ய பதார்த்தமானது ப்ரமாணங்களால் ப்ரமிதமாயிருக்கிறதல்லவா! இந்த சுருதியின் வியாக்யானகாலத்தில் வித்யாரண்யரும் கூட सत्यं = आरोपितं न என்று அர்த்தம் செய்திருக்கிறார்.

இத்துடன் இன்று சபை கலைந்தது.

---

# ஸ்ரீவேதாந்தவிமர்சினீ ஸபை,
# 4-வது நாள் நடவடிக்கை.

## 7—3—1931 சனிவாரம்

ஜகதீசுவர சாஸ்திரி:—एकमेवाद्वितीयं என்கிறதில் एक என்னும் சப்தத்தின் அர்த்தத்தை இன்று விசாரம் செய்வோம். ஏகசப்தத்திற்கு அஸகாயமென்றும் முக்யமென்றும் நானா அர்த்தங்களிருப்பதாய்ச் சொன்னீர்களே, இதில் பாதகமில்லையோ?

ஸ்ரீ ஸ்ரீ: பாதகமென்ன? விசாரம் செய்யுங்கள். ஏக சப்தத்திற்கு அஸஹாயம் என்று அர்த்தம் ஏன் ஆகக்கூடாது?

ஜ. சா. ஏகசப்தத்திற்கு அஸஹாயம் என்ற அர்த்தம் எங்கே இருக்கிறது?

ஸ்ரீ ஸ்ரீ: एकस्सुपर्णः என்ற சுருதியில் ஸ்ரீ வித்யாரண்யர் அர்த்தம் செய்திருக்கிறார். आद्यन्तवदेकस्मिन् என்னும் சூத்ரத்திலுள்ள ஏகசப்தத்திற்கும் அஸஹாயமென்றே அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னமும் அனேக ப்ரயோகங்கள் இருக்கின்றன.

ஜ. சா. அஸாஹாயமென்றால் என்ன?

ஸ்ரீ ஸ்ரீ: ஸிருஷ்டி காலத்தில் பிரம்மன் ஸஹாயாஹிதாய் சிருஷ்டித்தார். அவருக்கு ஸகாயபூதமான வஸ்து ஒன்றுமில்லை என்று அர்த்தம்.

ஜ. சா. நமக்கு இவ்வளவுதான் போதும். ஸஹாயம் எது? ஜடமோ ஜீவனோ ஆகவேண்டும். ஸஹாயபூதமானது யாதொன்றுமில்லை என்றால் ஜடமோ, ஜீவனோ ஒன்றுமில்லை என்று அர்த்தமாயிற்று. பிரம்மனொருவரே இருந்தாரென்று சித்தித்தது.

ஸ்ரீ ஸ்ரீ:— இந்த சபையில் மூர்க்கர்களில்லையென்றால் மனுஷ்யர்களில்லையென்று சித்தமாவதில்லை. தனவான்களில்லையென்றால் மனுஷ்யர்களில்லையென்று அர்த்தமாவதில்லை. சிருஷ்டி செய்யும் பிரம்மனுக்கு ஸ்வ காரியத்திற்கு பிரயோஜனமாகவுள்ள காரியங்களைச் செய்பவர் வேறு ஒருவருமில்லை என்று சொன்னால் இதர ஜீவாதிகளில்லையென்று எப்படி அர்த்தமாகும்.

ஜ. சா. இது அசம்பாவிதம், ஏனெனில் (1)ஸஹாயபூதமான ஒன்றுமில்லையென்றால் ஒரு வஸ்துவுமில்லையென்ற அர்த்தமே யொழிய வஸ்து இருந்து ஸஹாயம் செய்வதில்லையென்று சொல்வது சப்தார்த்தமன்று. (2)தவிரவும் இது அகண்டபிரம்மத்தைப் போதிக்கும் பிரகாணம். இங்கு த்விதீய வஸ்துவை சுருதிசொல்ல மாட்டாது.

ஸ்ரீ ஸ்ரீ: இது எப்படியாகும், அஸஹாய: என்றால் ஸஹாயாபாவவான் என்று அர்த்தம். என்றால் सहायत्वविशिष्ट अभावाश्रय: என்று அர்த்தமாயிற்று. இதனால் இதராள் யாருமில்லையென்று சித்திக்கவே மாட்டாது. இருக்கலாம். இல்லாமலுமிருக்கலாம். பிரம்மாதிரிக்தமாய் ஒருவருமில்லையென்று சித்திக்கிறதில்லை. தவிரவும் இது அகண்ட பிரமத்தைப் போதிக்கும் ப்ரகாணம் என்பதற்கு ஆதாரமென்ன? இதுவே இன்னமும் சித்திக்கவில்லை. ஏகமேவாத்விதீயம் என்ற வாக்கியமும் எந்த ரீதியில் அகண்ட பிரம்மபோதகமான வாக்யம் என்பதைக் காட்டுங்கள்.

ஜ. சா. (1) सत्यं ज्ञानमनन्तं ब्रह्म என்னும் சுருதி உபக்ரமத்தாலும், सयश्चायं पुरुषेयश्चासावादित्ये सएकः என்றஉபஸம்ஹார வாக்யத்தாலும் அகண்டார்த்த போதகமென்பது நிச்சயமாகிறது. ஆகையால் ஸர்வவேதத்திற்கும் அகண்ட பிரம்மத்தில் தாத்பர்யமிருப்பதாய் சித்தமாய்விட்டது. அப்படியே கதிஸாமான்யாத் என்னும் சூத்ரத்தில் சொன்ன ரீதிப்படி ஸகல வேதங்களுக்கும் ஒரே தாத்பர்யமிருக்கவேண்டுமாதலால் சாந்தோக்கிய சுருதியிலும்கூட அகண்ட பிரம்மம்தான் பிரதிபாதிக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கும் அத்யாரோப அபவாதநியாயத்தால் சாஸ்திரார்த்தமானது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் ஏக விக்ஞானேன ஸர்வ விக்ஞனம் பவதி என்று உபக்ரமத்தில் ப்ரதிக்ஞைசெய்து, ஸதேவஸோம்ய என்ற சுருதியில் நிஷேதார்த்தமாய் பிரபஞ்சத்தின் பேதாபேதத்தை அத்யாரோபம்செய்து, ஏகமேவ என்பதில் நிஷேதம் செய்து, அந்த்யத்தில் தத்வமஸியென்ற மகாவாக்யத்தில் அகண்டபிரம்மம் போதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறானவேததாத்பரியத்தை அனுஸந்தானம்செய்துகொண்டு ஏகமென்ற பதத்தை வியாக்கியானம் செய்தால் பிரம்மன் அஸஹாயனென்று அர்த்தம் செய்தாலும், பிரம்மாதிரிக்தமாய் ஒரு

வருமில்லையென்றே அர்த்தமாகும். (2) தவிரவும் அஸஹாய னென்றால் ஸஹாயபூதர்களில்லை. என்றால் ஒருவருமில்லையென்றே அர்த்தம்.

ஸ்ரீ ஸ்ரீ:-அப்படியானால் இந்த ப்ரகாரணத்தின் அர்த்தத்தை விசாரிப்போம்.

ஜ. சா:— ப்ரகாரணார்த்தத்தை பிறகு விசாரிப்போம். இப்பொழுது ஏக சப்தத்தின் அர்த்தமே விசாரிக்கப்படட்டும். பிரம்மன் அஸஹாயனென்றால் மற்றொரு பதார்த்தமிருப்பதாய் எப்படி அர்த்தமாகும்?

ஸ்ரீ ஸ்ரீ:-அஸஹாயமென்று சொல்லியிருப்பதிலிருந்து மற்றொரு பதார்த்தமில்லையென்று எப்படி சித்திக்கும். அஸஹாய சூரனென்றால் இதர்களில்லையென்று அர்த்தமாகுமோ? நீங்கள் அஸஹாய வாதிகள் என்றால் இந்த சபையோரில்லையென்று அர்த்தமாகுமோ? இதற்குமேல் விசிஷ்ட நிஷேதம் செய்யப்பட்டால் விசேஷண நிஷேதத்திலேயே பர்யவஸானமாகும். தண்டீ (தண்டமுள்ளவன்) இல்லையென்றால் மனுஷ்யர்களிருந்தனர். தண்டம்தரித்தவனில்லை என்றுதான் அர்த்தம்.

குருசாமிசர்மா:—இங்கு சிருஷ்டிகாலத்தில் வேறு ஏதாவது பதார்த்தமிருப்பதாய் தெரியவந்தால் பாதகபரிஹாரார்த்தமாய் பிரம்மன் அஸஹாயமென்று சொன்னதற்கு இதர்களிருந்தனர். அவர்கள் ஸஹாயம் செய்யவில்லை என்று சொல்லலாம். பிரம்ம பின்னாக யாராவது இருப்பதாய் இந்த சுருதியில் சொல்லப்பட்டிருக்கிறதா என்ன!

ஜ. சா:-ஆம் அதுதான் விசாரிக்கப்படவேண்டும். தண்டீ நாஸ்தி என்று சொன்னபொழுது புருஷன் இல்லவே இல்லையென்று சொன்னால் ப்ரத்யக்ஷ பாதகம் ஏற்படுவதன் நிமித்தம் தண்டம் இல்லை, புருஷன் இருந்தானென்று அர்த்தம் சொல்லலாம். இவ்விடத்தில் அப்பேர்ப்பட்ட பாதகமென்ன?

ஸ்ரீ ஸ்ரீ:-எங்கள் அபிப்பிராயம் யாதெனில் சிருஷ்டி காலத்தில் பிரம்மனுக்கு ஸகாயத்வ விசிஷ்டவஸ்து இருந்திருக்கவில்லை என்று சொன்னால் ஸஹாயத்வம் இருக்கவில்லைஎன்பதே சித்தித்ததான அர்த்தம். சேதன ஜடாதிகள் இல்லை என்று சொன்னதாய் ஆகாது. சேதனாதிகள் இருப்பதாய் இதனால் சித்தமாகாமல்

போனால் போகட்டும். இதா வஸ்து ஒன்றுமிருக்கவில்லையென்று சொல்லமுடிவதில்லை. அவ்வளவுதான் நமக்கு நிர்ப்பந்தம். மேலும் அனேக பதார்த்தங்களிருப்பதாய் சுருதியில்சொல்லப்பட்டிருக்கிறது.

जीवईशो विशुद्धाचिद्भेदस्तस्यास्तयोर्द्वयोः ।
अविद्यातच्चितोर्योगः षडस्माकं ह्यनादयः ॥

என்ற சுலோகத்தில் சொன்ன ரீதிப்படி அத்வைதிகளே ஆறு பதார்த்தங்களை சிருஷ்டிகாலத்திலிருந்ததாய் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்த சுருதியிலேயே அக்ரே என்ற பதத்தால் காலமிருப்பதாய் சித்தமாகிறது. तमासीत् என்ற சுருதியாலும் मृत्युनैवेदमावृतमासीत् என்ற சுருதியாலும் தமஸ் முதலியவைகளிருந்தனவென்றும் சித்தமாகிறது. नान्यत्किंचनमिषत् என்றசுருதியிலும் मिषत् என்றால் வ்யாபார விசிஷ்டமான ஒரு பதார்த்தமுமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி ஒரு வஸ்துவுமில்லை என்று சொல்லப்படவில்லை.

தவிரவும் தண்டீ நாஸ்தி என்பதிலும் சிகீ த்வஸ்த: என்பதிலும் இது முதலிய அநேகஸ்தலங்களிலும் விசிஷ்டநிஷேதம் செய்யப்பட்டிருக்கும்பொழுது விஷேசண நிஷேதத்திலேயே முடிவாகிறது. ஆகையால் ஸஹாயத்வ விசிஷ்டமான வஸ்து இருக்கவில்லை என்றால் பிரம்மனுக்கு யாராலும் ஸாஹாய்யமானது (ஸஹாயத்தன்மை) இருக்கவில்லையென்று ஏற்படுகிறது.

ஜ சா:-அது நையாயிகளின் அபத்தமான நியமம் விசிஷ்டநிஷேதம் செய்தால் விசிஷ்டமுமில்லை என்ற அர்த்தம். விசேஷண மாத்திரமில்லையென்று சொல்லவே கூடாது.

மதராஸ் அட்வோகேட் சேஷகிரி சாஸ்திரிகள்:-லோகசித்த நியாயங்களை விட்டுவிடுவதோ? நைய்யாயிகர்களின் எல்லா நியாயமும் தப்புதானோ?

குருசாமி சர்மா:-நாளையதினம் இந்த நியாயத்தின் விஷயமாக விசாரம் நடக்கட்டும். ஸஹாயத்வ விசிஷ்டமானது இருக்கவில்லை என்றால் விசேஷணம் மட்டில் இல்லையா? ஒன்றுமே இல்லையா? என்ற விஷயத்தில் வாதத்தை நடத்தலாம்.

---

# ஸ்ரீ வேதாந்தவிமர்சினீ ஸபை.
# 5-வது நாள் நடவடிக்கை.

8—3—1931 பானுவாரம்.

ஜ. சா:- एकमेवाद्वितीय என்கிற ச்ருதியில் एकम् என்னும் பதத்திற்கு असहायः அதாவது सहायत्वविशिष्टशून्यः என்று அர்த்தம் சொன்னீர்கள். அப்படியென்றால் கேவலம் என்ற அர்த்தமே வந்துசேரும். பிரம்மனைத் தவிர பதார்த்தங்கள் ஒன்றுமிருக்கவில்லை என்கிற அர்த்தம் செய்யவேண்டும். இதர பதார்த்தங்கள் இருந்தபோதிலும் அவைகள் சகாயம்செய்யவில்லை என்று நீங்கள் அர்த்தம் செய்வீர்களானால் अद्वितीय பதத்திற்கு என்ன அர்த்தம் செய்வீர்கள். அத்வீயபதத்திற்கும் அஸஹாயமென்றே அர்த்தம். அப்போது புனருக்தி தோஷம் வந்துசேரும்.

ஸ்ரீ ஸ்ரீ:-புனருக்தி தோஷத்திற்குக் காரணமொன்றுமில்லை. அத்விதீயம் என்றால் ஸ்வஸஜாதீயத்விதீயவஸ்து சூன்யம் என்று அர்த்தம் செய்யக்கூடும். இரண்டு பிரம்மன்கள் இல்லையென்று தாத்பர்யம்.

ஜ. சா:-அத்விதீய சப்தத்திற்கு விஜாதீயபேதராஹித்யமென்று நம்முடைய பாஷ்யத்தில் அர்த்தத்தை சொல்லியிருக்கக்கூடும்.

ஸ்ரீ ஸ்ரீ:-முன்பே ஏகமென்னும் பதத்திற்கு விஜாதீயபேதராஹிதமென்று அர்த்தம் நீங்களே சொன்னீர்கள். அதற்குமேல் அஸஹாயமென்னும் அர்த்தம் ஏன் ஆகக்கூடாது என்று நாம் கேட்டோம். இப்பொழுது அத்விதீயம் என்றபதத்திற்கு விஜாதீய பேதராஹிதமென்று அர்த்தம் நீங்கள் செய்வதானால் இங்கும் அதே கேள்வியைகேட்போம். அஸஹாயமென்ற அர்த்தம் ஏன் செய்யக்கூடாது.

ஜ. சா:-அத்விதீய பதத்திற்கு அஸஹாயனென்ற அர்த்தம் எங்கே இருக்கிறது?

ஸ்ரீ ஸ்ரீ:- असिद्वितीयोऽनुससार पाण्डवः என்ற வாக்கியத்தில் த்விதீய பதத்திற்கு ஸஹாயமென்ற அர்த்தம் மகாபாஷ்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அத்விதீயனென்றால் அஸகாயனென்றர்த்தமாகும். தவிரவும் அத்விதீயமென்றால்

ஸஹகாரிகாரணரஹிதம் என்று உங்கள் ஸ்ரீ சங்காசார்யாள் அர்த்தம் செய்திருக்கிறுர்.

ஜ. சா:- अर्थतः उक्तं न शब्दतः அத்விதியமென்பதற்கு முடிவான அர்த்தம் சொல்லப்பட்டது. சப்தப்பிரயோகம் செய்து சொல்லப்படவில்லை.

ஸ்ரீ ஸ்ரீ:-எப்படி வேண்டுமானுலும் சொல்லட்டும். அத்விதீயமென்பதற்கு விஜாதீய ரஹிதனென்று அர்த்தம் செய்யவேண்டுமென்று நீங்கள் சொல்லக்கூடாது. அஸஹாயனென்று அர்த்தமாகுமோ ஆகாதோ?

ஜ. சா:-அஸஹாயனென்று அர்த்தமாவதில்லை.

ஸ்ரீ ஸ்ரீ:-அத்விதீயமென்பதற்குஅஸஹாயமென்றஅர்த்தமில்லவேயில்லஎன்ருு? அந்தஅர்த்தமானுலும்பாதகமிருக்கிறதென்ருு?

ஜ. சா.-அர்த்தமுண்டு ஆனுல் அந்த அர்த்தத்தைஏற்றுக்கொள்வதில் பாதகமிருக்கிறது. ஏனென்றல், ஏகபதத்திற்கும் அஸஹாயனென்று அர்த்தம்செய்திருக்கிறீர்கள். அதனுல்பௌனருக்திதோஷம் (திருப்பித்திருப்பிச்சொல்லுதல்) வந்துசேருகிறது

ஸ்ரீ ஸ்ரீ:-ஏகபதத்திற்குஅஸஹாயனென்றுஅர்த்தம் செய்தால் அத்விதீயசப்தத்திற்கு ஸ்வஸஜாதீயமான இதரவஸ்துவால் ரகிதனுனவனென்று அர்த்தம் செய்யவேண்டும். இப்பொழுது அத்விதீயபதத்திற்கே அஸஹாயனென்று அர்த்தம் செய்வதானுல் ஏகமென்ற பதத்திற்கு ஸ்வஸஜாதீயமான இதர வஸ்துவால் ரகிதனுனவனென்று அர்த்தம் செய்யவேண்டும். புனருக்தியானது எப்படி வந்தது? இதற்குப்பின் தம ஆஸீத்முதலான சுருதிகளால் அநேக பதார்த்தங்களின் ஸத்பாவமானது ஞாதமாவதன்நிமித்தம் அத்விதீயமென்றல் விஜாதீயபேதரஹிதன் என்ற அர்த்தம் விருத்தமுமாகும்.

ஜ.சா:- அப்படியல்ல. அத்விதீயபதத்திற்கு அஸஹாயன் என்ற அர்த்தம் செய்வதில் பாதகமுமுண்டு. இந்த பிரகரணமானது நிஷ்பிரபஞ்சபிரம்மத்தைப் போதிக்கும் பிரகரணம். ஆகையால் இதர வஸ்துக்களிருப்பதாய்ச் சொல்வது அஸங்கதம்.

ஸ்ரீ ஸ்ரீ:- அப்படியானுல் அடியிற்கண்டபடி சொன்னதுபோலாயிற்று. அத்விதீயமென்னும் பதத்திற்கே அஸஹாய: என்ற அர்த்தமுண்டு. ஆயினும் பிரகரணர்த்தத்தைப் பர்யாலோசித்தால்

அந்த அர்த்தத்தை நீக்கிவிட்டு விஜாதீயபேதரஹிதமென்று அர்த்தம் செய்யவேண்டுமென்றுதங்த்ர்ம்நீ ள் கஅு சொல்கிறீர்களா?

ஜ சா:- அப்படியே.

ஸ்ரீஸ்ரீ;- இது நிஷ்பிரபஞ்சபிரம்மபிரகாணமென்று எப்படி நிர்த்தாரணம் செய்யமுடியும் ?

ஜ.சா:- உபக்ரமம் முதலிய தாத்பர்யநிர்ணயகமான லிங்கங்களால்.

ஸ்ரீஸ்ரீ.- அதை விவரித்துக் காட்டுங்கள்.

ஜ. சா:- उत तमादेशमप्राक्ष्यः येनाश्रुतं श्रुतं । என்பதுஉபக்ரம வாக்யம் तत्वमसि என்பது உபஸம்ஹாரவாக்யம். तत्वमसि என்பதின் ஒன்பது தடவை படனமானது அப்பாஸமாகும். अत्रवा ..........................न निभालयसे என்ற வாக்யம் அபூர்வதையை போதிக்கும் வாக்யம்- तस्य तावदेवचिरं–यावन्नविमोक्ष्ये अथसंपत्स्यते என்ற வாக்யம் பலத்தை போதிக்கும் வாக்யம். तत्तेजोऽसृत முதலான சிருஷ்டிவா்க்யங்கள் அர்த்தவா தவாக்யங்கள். मृत्पिण्ड–लोहमण्यादि திருஷ்டாந்தங்கள் உபபத்திரூபமாக இருக்கின்றன. இப்படி உபக்ரமாதி தாத்பர்யத்தை அறிவிக்கும் வாக்யங்களெல்லாம் இந்த சுருதியானது நிஷ்பிரபஞ்ச பிரம்மத்தையே போதிக்கிறதென்பதில் நிர்ணயகமாக இருக்கின்றன.

ஸ்ரீஸ்ரீ:- அவைகளையும் விசாரம் செய்வோம். இவைகளில் ஒன்றும் நிஷ்பிரபஞ்சபிரம்மத்தைப்போதிக்கமாட்டாது. எதையாவது ஒன்றைக் காட்டுங்கள்.

ஜ. சா:- உபக்ரமவாக்யத்தை முதலில் காட்டுகிறேன் उततमादेशमप्राक्ष्यः येनाश्रुतं श्रुतंभवति என்பது உபக்ரமவாக்யம். இது எல்லா வேதங்களையும் படித்து பண்டிதனாய் வந்த சுவேதகேதுவைக் கேட்ட பிரச்னமாகும். ஆகையால் இங்கு आदेश மென்றால் அபூர்வமான (यस्सर्वज्ञस्सर्ववित् முதலான சுருதிகளை சம்பூர்ணமாய் அப்யசித்த சுவேதகேதுவுக்கும் சற்றும்தெரியாத உபநிஷத்தால்மாத்திரம் அறியப்படுகிறவனான நிஷ்பிரபஞ்சபிரம்மமே ஆகவேண்டும். அதை அறிந்தால் சர்வவிக்ஞானம் வரும். அப்பேர்ப்பட்ட ஏகவிக்ஞானமானது ஆசாரியாளாலேயே வரும் என்று आचार्यवान्पुरूषो वेद என்னும் சுருதியில் சொல்லப்பட்டி

ருக்கிறது. ஆகவே उततमादेशमप्राक्ष्य: என்றால் அந்த உபதேசத்தை நீ கேட்டாயா என்று தந்தை பிரச்னை செய்தார். நீ கேட்டாயா என்று பிரச்னை செய்தாரேயன்றி நீ அறிந்தாயா என்று பிரச்னைசெய்யவில்லை.

மேலும் இங்கு ஆதேசமென்றால் நிஷ்பிரபஞ்சபிரம்மனென்னும் விஷயத்தில் சம்சயமே இல்லை. ஆகையால் कुतस्तुखलु...... स आदेशो भवति என்றால் ஏகவிக்ஞானத்தால் ஸர்வவிக்ஞானம் வரும்? பிரகாரமெப்படி என்று பிரச்னை செய்தாரேயன்றி क:सआदेश: அந்த பிரம்மன் யாரென்று பிரச்னை செய்யப்படவே இல்லை ஆகையால் இங்கு ஆதேசமென்றால் நிர்விகல்பபிரம்மன்.

தவிரவும் தந்தையான உத்தாலகர் यःसर्वज्ञः முதலான சுருதிகளை அப்யாஸம் செய்த சுவேதகேதுவுக்கு மறுபடியும் ஸகுணபிரம்மத்தையே போதித்தால் க்ஞாதமான அர்த்தத்தையே போதித்ததாய் ஆகி ஞாதஞாபகத்வப்ரயுக்தமாக அந்த உபதேசத்திற்கு அப்பிராமாண்யம் வந்துவிடும். अप्राप्ते हि शास्त्रमर्थवत् பிரமாணாந்தரங்களால்அக்ஞாதமான அபூர்வவிஷயத்தைப்போதித்தால்தானே சாஸ்திரமானது ஸப்ரயோஜனமாகும். ஆகையால் அபூர்வதையானது நிஷ்பிரபஞ்சமான பிரம்மோபதேசத்துக்கே இருப்பதால் ஆதேசமென்றால் நிஷ்பிரபஞ்சபிரம்மமேதவிர ஸகுண பிரம்மமல்ல. அப்படியில்லாவிடில் ஸகுணபிரம்மத்தையே தந்தை மகனுக்கு உபதேசம் செய்ததாய் சொல்வதாகில் தந்தையான உத்தாலகர் முட்டாளென்று சொல்லவேண்டிவரும். ஆகையால் உபக்ரமவாக்கியத்திலுள்ள ஆதேசமென்னும் பதத்திற்கு அன்யத்ர அப்ராப்தமாயுள்ள உபநிஷதைகஸமதிகம்யமான நிஷ்பிரபஞ்சபிரம்மனென்றே அர்த்தம். இந்த உபக்ரமத்தின் அனுகுணமாக அத்விதீயபதத்திற்கு விஜாதீயபேதரஹிதனென்றே அர்த்தம் செய்யவேண்டும்.

ஸ்ரீஸ்ரீ:- ஆதேசபதத்திற்கு நிஷ்பிரபஞ்சபிரம்மனென்றுஎந்த நிகண்டுவிலுமில்லை. आदिश्यते इत्यादेश: என்றால் உபதேசவிஷயம் என்ற அர்த்தம். உபதேசவிஷயம் எதுவும் இருக்கலாம். உபதேசவிஷயமென்று ஆதேசசப்தத்திற்கு அர்த்தமிருப்பதால் அப்ராக்ஷ்ய: என்ற பதம் ஸார்தக்யமாயிற்று. அந்த உபதேசவிஷயத்தைக்குறித்து நீ கேட்டாயா என்று அர்த்

தம். உபதேசத்தால்தானே ஞானமுண்டாகவேண்டும். உபதேசத்தின் விஷயம் ஸகுணபிரம்மமோ நிர்குணபிரம்மமோ என்பதை விசாரிப்போம். ஆனால் ஆதேசபதத்திற்கு நிர்குணபிரம்மனென்று அர்த்தமிருப்பதாய்ச் சொல்வதற்கு காரணமில்லை.

ஜ.சா:— ஆதேசபதத்திற்கு அந்த அர்த்தமில்லாமற்போனால் போகட்டும். பிரகரணத்தின் பர்யாலோசனையால் அக்ஞாதத்வாதி தர்மங்கள் ஸகுணபிரம்மத்திற்கு ஏற்படுவதில்லையாதலால் நிர்குண பிரம்மம்தான் உபதேசவிஷயமாக ஆகவேண்டும்.

ஸ்ரீ ஸ்ரீ:- அப்படிச் சொல்லுங்கள், அப்பொழுதும் பாதகமிருக்கிறது. ஸகுணபிரம்மனும்கூட வேதங்களிலும் பிரம்ம மீமாம்ஸாசாஸ்திரத்திலும் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீ சங்கராசாரியாரும்கூட அநேக பிரம்மஸூத்திரங்களின் பாதங்களும் வேதங்களும் ஸகுணபிரம்மத்தைப்ரதிபாதிக்கின்றனவென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். ஸகுணபிரம்மன் உபநிஷதைகஸமதிகம்யம் தான். யதோ வா இமானி பூதானி முதலான சுருதிகளில் அவர் ஜகஜ்ஜன்மாதிகர்த்தா என்று சொல்லப்பட்டிருப்பது சரிதானே! அப்பேர்ப்பட்ட காரணத்வாதி பல குணங்களால் விசிஷ்டனான பிரம்மனை அறியாமலிருப்பதால்தான் ஸகுணபிரம்மன் அக்ஞாதன் சாஸ்திரவிஷயன், உபதேசவிஷயன் என்று ஆவதில் ஆக்ஷேபனை என்ன? ஆகையால் ஆதேசமென்னும்பதம் நிர்குணபிரம்மத்தைத் தான் போதிக்கவேண்டுமென்று நிர்பந்திக்கக்காரணமில்லை.ஸகுண பிரம்மத்தையும் போதிக்கலாம். உண்மையில் நிர்குணபிரம்மன் என்ற பதார்த்தமே இல்லை.

ஜ.சா:— ஒருக்கால் ஆதேசபதம் இரண்டு பிரம்மன்களையும் உபதேசிக்கலாம். உபநிஷத்துக்களில் சில வாக்யங்களில் ஸகுண பிரம்மன் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறார். சில வாக்யங்களில் நிர்குணபிரம்மன் பிரதிபாதிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் ஸகுணபிரம்மத்தை ப்ரதிபாதிக்கும் வாக்யங்களுக்கு गुणबोधने तात्पर्याभावात् என்றால் ஸகுணவாக்யங்கள் வியாவஹாரிகமானதும் ஆரோபிதமானதும் அல்லது கல்பிதமானதுமான குணங்களைப்போதிப்பதால் அவைகளுக்கு ஸ்வார்த்தத்தில்(குணங்களை நிரூபிப்பதில்)தாத்பர்யமில்லை. ஆதலால் நிர்குணபிரம்மன்தான் உபநிஷத்துக்களின்

தாத்பர்யத்துக்கு விஷயன், ஆகையால் ஆதேசமென்றால் நிர்குண பிரம்மனென்றே அர்த்தம் செய்யவேண்டும்.

ஸ்ரீ ஸ்ரீ:- சரி, இப்பொழுது என்ன ஏற்பட்டது. ஏகமேவா த்விதீயம் என்பதில் நிர்குணபிரம்மனென்று அர்த்தம் செய்வதில் உபக்ரமம் ஸஹாயமென்று உபக்ரமவாக்யத்தை விசாரித்தோம். உத தமாதேசம் என்ற இந்த உபக்ரமவாக்யம் ஸ்வத: நிர்குண பிரம்மத்தைப் பிரதிபாதிக்காது. ஸகுணவாக்யங்களை விசாரித்த பிறகு அவைகளுக்கு குணநிரூபணத்தில் தாத்பர்யமில்லையென்று நிச்சயித்தபிறகு நிர்குணபிரம்மனே வேததாத்பர்யமென்று ஏற் பட்டால் உபக்ரமத்திலிருக்கும் ஆதேசபதத்திற்கு நிர்குணபிரம்ம னென்று அர்த்தத்தைச்செய்யவேண்டுமென்று ஏற்பட்டது. ஆக உபக்ரமமும் சந்தேகாஸ்பதமாயிற்று. சுயம் நிர்ணயகமாகவில்லை.

ஜ.சா:- அப்படியே ஆகட்டுமே. ஸகுணவாக்யங்களை விசா ரிப்போம். ஸகுணவாக்யங்களுக்கு குணங்களை ப்ரதிபாதிப்பதில் தாத்பரியமில்லை என்று காட்டிவிட்டால் எமதிஷ்டம் சித்திக்கும்.

குரு-சர்:- இப்பொழுது நேரமாகிவிட்டது. நாளையதினம் ஸகுணவாக்யங்களை விசாரிப்போம்.

---

குறிப்பு:— இன்று இச்சபைக்கு மதராஸ் ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் A. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் வந்திருந்து வாதங் கள் ஒழுங்காய் நடப்பதை வெகுநேரம் கவனித்திருந்தார்.

# ஸ்ரீவேதாந்தவிமர்சினீ ஸபை,
# 6-வது நாள் நடவடிக்கை.

## 9—3—31 சோமவாரம்,

ஸ்ரீமான் சேங்காலிபுரம் ஸ்ரீநிவாஸய்யர் B. A., B. L. அவர்கள் ஸ்ரீ ஸ்ரீ அவர்களுடன் இந்து ஸநாதனதர்மங்களின் உஜ்ஜீவனவிஷயமாய்க் கொஞ்சநேரம் சம்பாஷித்தார். அவர் தன்னுடைய சம்பாஷணையில் சாரதா சட்டத்தை பிராம்மணர்கள் விஷயத்தில் அமுலுக்குக்கொண்டுவரக்கூடாது என்று வைஸ்ராய் அவர்களுக்கு சமஸ்தானத்திலிருந்து அவசியம் இப்பொழுதே தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீஸ்ரீஸ்வாமிகள் அவர்களும் அவர் கூறியவைகளை ஏற்றுக்கொண்டார்கள். மேலும் பிராம்மணசபையைக் கூட்டி ஜனங்களுக்கு இதுவிஷயங்களைப்பற்றி உபந்யாஸம்செய்து தர்மஹானிக்குக்காரணமான சாரதாசட்டத்தையும் திருத்தியமைக்கும்படி வைஸ்ராய் அவர்களுக்குத் தந்திமூலமாய் தெரியப்படுத்துவதாயும் ஸ்ரீஸ்வாமிகள் அறிவித்தனர். பிறகு ஸ்ரீநிவாஸய்யர் ஸ்ரீபகவத்கீதையின் தத்வம் யாதென்று பிரச்னை செய்யவும் ஸ்ரீஸ்வாமிகள் ஸம்ஸ்கிருதத்தில் அடியிற்கண்டவாறு உபந்யஸித்தார்கள்.

ஸ்ரீஸ்ரீ:- வேதாந்தங்களெல்லாம் ஜீவப்ரம்மபேதத்தை நிரூபணம் செய்கின்றன. எல்லோருக்கும் பிரமாணமான பகவத்கீதையில் ஸம்பூர்ணமாய் ஜீவப்ரம்ஹபேதமே சொல்லப்படுகிறது. அதில் ஸ்தாலீபுலாகநியாயத்தையொட்டி (பெரியஹண்டாவில் அரிசி வெந்ததா என்று அறிய ஒரு பருக்கையைத்தொட்டு நிச்சயிப்பதுபோல) 15-வது அத்தியாயத்தின் கடைசிபாகத்திலுள்ள 6 சுலோகங்களின் அர்த்தத்தை விவரிப்போம்.

அஸ்வதந்திரமான பிரபஞ்சத்தில் க்ஷரம் என்றும் அக்ஷரம் என்றும் இரண்டுவிதமான சேதனங்கள் இருக்கின்றன. பிரம்மா முதலான ஜீவர்களெல்லோரும் 'க்ஷரம்' அதாவது ஸ்வரூபம் அழிவற்றதானபோதிலும் சரீரம் நாசமுடைவதால் 'க்ஷரம்.' சரீரமும்

நாசமடையாமலிருக்கிற அவ்யாக்ருதாகாசத்திற்கு அபிமானினீயா யிருக்கிற லக்ஷ்மீ 'அக்ஷர'மென்று சொல்லப்படுகிறுள். புருஷனுன பகவானைப்போல் சில சக்திகளையுடையவளானபடியால் அவள் புல்லிங்கசப்தத்தினுல் சொல்லப்படுகிறுள்.

இந்த இரண்டுவிதமான ஜீவர்களைவிட வேறுன உத்தமபுருஷன் க்ஷரம், அக்ஷரம் இவர்களில், சேர்ந்தவரன்று. அவர் சுருதிமுதலியவைகளில் எல்லா ஜீவர்களைக்காட்டிலும் உத்தமரான படியால் பரமாத்மா என்று சொல்லப்பட்டிருக்கிறுர்.

அதற்கு யுக்தி பின்வருமாறு:— மூன்று லோகங்களிலும் பிரவேசித்து ஜகத்தை பரணம் பண்ணுகிறுர். தாயிலும் தந்தையிலும் இதர பந்துக்களிலும் சாப்பிடக்கூடிய பதார்த்தங்களிலும் அவைகளை ஜீர்ணப்படுத்தும் ஜாடராக்னி முதலிய வஸ்துக்களிலுமிருந்து அவர் லோகங்களைப் போஷிக்கிறுர்.

ஆனுல் லோகத்ரயத்தில்பிரவேசித்த அவருக்கு அந்தலோகங்கள் நசிக்கும்பொழுது நாசம் சம்பவிக்குமோ என்றுல் 'அவ்யய:' நாசமில்லாதவர். ஏனென்றுல் அவர் நம்மால் ஊஹிக்கமுடியாத அவ்வளவு அபாரசக்தியுடையவர். பகவான் சொல்லுகிறுர். 'எந்த காரணத்தினுல்நான் 'க்ஷரத்தை' தாண்டியிருக்கிறேனே 'அக்ஷரத்தைவிட உத்தமனே அந்த காரணத்தால் பௌருஷேயமான பாரதம் பாஞ்சராத்ரம் முதலிய க்ரந்தங்களிலும் அபௌருஷேயமான வேதத்திலும் பிரசித்தியடைந்த புருஷோத்தமன் நான் தான். எவன் என்னை இந்தவிதமாய், 'க்ஷரம்அக்ஷரம்' (ஆகிய இந்த புருஷர்களைச்சேர்ந்தவரல்லவென்றும் வேதங்களில் சொன்ன புருஷோத்தமனுகவும்) புருஷோத்தமனென்றமேன்மையை பொய் என்றுநினையாமல் அறிகிறுனே அவன் ஸர்வசாஸ்திரார்த்தத்தின் க்யானமுள்ளவனுய் என்னை ஸர்வப்ரகாரத்தினுலும் பஜிக்கிறுன். இந்தபரமாஹஸ்யமான பிரமேயமானது என்னுல் சொல்லப்பட்டிருக்கிறது. முன் சொல்லிய விஷயங்களை அறிந்தவன் அபரோக்ஷக்யானமுள்ளவனுக ஆகிறுன். பிறகு செய்யவேண்டிய யாவற்றையும் செய்த முக்தனுகிவிடுகிறுன்.''

உபந்யாஸம்முடிந்தபின்பு சபைக்கு வந்துசேர்ந்த ஜகதீசுவர சாஸ்திரிகள் தத்வவிஷயத்தில் பிரச்னை செய்தார்.

ஜ. சா:— தங்கள் கிரந்தங்களில் न केवलमुपनिषदो ब्रह्मैकत्वं प्रतिपादयन्त्यः स्वार्थविघातं कर्मकाण्डप्रामाण्यविघातं च कुर्वन्ति । प्रत्यक्षादिनिश्चितभेदप्रतिपत्त्यर्थं प्रमाणैश्च विरुध्यन्ते । ..................

இத்யாதி ஸ்ரீசங்கரபிருஹதாரண்யபாஷ்யவசனங்களை உதாஹரித்து ஸ்ரீசங்கராசாரியாளும் ப்ரத்யக்ஷம் அனுமானம் கர்மகாண்டம் ஆகமங்கள் மற்றும் சில உபநிஷத்வாக்யங்கள் பேதத்தை ப்ரதிபாதிக்கிறதாய் ஒப்புக்கொண்டு இருக்கின்றாரென்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த வாக்யமானது ஸ்ரீசங்கராசாரியாள் பூர்வபக்ஷத்தை நிரூபித்திருக்கையில் வரையப்பட்டவைகள், இது ஸ்ரீசங்கராசாரியாளுடைய ஸித்தாந்தமென்று நம்பி ஸ்ரீசங்கராசாரியாளும் கூட வேதம் பேதத்தை ப்ரதிபாதிப்பதாய் சொல்லியிருக்கிறாரென்று சொல்வது அனுசிதமல்லவா?

ஸ்ரீஸ்ரீ:- இது பூர்வபக்ஷவசனம்தான். நாம் அப்படித்தான் சொல்லியிருக்கிறோம். இந்த பூர்வபக்ஷத்தை ஸ்ரீசங்கராசாரியாள் சித்தாந்தவாக்யங்களால் நிராகரித்திருந்தால் நாங்கள் இதை அவருடைய சம்மதத்தை அறிவிக்கும் வாக்யமாக எடுத்துக்கொள்ள மாட்டோம். उत्तरत्र अनिराकरणात् என்றால் பின்னடி இந்த பூர்வபக்ஷத்தை ஸ்ரீசங்கராசாரியாள் நிராகரிக்கவில்லை. மேலும் இந்தபூர்வபக்ஷத்தில்சொல்லுகிறபடிபிரத்யக்ஷம்அனுமானம்இவைகளும்எல்லாகர்மகாண்டங்களும் சில உபநிஷத்வாக்யங்களுங்கூட பேதத்தையே ப்ரதிபாதித்தாலும், ஐக்யத்தை ப்ரதிபாதிக்கும் வாக்யங்களும் ஜகத்தைமித்யை என்று சொல்லும்வாக்யங்களும்பிரபலமாயிருப்பதன்நிமித்தம் ப்ரத்யக்ஷாதிகளில் சொல்லப்பட்டிருக்கும் பேதமானது வ்யாவஹாரிகமானது அல்லது அனுவாதரூபமானது என்று சொன்னார். ப்ரத்யக்ஷாதிகளின் பேதத்தைப் போதிப்பதில்லை என்று சித்தாந்தவாக்யங்களில் அவர் எழுதவில்லை. ஆகையால் இவை பூர்வபக்ஷத்தை சங்கிக்கும் வாக்யங்களாகிலும் ப்ரத்யக்ஷாதிகள் பேதத்தையவலம்பித்தவைகளாகவே இருக்கின்றன என்னும் விஷயத்தில் ஸ்ரீசங்கராசாரியாரின் சம்மதியையே காட்டுகின்றன. ஆகையால்தான் நாம் அவைகளை உதாஹரித்தோம். அப்படியில்லையானால் ஸ்ரீசங்கராசாரியார் ப்ரத்யக்ஷாதிகள் பேதத்தை போதிப்பதில்லை என்றுஎழுதியிருந்தால்அவைகளைக்காண்பியுங்கள்.

ஜ.சா:- கர்மகாண்டங்கள் பேதத்தை போதிப்பதாய் எப்படி சொல்லுகிறது? கர்மகாண்டங்கள் யக்ஞத்தைத்தான் போதிக்கின்றன.............

ஸ்ரீ ஸ்ரீ:- பேதமில்லாமலிருந்தால் யக்ஞாதிகள் அனுபபன்னமாகும். இதோ ஸ்ரீ சங்கராசாரியாரே எழுதியிருக்கிறார் பாருங்கள். भेदाभावे कर्मकाण्डं निरालंबनमात्मानं न लभते प्रामाण्यं ..............இதன் அர்த்தமாவது:— பேதமில்லாமற்போனால் கர்மகாண்டமானது நிர்விஷயமாகி தன் ஸ்திதிக்கு ஆதாரமடையாமல் பிராமாண்யரஹிதமாகும். மற்றும் சில இடங்களில் கர்மகாண்டத்தில் வாக்யங்கள் ஸ்பஷ்டமாகவே பேதத்தைச் சொல்லியிருக்கின்றன. இதர இடங்களில் யக்ஞம், யக்ஞத்திற்கு உபகாரணமாயுள்ள ஸாமான்கள்,மற்றும் தேவதைகள் இவை முதலியவைகளை நிரூபிக்கும்பொழுது அர்த்தாபத்தியால் பேதமானது இருக்கவேண்டுமென்று ஸித்தமாகிறது.

ஜ.சா:- கர்மகாண்டமானது அர்த்தத்தால் பேதத்தைப் போதிக்கட்டும். அது ஆர்த்திகமான அர்த்தமாயிற்று. அது சாக்ஷாத்தான அர்த்தமன்று.

ஸ்ரீ ஸ்ரீ:- அப்படியே ஆகட்டும். எந்த ரீதியால் ஆனாலென்ன? கர்மகாண்டமானது பேதத்தையவலம்பித்ததாகவே இருக்கிறது. அபேதத்திற்கு விருத்தமாக இருக்கிறது. ஸ்ரீ சங்கராசாரியாரும் அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஜ.சா:- ஒரே கர்மகாண்டத்திற்கு பேதத்தையும் தேவதையையும் சொல்லும் சாமர்த்தியமுண்டோ? அநேக தாத்பர்யங்கள் எப்படி சம்பவிக்கும்?

ஸ்ரீ ஸ்ரீ:- அவாந்தர தாத்பர்யங்கள் அநேகவிதமாய் இருக்கட்டுமே.

ஜ.சா:- இது மீமாம்ஸாநியாயத்திற்கு விருத்தமானது.

ஸ்ரீ ஸ்ரீ:- நாங்களென்ன மீமாம்ஸர்களின் (பாட்டர்களின்) மதத்தை அவலம்பித்தவர்களா?

ஜ.சா:- மீமாம்ஸா மதத்தை விட்டு பரித்யாகம் செய்து வாதமாடுவது உசிதமோ?

ஸ்ரீஸ்ரீ:- **वेदोषरा: वेदान्ता:** ஊஷரபூமி எப்படியோ அப்படி வேதத்தில் உபநிஷத்பாகங்கள் நிஷ்ப்ரயோஜனமானது என்று மீமாம்ஸாமதத்தார் சொல்லுகின்றனர். நீங்கள் அதை ஒப்புக் கொள்கிறீர்களா?

ஜ.சா:- **अविरुद्धांशएवग्राह्य:** மீமாம்ஸகமதத்தில் எது அவிருத்தமானதோ அது க்ராஹ்யமானது. **एतेन शिष्टापरिग्रहाअपिव्याख्याता:** என்ற ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் அப்படியே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீஸ்ரீ:- நாங்களும் அப்படியே சொல்கிறோம். கர்மகாண்டங்கள் ஸ்பஷ்டமாய் தேவதாதிகளை ப்ரதிபாதிக்கின்றன. பேதமானது ஆர்த்திகமாய் கிடைக்கிறது. சில வாக்யங்களில் ஸாக்ஷாத்தாகவே பேதமானது சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சங்காசாரியார் சித்தாந்தம் செய்யும்பொழுது அவைகளை நிராகரணம்செய்யவில்லை. ஆகையால் அவர் அவைகளை ஒப்புக்கொண்டிருப்பதாய் நாங்கள் உதாஹரித்திருக்கிறோம்.

ஓர் திருஷ்டாந்தத்தைச் சொல்லுகிறோம். இந்த புஸ்தகம் தன்னுடையதென்று ராமன் சொல்லுகிறான். கிருஷ்ணன் இது தன்னுடையதென்று சொல்லுகிறான். கிருஷ்ணன் இது தன்னுடையதென்று ருஜூப்பிக்கும் சமயம் 1, இந்தப் புஸ்தகத்தை வாங்கிக்கொள்ள பணத்தைக் கொடுத்தவன் ராமன். 2, அதை வாசித்துக்கொண்டிருந்தவன் ராமன். 3, அது தற்போது ராமனுடைய ஸ்வாதீனத்திலிருக்கிறது. 4, அதன் முதல்பக்கத்தில் ராமனுடைய பெயர் எழுதப்பட்டிருக்கிறது என்று ஒப்புக்கொண்டுவிட்டு அது காரணாந்தரத்தால் என்னுடையதே ஆகுமென்று அறிவிக்கிறான். அந்த நான்கு விஷயங்களும் ராமனுக்கு அநுகூலமாக இருக்கின்றன. கிருஷ்ணன் இவ்வளவையும் ஒப்புக்கொண்டுவிட்டு புஸ்தகம் தன்னுடையதென்று வழக்காடக் காரணமில்லை. அவன் சொல்லும் காரணாந்தரம் அப்ரயோஜகமானதென்று ராமன் சொல்லிவிட்டால் அவன் ஜயம் பெறமாட்டானோ?

அப்படியேபிரகிருதத்தில் ஸ்ரீசங்காசாரியாளும் ப்ரத்யக்ஷம் அநுமானம் கர்மகாண்டபேதங்கள் சிருஷ்டிபோதகமான உபநிஷத்வாக்யங்கள்உபாஸனாபோதகஉபநிஷத்வாக்யங்கள்இவை பேதத்தை போதிக்கின்றனவென்றுஒப்புக்கொண்டுவிட்டார்.ஆனாலும்

சில வாக்யங்களில் ஜகந்மித்யாத்வம், பிரம்மைக்யம் இவைகள நிரவகாசமாய் ப்ரதிபாதித்திருப்பதால் ப்ரத்யக்ஷாதிகளால் நிச்சித மான பேதமானது பொய்யென்று சொல்லியுள்ளார். இதற்கு மேல் நாம் விசாரம்செய்துபார்த்தால் 2,3பாதகங்களிருக்கின்றன.

ஜ சா:- என்ன பாதகம்?

ஸ்ரீ ஸ்ரீ:- கர்மகாண்டமும் ஸ்ருஷ்டியுபாஸனாதிகளைப் போதிக்கும் உபநிஷத்துகளும் வேதங்கள்தான். அவை அதிகமாகவே இருக்கின்றன. அவை பேதத்தை ப்ரதிபாதிக்கின்றனவென்று ஸ்ரீசங்கராசாரியாள் ஒப்புக்கொண்டிருக்கிறார். பஹுத்வப்ரயுக்த மானபிராபல்யம்பேதவாக்யத்திற்கேவந்திருப்பதால்அபேதத்தைச் சொல்லுகிறதாய்த் தோன்றும் சாவகாசவாக்யங்களுக்கு வேறு அர்த்தம் சொல்வதுதான் உசிதம். बहुबाधस्य अन्याय्यत्वात् பல பிரமாணங்களுக்கு விருத்தமாய் ஓர் வார்த்தைக்கு அர்த்தம் செய்யலாகாது. இதைத்தவிர்த்து எல்லா வேதவாக்யங்களும் சமானமான அபௌருஷேயவசனங்கள்.

மேலும் தத்வமஸ்யாதி வாக்யங்கள் நிரவகாசமாய் அபேதத்தைச்சொல்வதில்லைஎன்றுஸ்ரீசங்கராசாரியாள் ஒப்புக்கொண்டிருக்கிறார். தத்வமஸ்யாதி உபநிஷத்துக்கள் முக்யவிருத்தியால் அபேதத்தைப்போதிப்பதில்லைஎன்றும் லக்ஷணாவிருத்தியாகவே ஐக்யத்தைப் போதிக்கிறதென்றும் அவர் சொல்லுகிறார். ஆகையால் அவைகள் ப்ரபலமானவைகளென்று சொல்வதற்கில்லை. ஏனெனில் பேதபோதகமான வாக்யங்கள் முக்யவிருத்தியாலே பேதத்தைப் போதிக்கின்றன.

மேலும் தத்வமஸ்யாதி வாக்யங்களுக்கு லக்ஷணையால் ஐக்ய பரமாய் அர்த்தம் செய்வதற்கும் அநேக பாதகங்களிருக்கின்றன. ஆகையால் ஐக்யத்தை ஒப்புக்கொள்வதெப்படி என்பதை நாம் காட்டினோம்.

ஜ.சா:-அப்படி ஸ்ரீசங்கராசாரியாளும்சித்தாந்தவாக்யத்திலும் கூட ப்ரத்யக்ஷாதிகள் பேதத்தைத்தான் ப்ரதிபாதிப்பதாய் சொல்லியிருக்கும்பக்ஷத்தில் நீங்கள் அந்தவாக்யங்களை உதாஹரித்திருக்கலாமே! அவைகளைவிட்டு அர்த்தத்தால் அவருடைய சம்மதியை அறிவிக்கும் பூர்வபக்ஷவசனங்களை ஏன் உதாஹரிக்கவேண்டும்?

ஸ்ரீ ஸ்ரீ:- இப்படி செய்யவேண்டுமென்று என்ன நியமம்? பூர்வபக்ஷத்தை நிராகரணம் செய்யாதிருப்பதால் அது அவருக்கு அபிமதமென்று அங்கீகரித்தே ஆகவேண்டும், சிலவிடங்களில் சித்தாந்தவாக்யங்களிலும் அப்படியே அவர் ப்ரதிபாதித்திருக்கிறார். அவைகளையும் உதாஹரிக்கலாம். முக்யமாய் அது அவருடைய அபிப்பிராயமாக இருந்தால்போதுமானது. இப்பொழுது அர்த்தாத் அவருடைய சம்மதியை அறிவிக்கும் வசனங்களை உதாஹரித்திருக்கிறோம். சித்தாந்தவாக்யங்களில் கர்மகாண்டங்கள் பேதத்தை அறிவிக்கின்றனவென்பதை ஒப்புக்கொண்டிருக்கும் பாகங்களை முன்னாடி காட்டுகிறோம். இப்பொழுது எமக்கு ஞாபகமூட்டியிருக்கிறீர்கள். ப்ரத்யக்ஷாதிகள் பேதத்தைச் சொல்லுவதில்லை என்று எழுதியிருக்கும் ஓர் பாகத்தையாவது காட்டுங்கள்.

ஜ.சா:- அவர்கள் சித்தாந்தம் செய்யும்பொழுது அத்வைதமே பரமசாஸ்திரமென்று எழுதியிருக்கிறார்களே! அதையும் நீங்கள் ஏன் உதாஹரிக்கவில்லை.

ஸ்ரீ ஸ்ரீ.- அவைகளை நாம் ஏன் ஏற்றுக்கொள்வோம். "இந்த புஸ்தகத்திற்கு கிரயம் கொடுத்தவன் வாதி. இது வாதியின் சுவாதீனத்திலேயே இருக்கிறது. இதன் முதல்பக்கத்தில் வாதியின் பெயரிருக்கிறது. இதை வாதியே வாசித்துக்கொண்டிருந்தான். ஆயினும் இது என்னுடையது" என்று பிரதிவாதி சொல்லுகிறான். அந்த நான்கு விஷயங்களும் வாதி தனக்கு சாதகமானதென்று ஸ்வீகரித்து 'ஆயினும் என்னுடையது' என்ற பிரதிவாதியின் வசனத்தை நிஷ்காரணமான பிதற்றல் என்றுநிராகரிக்கிறான். நியாயாதிபதியும் அவ்வாறே தீர்மானிக்கிறார். நாமும் அப்படியேதான். இவைகளெல்லாம் ஸ்ரீசங்கராசாரியாள்ஒப்புக்கொண்டு அத்வைதமேசாஸ்திரார்த்தமென்று சித்தாந்தம் செய்திருப்பதற்கு காரணங்கள் போதாதென்றும் வேதங்களில் இதற்கு ஆதாரமில்லை என்றும் காட்டுகிறோம்.

ஜ.சா:— इदानीं अद्वैतप्रतिपादकवाक्यानि सन्तीति अद्वैतिमुखात् विज्ञाय अद्वैतमतमवैदिकमिति कथं அத்வைதபாஷ்யகாரர் அத்வைத ப்ரதிபாதகமான வாக்யங்கள் அநேகமிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்களே! அதையும் அறிந்துகொண்டு அத்வைதமதம் அவைதிகமென்று சொல்வதெப்படி ?

ஸ்ரீ ஸ்ரீ:- நாம் விசாரம் செய்கிறோம். எங்கள் வசனங்களால் மட்டில் எந்த மதமும் சித்திப்பதில்லை. இல்லாவிடில் துவைதமத மானது வைதிகமென்று என் வார்த்தையாலேயே சித்தித்துவிட வேண்டும். அத்வைதம் வைதிகமென்று காட்ட ஸ்ரீ சங்காசாரி யாள் சில யுக்திகளைக் காட்டியிருக்கிறார். சுருதிகளையும் உதாஹ ரித்திருக்கிறார். அந்த யுக்திகள் சரியாக இருக்கின்றனவா? அந்த சுருதிகள் அந்த அபிப்பிராயத்துக்கு ஆதாரமாக இருக்கின்றனவா வென்று நாம் விசாரம் செய்யவேண்டும். விசாரம் பண்ணுவதா லேயே தத்வநிர்ணயமாகவேண்டும். स्वपक्षसाधनपरपक्षोपलंभाभ्यां हि निर्णयः தத்வநிர்ணயமானது பரபக்ஷத்தை நிராகரணபூர் வமாய் ஸ்வபக்ஷத்தின் ஸாதனம் செய்வதால் ஏற்படுகிறது. எல்லா வாதிகளும் இவ்வாறேதான் சொல்லவேண்டும். ஸ்ரீசங்கரா சாரியாளும்கூட சார்வாகமதத்தையும் பௌத்தமதத்தையும் மேலும் வைதிகமதங்களாகிய ஸாங்கியமதம் நையாயிகமதம் யோகமதம் முதலியவைகளையும்கூட நிராகரித்திருக்கிறார். அவர் அவைகளை எல்லாம் அவைதிகமதமென்று சித்தாந்தம் செய்திருக் கிறாரல்லவா? நீங்கள் எங்கள் மதத்தை அவைதிகமதமென்று சொல்லியிருக்கிறீர்களல்லவா?

ஜ.சா:- நாங்கள் அப்படிச்சொல்வதில்லை.

ஸ்ரீ ஸ்ரீ:- நீங்கள் பொய் சொல்கிறீர்கள். உங்கள் மனதில் அப்படியே இருக்கிறது. வீட்டிலும் சொல்லுகிறீர்கள், புஸ்தகங் களிலும் எழுதியிருக்கிறீர்கள். உங்கள் பூர்வீகர்களான ஸ்ரீசங்கரா சாரியாள் அப்பய்யதீக்ஷிதர் முதலானவர்கள் த்வைதம் அவைதிக மதமென்றே சொல்லியிருக்கின்றனர். நீங்களும் அப்படியேதான் சொல்லவேண்டும். அப்படி நீங்கள் சொல்லாமற்போனால் நீங்கள் அத்வைதிகளே அல்ல.

ஜ.சா:- நாங்கள் அவைதிகர்களென்று தெரிந்திருந்தால் வா தார்த்தமாய் எங்களை அழைத்ததேன்?

ஸ்ரீ ஸ்ரீ:- இதென்ன இப்படி கேட்கிறீர்கள்? நாங்கள் அவை திகர்களென்று தெரிந்துகொண்டு நீங்கள் ஸபைக்கு வருகிறீர் களே என்று நாம் பதில் கேட்கலாம். வஸ்துத: இது அப்படியல்ல நாம் சொல்லுகிறோம் கேளும். மனுஷ்யர்கள் தனி, அவர்கள் மதம் தனி, ஸ்மார்த்தப்ராம்மணர்கள் ஸ்நானதிகர்மங்களைச் செய்ப

வர்களன்று, அவர்கள் பிராம்மணர்களன்று, அவர்கள் பௌத்தர்கள், அவர்கள் வியவஹாரத்திற்கு யோக்யர்களல்லவென்று நாம் சொல்வதில்லை. அந்த அபிப்பிராயம் எனக்கு அத்யந்தமாய் விருத்தமானது, எங்கள் பந்துக்கள் அநேக ஸ்மார்த்தப்பிராம்மணர்களிருக்கின்றனர். ஸ்மார்த்தர்களும் மாத்வர்களும் கொள்வினைகொடுப்பினை செய்வதுண்டு. ஸ்மார்த்தர்கள் உத்க்ருஷ்டபிராமணர்களாதலால் நாம் அவருக்கு முக்கிரையைக்கொடுத்து த்வைததத்வத்தை உபதேசிக்கிறோம். ஆனால் அத்வைதமதமானது வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை என்றே எங்கள் வாதம். நீங்கள் அதை விசாரம் செய்தால் ஒப்புக்கொள்ளும்படியான காரணங்களைச் சொல்லுகிறேன்.

ஜ.சா:- அத்வைதமதம் அவைதிகமானல் அத்வைதிகள் அவைதிகர்களாகிறதில்லையோ?

ஸ்ரீ.ஸ்ரீ:-அது எப்படியாகும்? வேதப்பிராமாண்யத்தை அங்கீகரித்து யஜனாதி ஷட்கர்மங்களில் நிரதர்களான பிராம்மணர்கள் வைதிகர்கள். உபாஸனைக்கு விஷயமான மதமானது வேதத்தில் இல்லாமலிருந்தால் அது அவைதிகமதமென்றாகும். நாங்கள் சார்வாகர்களைக்குறித்து சுருதிவிசாரம் செய்யவில்லை. உங்களெல்லோருக்கும் வேதம் பிரமாணமென்ற அபிமானமிருக்கிறது. ஆகையால் வேதத்திற்கு பிராமாண்யத்தை ஒப்புக்கொண்டால் வேதத்தில் ஆதாரமில்லாமலிருப்பதன் நிமித்தம் அத்வைதமதம் அவைதிகமதமென்று விசாரம் செய்து காட்டியிருக்கிறோம். வேதோக்தமான ஸத்யமான மதமின்னதுதானென்று விசாரம்செய்து நிர்ணயிக்க வேண்டும். நீங்களும்கூட த்வைதமதம் அவைதிகமென்று சொல்வதில் யுக்தியை உபன்யசித்து அத்வைதத்தை ஸ்தாபிக்க யத்தனிக்கவேண்டும்.

ஜ.சா:- நாங்கள் த்வைதம் அவைதிகமென்று சொல்வதில்லை. என்றால் த்வைதமதம் வேதத்தில் சொல்லப்படவே இல்லை என்று நாம் சொல்லமாட்டோம். நீங்கள் அத்வைதம் வேதத்தில் சொல்லவே இல்லை என்று சொல்லுகிறீர்களே?

ஸ்ரீ ஸ்ரீ:- அது என்னமோ வாஸ்தவம்தான். த்வைதமானது வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது வியாவஹாரிகமானதென்றல்லவோ நீங்கள் சொல்லுகிறீர்கள்?

ஜ.சா:- வியாவஹாரிகபேதமென்று நாம் சொல்லுகின்றோம்.

ஸ்ரீஸ்ரீ:- வியாவஹாரிகபேதமென்றும் பொய்யான பேதமென்றும் பேதமில்லை என்றும் சொல்வது சமானமே. வியாவஹாரிகமென்ற பதம் இல்லை என்பதற்கு பர்யாயசப்தமானது வேதாந்தகல்பதருபரிமளமென்னும் அத்வைத கிரந்தத்திலேயே இந்த ரீதியாய் எழுதப்பட்டிருக்கிறது. बाध्यविषये व्यावहारिकं प्रामाण्यमिति व्यवहारस्याद्वैतपरिभाषामात्रसिद्धत्वात् அப்ரமாணமென்ற அர்த்தத்திற்கு வியாவஹாரிகப்ரமாணமென்று அத்வைதிகள் ஸங்கேதம் செய்துகொண்டிருக்கின்றனர். வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் த்வைதமானது வியாவஹாரிகமென்று சொன்னாலும் த்வைதம் அப்ரமாணமானது, த்வைதம் அவைதிகமானது என்றுதான் அர்த்தமாகிறது. அவ்வளவு ஏன்? சுருதியில் வியாவஹாரிக அத்வைதம் சொல்லப்பட்டிருக்கிறதென்றால் உங்களுக்கு திருப்தி ஏற்படுமா என்றால் பொய்யான அத்வைதத்தை அல்லது பிராந்திக்கு விஷயமான அத்வைதத்தை வேதம் சொல்கிறதென்றால் உங்களுக்கு சம்மதமாகுமா?

ஜ சா:- போதும்.

ஸ்ரீஸ்ரீ:- இவ்வளவுதான் உங்களுக்கும் நமக்கும் பேதம் நாங்கள் அத்வைதமானது சுருதியில் எங்கும் சொல்லப்படவில்லை என்று காட்டுகிறோம். நீங்களோ சுருதியில் த்வைதம் சொல்லப்பட்டிருக்கிறது. அது வியாவஹாரிகம் பொய் என்று சொல்லுகிறீர்கள்.

சேங்காலிபுரம் ஸ்ரீநிவாஸப்பாவர்கள் B. A.B.L:-ரொம்பசரி.

இருகக்ஷியினரும் சந்தோஷத்துடன் கோலாகலபூர்வமாய் கலைய ஸபை அன்று கலைந்தது.

# ஸ்ரீவேதாந்தவிமர்சினீ ஸபை,
# 7-வது நாள் நடவடிக்கை.

## 10—3—31 மங்களவாரம்.

சேங்காலிபுரம் வக்கீல் ஸ்ரீனிவாஸய்யர் B.A., B.L.:—

ஸ்வாமின் நான் ஓர் ஸம்சயத்தைப்பரிஹாரம்செய்துகொள்ள விரும்புகிறேன். துவைதம் சரியானதோ அத்வைதம் சரியானதோ இதைப் பண்டிதர்கள் நிர்ணயிக்கவேண்டுமேயொழிய ஸாமான்யர்கள் சக்தர்களன்று. அதற்கு ஸாமான்யர்கள் என்ன செய்வது ?

ஸ்ரீ ஸ்ரீ: விசாரத்திற்கு சக்தியுள்ளவன் இருகக்ஷிபினர்களின் கிரந்தத்தையும்பரிசிலனைசெய்து எதுப்ராமாணிகமோ அந்தமதத்தை அவலம்பிக்க வேண்டும். அப்படி விசாரம் செய்தால் துவைத மதத்திற்கே பிரமாணங்கள்அனுகூலமாயிருக்கின்றனவேயல்லாது அத்வைதத்திற்கு யாதொரு சுருதியும் ஸஹாயமாக இல்லை. விசாரம் செய்ய சக்தியில்லாதவன் ஸம்சயதசையிலிருந்தபோதிலும் அத்துவைதத்தை அங்கீகரிக்கலாகாது. ஏனெனில் அத்வைதமானது வைதிகமதமாயிருந்து அதே, பாமார்த்ததத்வமாயிருந்தால் துவைதிக்கு யாதொரு ஹானியுமில்லை. அத்வைத மதத்தின் படி துவைதியானவன் எப்பொழுதும் பிரும்மஸ்வரூபன் தானே துவைதமே ஸத்யமாயிருந்தால் அத்வைத மதத்தை அவலம்பித்து கர்மங்களைச் செய்பவனுக்கு அவனுடைய கர்மாதிகள் நிஷ்பலமாகின்றன அல்லவா ? நானே பிரம்மம் என்று மித்யோபாசனையால் கோரமான அதோகதியாகிறதென்று ப்ரமாணங்களால் ப்ரமிதமாக இருக்கிறது. ஆகவே ஸம்சயப்பட்டவர்களும்கூட துவைத மதத்தையே அவலம்பித்து அதற்கு அனுகுணமாக தர்மாத்யனுஷ்டானங்களைச் செய்யவேண்டும்.

சே. ஸ்ரீனி: இப்பொழுது என்னமோ நாங்கள் துவைதிகளாகவே இருக்கின்றோம். துவைதிகளை விட அதிகமாகவே நாம் கர்மாத்யனுஷ்டானங்களைச் செய்து வருகிறோம். ஸர்வகர்மங்களையும் நிஷ்காமனையாய் செய்துகொண்டு பிரம்மார்ப்பணமஸ்து என்று அர்ப்பணம் பண்ணிக்கொண்டே இருக்கிறோம். ஆனால்

நாங்கள் அத்வைதி குலத்தில் பிறந்திருப்பதாலோ ஸஹவாஸப்ராப வத்தாலோ ஸ்ரீ சங்காசாரியாள் ஈசுவராவதாரமென்ற நம்பிக் கையாலோ எப்படியோ அத்வைதமானது சத்தியமான தத்துவம் என்று நம்பியிருக்கிறோம். இப்படியிருக்க நாங்கள் செய்யும் கர் மங்கள் எந்த பலனையும் அடையாமற் போகுமா என்ன?

இச்சமயம் நல்லூர் வெங்கட்டராம சாஸ்திரிகள் (ஆரியதர் மம் பத்திராதிபர்) ரங்சாமி சாஸ்திரிகள் சிஷ்யர்களுடன் சபைக்கு வந்தார். அதுவரை நடந்திருந்த சர்ச்சையானது அவருக்கு நிரூ பணம் செய்யப்பட்டது. பிறகு,

ஸ்ரீ ஸ்ரீ: அத்வைத மதத்தார்கள் விதியுக்தமாகவே கர்மங்க ளைச் செய்கின்றனர். நீங்கள் சொல்வது சரிதான். உங்களைப் போலொத்தவர்களைக் கண்டால்தான் எமக்கு சந்தோஷம். தத் வத்தை அறிந்த பிறகும் கூட இப்படியே நீங்கள் செய்யவேண்டு மென்று நாங்கள் கோருகின்றோம். ஏனெனில் அத்வைத தத்து வத்தை ஒப்புக்கொண்டால் கர்மானுஷ்டானம் பொருந்து வதில்லை, பிரம்மார்ப்பணம் என்றால் அத்வைதமதத்தின்படி ஒன்றும் அர்த்தமாவதில்லை, கர்மத்தைச் செய்பவர் யார்? பலனைக் கொடுப்பவர் யார்? பலம் எப்பேர்ப்பட்டது? இவைகளெல்லாம் நிரூபணம் செய்ய முடியாததுதான். கர்மாவைச் செய்பவன் நிஷ் கிரிய பிரம்மன். அவனுக்கு கிரியையே பொருந்துவதில்லை. காமா திகள் நிஷ்பலமானவைகள். ஏனெனில் சுத்தஜீவன் நித்ய பிரம்ம னாக இருக்கிறான். ஸம்ஸாரமும் மித்யை, மோக்ஷமும் மித்யை என்று ஸ்ரீசங்கராசாரியாள் ஸ்பஷ்டமாக **नचमोक्षबंधने** முதலான ரீதிப்படி அனேக இடங்களில் சொல்லியிருக்கிறார்.

கும்பகோணம் சுப்பிரமணிய சாஸ்திரிகள்:-நானே பிரம்மனா யிருந்தாலும் பிரம்மபாவமானது இப்போது அபிவ்யக்தமாக இல்லை. அதற்காக நாம் இப்போதுகர்மங்களைச்செய்யலாமல்லவா?

ஸ்ரீ ஸ்ரீ: யாருக்கு அபிவ்யக்தி என்பது?

கு. சுப்: ஜீவனுக்கு.

ஸ்ரீ ஸ்ரீ: ஜீவன் பிரம்மன் தானே! நிர்விசேஷப் பிரம்மனுக்கு அபிவ்யக்தியோ அனபிவ்யக்தியோ ஏதும் பொருந்துவதில்லை, பிரம்மன் நித்தியமுக்தன், சுத்தன், நிர்விகாரன், பிரம்மத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லையே.

வெங்கட்டராமசாஸ்திரிகள்: ஏவமேவ ஸத்யம். ஆயினும் कण्ठगतचामिकरन्यायेन प्राप्तस्यापि प्राप्तिरिव व्यवहारः கண்டகதமான மணியானது கிடைத்தது என்று வியவஹாரம் போல் பிரம்மபாவம் வந்ததென்று வ்யாஹாரமாக இருக்கிறது.

ஸ்ரீ ஸ்ரீ: வியவஹாரமும் பொருந்துவதில்லை. யாதொன்றும் இல்லவேயில்லை. நூதனமாய் கர்மங்களால் வரவேண்டியதாயுள் ளது ஒன்றுமில்லை.

வெ. சா: வியவஹாரதசையில் எல்லாம் உண்டு.

ஸ்ரீ-ஸ்ரீ: அப்படியென்றால் என்ன ? இந்த வியவஹாரம் பாத்தியமாயிருக்கிறது என்றால் வ்யவஹாரமானது முன்பு இருந் திருக்கவில்லை, இப்போதில்லை, இனி இருக்கப்போவதில்லை என்ற ஞானத்திற்கு விஷயமாவதில்லை அல்லவா.

வெ. சா: ஸ்வப்னத்தில் சிறிது அனுபவம் உண்டாகிறது. அதனால் சுகாதிகள் உண்டாகின்றன. ஸ்வப்னத்திலோ ப்ராதி பாஸிக ஸத்வமுள்ள வஸ்துக்கள் உற்பன்னமாகின்றன. அவித் யாரூபமான உபாதான காரணத்தாலும் தோஷாதிநிமித்தகாரணங் களாலும் சிப்பி வெள்ளி ஸ்வப்னபதார்த்தங்கள் முதலியவை உற் பன்னமாகின்றன. அப்படியானாலும் அவை நிவிருத்தமாகின்றன அப்படியே வியவஹாரத்தில் கர்மாதிகளும் கர்மபலன்களுமிருக் கின்றன. வியவஹாரமும் உபாதானாதிகாரணத்தால் ஜன்யமாயி ருப்பதால் ஸத்யமே.

ஸ்ரீ ஸ்ரீ: அது பொருந்தாது. வியாவஹாரிக ஜகத்தானது அப்படியே ப்ராதிபாஸிக வெள்ளி முதலியவை எந்த காலத்திலா வது ஸத்யமாயிருந்தால் அவைகள் த்ரைகாலிக நிஷேத ப்ரதியோகி களாகமாட்டா என்றால் முன்பு இருந்திருக்கவில்லை. இப்போது இல்லை. இனி இருக்கப்போவதில்லை. இவ்வாறு மூன்று காலத் திலும் இல்லை என்று சொல்லிவிட்டு வியவஹாரகாலத்திலிருக்கி றது என்று சொல்லலாகாது. பெட்டியில் பத்துரூபாய் இல்லாம லிருக்கையில் நாம் இருப்பதாய் பிரமித்திருந்தால் பெட்டியைத் திறந்து பார்த்தபின் அது இல்லை என்ற சரியான ஞானம் வந்து விடுகிறது. பெட்டியில் பணம் இல்லாமலிருந்தது எப்போதும் சத்தியமே. இப்படித்தான் அத்வைத மதத்தில் வியவஹாராதிகள் சத்யமன்று. நாம் சத்தியமென்று அறிருந்திருக்கலாம். அவை

கள் உண்மையாய் இல்லையென்றுபிறகுதெரியலாம். இதனால் அவைகள் ஸத்தாவைக் கொண்டவைகளென்று சொல்ல முடிவதில்லை. ப்ராதிபாஸிகமென்றாலும் அவ்வளவு தான். இருப்பதாய் தோன்றுகிறதேயொழிய வஸ்து யாதுமிருப்பதில்லை

வெ-சா: அப்படியல்ல, கேவலம் ஞானமாத்திரமல்ல. வித்யா என்ற உபாதானம் முதலான காரணஸாமக்ரயத்தால் ஜன்யமான ஸத்தாவே உண்டு. ஆனால் அது ப்ராதிபாஸிக ஸத்தை.

ஸ்ரீ ஸ்ரீ: वाचारंभणं विकारो नामधेयं मृत्तिकेत्येवसत्यं என்ற வாக்கியத்தின் வியாக்யான ஸமயத்தில் கார்யம் பொய் உற்பத்தியாதிகள் இல்லவே இல்லையென்று ஸ்ரீ சங்கராசாரியாளே சொல்லியிருக்கிறார்.

வெ. சா: கார்யகாரணபாவங்களை அங்கீகரித்து அங்கு சமாதானத்தை ஸ்ரீ சங்கராசாரியாள் சொல்லியிருக்கிறார்களேயல்லாது கார்யகாரணபாவமில்லை என்று சொல்லவில்லை.

ஸ்ரீ ஸ்ரீ: அப்படியாகாது. மிருத்கேத்யேவ ஸத்யம் என்பதில் ஏவகாரமானது கார்யாதிகள் ஸத்யமல்லவென்று போதிக்கிறது. வாசாரம்பணம் என்று துவக்கத்திலும் வாக்வியவாஹாரம் மாத்திரம்தானே ஒழிய கார்யரூபத்தால் விகாரமானது இல்லவே இல்லையென்று சொல்லியிருப்பதால் இப்படித்தான் அர்த்தம் செய்யவேண்டும். இதையெல்லாம் அத்வைதமத ரீதிப்படிக்கே அர்த்தம் சொல்லியிருக்கிறோம். கார்யகாரணபாவத்தை அந்த வாக்கியத்தில் ஸ்ரீ சங்கராசாரியாள் நிராகரணம் செய்தே இருக்கிறார்.

இதைத் தவிர்த்து ஸகலமும் பாத்தியமானது என்றால் முக்காலத்திலுமில்லை என்று சொன்னபின் உற்பத்தியாதிகளின் விசாரத்திற்கே அவகாசமில்லை. பிரம்மஞான தசையில் அவைகள் முக்காலத்திலுமில்லையென்று தோன்றுகிறது. அவ்வளவுதானே ஒழிய இப்போதிருப்பதாய் சொல்லக்கூடாது. இப்போதிருக்கிறதாய் தோன்றுவது பிரமம் தான்:

சே.ஸ்ரீனி: ஸ்வாமின் ! தாங்கள் இப்பொழுது அத்வைதபாஷிய வரிகளை வாசித்து அர்த்தத்தைச் சொல்லுகிறது எனக்கும்புரிகிறது. கார்யகாரணபாவாதிகள் ஒன்றுமே இல்லையென்றுசொல்

வது என்னைப்போன்றவர்களுக்குங்கூட கேவலம் அசம்பந்தம் என்று தோன்றுகிறது. ஸ்ரீ சங்காசாரியாள் மஹாஞானி. அவர்கள் இந்த அபிப்பிராயப்படி இந்த வாக்கியத்தை எழுதியிருக்க மாட்டார்கள். எனக்கு அதன் அபிப்பிராயமிப்படி என்றுதோன்றுகிறது. காரணாதிகள் நிச்சயமாயிருக்கின்றன. அவைகள் முக்யமானவைகள். கார்யவஸ்துக்கள் அமுக்யமாயும் நசுவரமாகவுமிருக்கின்றன. பிரம்மன் நித்யன், ஜகத் அநித்யமானது என்று ஆசாரியாளின் அபிப்பிராயமிருக்கலாம்.

ஸ்ரீ ஸ்ரீ: இந்த அர்த்தம் அத்வைதபாஷ்யக்காரருக்கு ஸம்மதமானதன்று. இது நமக்கென்னமோ இஷ்டமானதுதான். நமக்கு இது விருத்தமானதல்ல. உங்கள் பண்டிதர்களைக் கேளுங்கள்.

சே. ஸ்ரீனி: என் பிரச்னைக்கு என்ன உத்தரம் ஏற்பட்டது? அத்வைதிகள் த்வைதிகளைப் போல் கர்மங்களைச் செய்கிறவர்கள் தானே?

ஸ்ரீ ஸ்ரீ: அதே விஷயத்தை விசாரம் பண்ணிக்கொண்டிருக்கிறோம். ஸகலப்ரபஞ்சமும் கர்மமும் பலமும் கார்யகாரணபாவமும் மித்யாபூதமாயிருப்பதால் கர்மத்தை என் செய்யவேண்டும்? கர்மத்தால் வரக்கூடியது யாது? அஹம் பிரம்மாஸ்மி என்று மனதில் தியானம் பண்ணிக்கொண்டு கர்மம் செய்வதெப்படி?

வெ. சா: இப்போது எல்லாம் பேதமே. யக்ஞங்கள், தேவதாதிகள் இவைகளில் ஒவ்வொன்றும் வெவ்வேறு தான். கர்மா இவைகளை எல்லாம் ஒப்புக்கொண்டே வியவாஹாரதசையில் நாம் கர்மாதிகளைச் செய்கிறோம்.

ஸ்ரீ ஸ்ரீ: நீங்கள் கர்மங்களைச் செய்கின்றீர்கள் தான். அதில் யாதொரு சம்சயமுமில்லை. ஆனால் உங்கள் மதத்தின்படி ஸர்வமும் மித்யை. நானே பிரம்மனென்ற ஞானத்தை அடைந்தவன் கர்மங்களை ஆசரிப்பது எப்படி பொருத்தமானதென்றுதான்கேட்கிறோம்!

ரங்கஸ்வாமிசாஸ்திரிகள்: பரோக்ஷ ஞானத்தை அடைந்தவனோ? அபரோக்ஷ ஞானத்தை அடைந்தவனோ?

ஸ்ரீ ஸ்ரீ:- பரோக்ஷ ஞானத்தை அடைந்தவன்தான். அத்வைத மதத்தில் பிரம்ம விஷயமான அபரோக்ஷஞானம் உண்

டாவதில்லை என்று அத்வைதிகள் ஆங்காங்கு நிரூபித்திருக்கின்றனர். அத்வைதிகள் அதை நிர்விஷயபக்ஞானமென்று ஒப்புக்கொண்டிருக்கின்றனர். பிரம்மாபரோக்ஷத்தை ஒப்புக்கொண்டாலும் நிர்விஷயமான பிரம்மாபரோக்ஷ ஞானத்தால் பிரபஞ்சமானது மித்யை என்று ஏற்படாது. நான் பிரம்மனென்றும் கூட ஏற்படாது

ர. சா:- பிரம்மாபரோக்ஷஞானமானது உண்டு என்று அத்வைதக் கிரந்தங்களில் நிரூபிதமாயிருக்கிறது. நான் அதைக் காட்டுகிறேன்.

ஸ்ரீ ஸ்ரீ:- அப்படியே செய்யுங்கள் பிரகிருதத்தில் என்னவாயிற்று, அத்வைத பாஷ்யாதிகளை படித்து, கர்மாதிகள் நிஷ்பலமானவை, மோக்ஷமானது பின்னடி உண்டாகக்கூடியதல்ல, மோக்ஷத்தைவிரும்புகிறவன் கர்மத்தை விடவேண்டும் என்று. நானே பிரம்மன் என்ற ஞானத்தை அடைந்தவன் கர்மங்களைச் செய்வது பொருந்துமா ?

ரங். சா:- பிரம்ம ஸாக்ஷாத்காரம் வரையில் கர்மங்களைச் செய்துகொண்டே இருப்பான். பரோக்ஷஞானம் கர்மத்தைவிடுவதின் பிரயோஜனமாகமாட்டாது.

ஸ்ரீ ஸ்ரீ:- சாஸ்திரத்தில் உண்டானஅத்வைதஞானத்தில் உங்களுக்கு விசுவாஸம் இருக்கிறதா இல்லையா ? உங்கள் குரு (ஸ்ரீ சங்கராசாரியாள்) ஸத்யமாகவே சொல்லியுள்ளார் என்ற பிராமாண்ய புத்தி உங்களுக்கிருக்கிறதல்லவா ?

வெங் சா:- குருவாக்கியத்தில் விசுவாசமிருக்கிறது.

ஸ்ரீ ஸ்ரீ:- அப்படியானால் கர்மாசரணே ஏற்படாது. சாஸ்திரக்ஞானத்தில் விசுவாஸமில்லாதிருப்பவன் கர்மத்தைச் செய்யலாம். அத்வைத சாஸ்திரத்தில் பிராமாண்ய புத்தி இருந்தால் கர்மாசரணே எப்படியும் அஸங்கதமாகும். ஏனெனில் 1, கர்மானுஷ்டானம் சாஸ்திரவிருத்தமானது. 2. மேலும் நிஷ்பலமானதென்று பரோக்ஷஞானத்தாலேயே தெரியவரும். நானே பிரம்மன் கர்மாதிகளிலிருந்துவரும் பலமானது இருக்கிறதில்லை என்று சாஸ்திரத்தால் நிச்சயமாய்தெரிந்துகொண்டு ஸாஹஸத்தால் கர்மத்தில் எவனும்பிரவிருத்திக்கமாட்டான். திருஷ்டாந்தம் நான்இங்கிருந்து

மதராஸுக்குப்போகவேண்டியிருக்கிறது- ஓர் ஆப்தன் இதுதான் மதராஸ் என்று சொல்லுகிறன். எனக்கு அவனுடைய வாக்கியத்தில் விசுவாசமில்லாதிருந்தால் நான்முன்னேபோய்மதராசுக்குவழி எது என்றுவேறெருவனைக்கேட்பேன். அந்தஆப்தனின் வாக்கியத்தில் எனக்கு விசுவாசமிருந்தால் முன்னே நான் போகமாட்டேன். இந்த விதமாய் கர்மாதிகள் நிஷ்பலமென்று சொல்லும் ஸ்ரீ சங்கராசாரியாளின் வாக்கியத்தில் உங்களுக்கு விசுவாசமிருந்தால் நீங்கள் கர்மானுஷ்டானம் செய்யக் காரணமேயில்லை.

வெ சா:- குருவாக்கியத்தில் பிராமாண்யபுத்தி இருக்கிறது. ஆயினும் கர்மானுஷ்டானம் நேரிடலாம். எப்படியெனில் இப்பொழுது ஓர் கயிற்றைப் பார்த்துவிட்டு பாம்பு என்ற பிரமம் வருகிறது. அதனல் உடம்பெல்லாம் நடுங்குகிறது, நாம் ஓடுவதற்கும் எத்தனிப்போம். அப்பொழுது ஓர் பரம ஆப்தன் வந்து "அடே பிராந்தனே! அது ஸர்பமன்று, கயிறுதான்" என்கிருர், அந்தவாக்கியத்தில் எமக்கு அத்யந்தமாய் விசுவாசமிருப்பினும் நம்முடைய தேஹத்தின் நடுக்கம் நிற்கிறதில்லை. மேலும் சாக்ஷாத் பிரத்யக்ஷமாய் கயிற்றைப்பார்க்குமளவும் நம்முடைய சரீரம் நடுங்கிவருகிறது. அது காரண நாசத்தால் தான் நாசமடைகிறது. ரஜ்ஜு ஸர்ப பிரமத்திற்கு காரணமான அவித்யை நிவிருத்தியாகுமளவும் சரீரகம்பாதிகள் போவதில்லை. அது ரஜ்ஜுப்ரத்யக்ஷத்தாலேயே போகும், இபபடியே வியாவஹாரிகப்ரபஞ்சமெல்லாம் பொய்யாயினும் அது நிஜமென்ற பிரமமானது அவித்யையால் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனல் நானுப்ரவிருத்திகளை எல்லாம் நாம் செய்துகொண்டுதானிருப்போம், இந்த கர்மாதிகளுக்குக் காரணமான அக்ஞானமானது பிரம்மாபரோக்ஷ ஞானத்தால் தான் நிவிருத்தியாகவேண்டும். அது வரையில் நிவிருத்தமாகாது. இப்பொழுது நமக்கு சாஸ்திரத்தால் பரோக்ஷஞானமானது உண்டாகி கர்மங்களெல்லாம் நிஷ்பலமென்று தெரியவந்தாலும் மேலும் இப்போது ஏற்பட்டிருக்கும் ஞானத்தில் பிராமாண்யபுத்தி இருந்தாலும் வியவஹாரப்ரமத்திற்கு காரணமாகிய அவித்தை இருக்குமளவும் கர்மங்களைச் செய்துகொண்டே இருப்போம். ஆகையால் அத்வைத ஞானத்தில் பிராமாண்ய புத்தியுள்ள நாம் கர்மங்களை செய்துகொண்டே இருப்போம். ஆகையால் அத்வைத ஞானத்

தில் பிராமாண்யபுத்தியுள்ளவன் கர்மங்களை அனுஷ்டிக்கமாட்டான் என்ற தங்கள் நிரூபணமானது அனுபவவிருத்தமாய் இருக்கிறது

ஸ்ரீ ஸ்ரீ:- இது சமத்காரமான வார்த்தை, ஆயினும் இது பொருந்துவதில்லை. இது ரஜ்ஜுதான் இது ஸர்ப்பமன்று என்று ஆப்தவாக்கியத்தால் தெரிந்துகொண்டு, ஆப்தவாக்யத்தில் விசுவாசம் வைத்திருப்பவன் புன: பயத்தை அடையமாட்டான்.

ரங். சா:- வெங்கட்டராமசாஸ்திரிகள் சொல்வதை ஸ்ரீ ஸ்ரீகள் ஒப்புக்கொள்வதில்லை. அனுபவமுண்டென்று சாஸ்திரிகள் சொல்லுகின்றார். அனுபவமில்லையென்று ஸ்ரீ ஸ்வாமிகள் சொல்லுகிறார். இதற்கென்ன செய்யலாம் அவர்கள் சொல்வதைத்தான் அவர்கள் மீண்டும் சொல்லுகிறார்கள். நாம் சொல்வதைத்தான் நாம் சொல்லுகிறோம்.

ஸ்ரீ ஸ்ரீ:- அப்படியன்று சாஸ்திரிகள் சொல்லும் அனுபவத்தை ஒப்புக்கொண்டு அதற்கு மேல் சில வைலக்ஷண்யத்தைக் காட்டி அத்வைத ஞானத்தில் விசுவாசமுள்ளவன் கர்மத்தில் பிரவிருத்தமாவது அஸம்பாவிதமென்று காட்டுகிறோம். கேளுங்கள், ஏன் அவஸரப்படுகிறீர்கள். சாவகாசமாய் தத்வவிசாரத்தைச் செய்வோம். ரஜ்ஜு ஸர்ப்ப பிரமத்தை அடைந்தவன் ஆப்தனால் இது ரஜ்ஜுதான் இது ஸர்பமன்று என்று அறிந்து கொண்டு அர்த வாக்யத்தில் விசுவாசம் வைத்திருப்பினும் அவன் நடுங்கிக் கொண்டிருப்பான். இந்த அனுபவம் யதார்த்தம்தான். ஆயினும் இதில் அறிந்துகொள்ளவேண்டிய சூக்ஷ்மம் ஒன்றுண்டு. இது ரஜ்ஜுத்தான் இது ஸர்ப்பமன்று என்று ஆப்தனிடமிருந்து கேட்டவுடனேயே அந்த ரஜ்ஜுஸர்ப்பபிரமமானது ஸம்பூர்ணமாய் நஷ்டமடைகிறது. அதன்பயம் பறந்துபோய்விட்டது. அவன் புன: பிரமத்தையும் பயத்தையும்அடையமாட்டான், ஆனால்பூர்வக்ஷணத்திலிருந்த பிரமத்தால் உண்டானபயத்தால் உண்டாயிருந்த அவனுடைய ஹிருதயத்தின் உத்வேகமானது குறைவடைய 5 6-நிமிஷங்கள் வேண்டும். அதன்பிறகு அந்த சரீரகம்பம் நின்று போய்விடும் ஒவ்வொருதடவையிலுமவன் அந்தபூர்வக்ஷணத்தின் பிராந்தியால் அத்யந்தம்திகிலை அடைந்துவந்தால் அவனுடையநடுக்கமானது புன: அந்தக்கயிறை நோய்பார்த்தபின்பும்நிற்காமல்போய்

தேகம் நடுங்கிக்கொண்டே இருக்கும். ஆனால் ஆப்தனால் இது ரஜ்ஜுவென்று தெரிந்தவுடனேயே அவனுடைய பிராந்தியானது நஷ்டமாயிற்று. அவனுடைய ஹிருதயத்தில் நூதனமானபயமுண்டாகிறதில்லை. ஆகவே நூதனமானதேககம்பாதிகளுமுண்டாகமாட்டா. லோகானுபவம்இப்படித்தான் இருக்கிறது. மதாாசுக்கு நான் போகவேண்டியிருக்கையில்கும்பகோணத்தையே மதராஸ் என்று நான் ஆப்தவாக்யத்தால் தெரிந்துகொண்டவுடனே எனக்கு அவனுடைய வாக்யத்தில் விசுவாஸமிருந்தால் நான் முன்னுக்கு ஓர் அடியும் எடுத்துவைக்கமாட்டேன். ஆனால் பூர்வத்தில் நான் ப்ரயத்ன பூர்வமாய் வேகத்தால் பாதிமுன்னுக்கு ஓட்டினகாலை பின்னுடி உடனே எடுக்கமுடிவதில்லை அல்லதுநான் ஒடிக்கொண்டிருந்தால்முன்வேகத்தால்3, 4-அடிகள்வரைமுன்னேநடப்பேன். ஆனால் பிறகுபுன:பிரவிருத்தியுண்டாகாது. இதேவிதமாய் அத்வைதசாஸ்திரத்தால் கர்மாதிகள் நிஷ்பலமானவைகள். கர்மங்களை, முமுக்ஷு (மோக்ஷத்தை விரும்புகிறவன்.) அனுஷ்டிக்கக் கூடாது என்ற தத்துவத்தை தெரிந்து அதில் நாம் பிராமாண்ய புத்தியை வைத்தால் தேவதாதி விஷயகமான பிராந்தியானது நமக்கு நஷ்டமாகிறது. நாம் சாஸ்திரவிருத்தமென்று தெரிந்துகொண்டு நூதன கர்மங்களை புன: புன: செய்யமாட்டோம். சாஸ்திரத்தால் பரோக்ஷஞானத்தை அடைவதற்குமுன் பூர்வக்ஷணத்திலிருந்த ப்ராந்தியாலுண்டான ஆஸ்திகபுத்தியின் வேகத்தால் ஒன்றிரண்டு கிரியைகள் நடக்கலாம். பிறகு நிஷ்பலமென்று நம்பி கர்மாதிகளில் எந்தக்காரணத்தாலும் ஞானியானவன் பிரவிருத்திக்கமாட்டான். ஒரு அயோக்யனுக்கு முதலில் நாம்ஆயிரம் ரூபாயைகடன்கொடுத்திருப்பதாய் வைத்துக்கொள்வோம். அவன் அயோக்யனென்று ஆப்தவாக்யத்தால் அறிந்துகொண்டபின்பு புன: புன: நாம் அவனுக்கு பணத்தைக் கடன் கொடுக்கமாட்டோம். ஆனால் முன் கொடுத்த பணத்தை ஒரே நிமிஷத்தில் வசூல் செய்ய முடிவதில்லை ஆனால் சிறிது காலம் கழித்து அந்தபணம் திரும்பிவரும். இப்படியே தான் அத்வைதசாஸ்திரத்தின் பரோக்ஷஞானமுள்ளவன் குருவின் வாக்யத்தை நம்பி புன: புன: நூதனமான கர்மங்களில் பிரவிருத்தனுவது அஸங்கதமானது.

ரங். சாஸ்:- எனக்கு இந்தவிஷயம்சரியாய்படவில்லை. இதற்கு மேல் நாம் இன்னமும் விசாரம் செய்யவேண்டியிருக்கிறது.

ஸ்ரீ ஸ்ரீ:- அப்படியே ஆகட்டும். நாளைபதினம் இதே விஷயத்தை விசாரம் செய்யவேண்டும்.

---

# ஸ்ரீ வேதாந்தவிமர்சினீ ஸபை
# 8-வது நாள் நடவடிக்கை.

## 11—3—31. புதவாரம்.

இன்று ஸ்ரீ ஸ்ரீவாமிகள் அக்ராஸனத்தின்கீழ் மூன்று மதத்தினர்களான அனேகவைதிகலௌகிகர்களெல்லோரும் சேர்ந்து சாரதா விவாகசட்டத்தால் ஏற்பட்டிருக்கும் சங்கடங்களைப்பற்றி பேசி அவைகள் நீங்கஉபாயங்கள் என்னவென்பதைப் பற்றி யோசித்தனர். ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகள்சாரதாசட்டமானதுபிராம்மணர்களின்தர்மத்திற்கு விரோதமென்று பிமாணபூர்வகமாய் காட்டினார், பிறகு அவருடைய ஆக்ஞையின் பேரில் காபே, ராமச்சந்திராசாரியார், வெங்கட்டராமசாஸ்திரிகள், தாதாசாரியார் இவர்கள் ப்ரௌடா விவாஹத்தை ஆமோதிக்கும் ஜனங்களின் ஆபாஸமான யுக்திகளை எடுத்துச்சொல்லி அவைகளை நிராகரித்துப்பேசினர். ஸமாவேசன மந்திரமும் ஸோமோ கந்தர்வ முதலான சுருதிகளும் கன்னிகைகளின் விவாகத்திற்குத் தான் சாதகமென்றும் ப்ரௌடா விவாஹத்திற்கு பாதகமென்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் விவரித்துக்காட்டினார். பிறகு எல்லோரும் ஏகோபித்து, ராஜாபகதூர் ஜி. கிருஷ்ணமாச்சாரியார் கொண்டுவந்திருக்கும் பாலிகா விவாஹ சட்டத்திருத்த மசோதாவை கடைசிபக்ஷமாய் ஒப்புக்கொள்வதாயும் அவ்வாறே அந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்றும் கனம் வைசிராய் அவர்களுக்கு தந்திகொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. மறுநாள் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி தஞ்சை ஜில்லா பிராம்மண மஹாஸபையின் காரியதரிசிகள் மஹாலிங்கய்யர் பி.ஏ., பி.எல். கோபாலதேசிகாசாரியார் இவர்களால் தந்தி கொடுக்கப்பட்டது. பத்திரிகைகளிலும் பிரசுரம்செய்யப்பட்டது.

---

## 9-வது நாள் நடவடிக்கை.

12-3-31 குருவாரம்.

இன்று காபே ராமச்சந்திராசாரியார் ஸ்ரீபகவத்கீதையில் விஷ்ணு ஸர்வோத்தமத்வம் ஜீவப்ரம்மர்களின் பேதம் முதலிய ஸ்ரீ மத்வமதப்ரமேயங்கள் தான் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை ஸ்ரீஸ்ரீ ஸ்வாமிகளால் சமீபத்தில் எழுதப்பட்டுதமிழில்தயாரிக்கப்பட்டுள்ள கீதாபுஸ்தகத்தினின்றும் எடுத்துக்காட்டி உபன்யாஸம் செய்தார். ஸ்ரீஸ்வாமிகள் எழுதிய கீதாபாஷ்ய புஸ்தகம் தமிழில் கும்பகோணத்தில் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் பாகவத ரங்கனாதாசாரியாரால் தயாராகி அச்சாகிக்கொண்டுவருகிறது.

---

## 10-வது நாள் நடவடிக்கை.

13-3-31 சுக்ரவாரம்.

இன்று மைசூர் H சுப்பராவ் எம்., ஏ. உபன்யாஸம் செய்தார். அத்வைதமதம் ஒன்றுக்கொன்று முறண்பட்டதாயும் விருத்தமானதாயுமுள்ள வசனங்களைக் கொண்டிருப்பதால் வேதத்தில் பிரவேசிக்கஅருகமாக இல்லை என்பதைநிரூபித்துக்காட்டினார்

---

## 11-வது நாள் நடவடிக்கை.

14-3-31 சனிவாரம்.

T. R. ரெங்கசாமி அய்யங்கார் எம். ஏ., எல்.டி. ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகளை பக்தியின் ஸ்வரூபம் எது? கண்ணுக்குப் புலப்படாதிருக்கும் பகவானிடம் பக்தி செய்வது எப்படி சாத்யமாகும்? ப்ராணயாமாதி யோகாப்யாஸம் ஞான சாதனத்திற்கு அவசியமா? இவை முதலிய பிரச்னைகளைச் செய்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் லௌகிக யுக்திகளுடன் இவைகளுக்கு மறுமொழி கூறினர்.

1. பக்தியென்றால் பரமாத்மா சர்வோத்தமரென்னும் தத்வ ஞான பூர்வமாய் அவரிடம் செய்யும் அதிசயமான ப்ரீதியாகும். பெண்டுபிள்ளை, மித்திராள், வீடு, பொருள், இவைகளில் காட்டும் அன்பை விட அதிகமான அன்பைக்காட்டவேண்டியது.

2. பகவான் கண்களுக்குத் தெரியாமலிருந்தாலும் வேதாதிகளால் அவருடைய ஸத்வகுணங்களை அறிந்து அவரிடம் ப்ரீதியை செய்யலாம். ஒருவன் எப்படி தூரதேசத்தில் தனக்கு பிள்ளை பிறந்ததாய் ஓர் கடிதம் மூலமாய்த் தெறிந்தவுடன் அவனை நேரில் பார்க்காமலிருந்தும் மகன் அங்கே பலகாலம் விருத்தியடைந்த போதிலும் அவன் சம்பந்தமான யோகக்ஷேமக் கடிதங்களைப் பார்த்து எப்படி சந்தோஷப்பட்டு அவனிடம் அன்பு காட்டுகிறானோ அப்படித்தான் வேதாதிகளால் அவருடைய குணங்களை அறிந்து அவரிடம் பக்தியைச் செய்யலாம்.

3. யோகமென்பது சித்தசுத்திக்குக் காரணந்தான். வீட்டை விலக்குவது எப்படியோ அப்படித்தான் ப்ராணாயாமாதிகளால் சித்தம் சுத்தப்படுத்தப்பட்டுபகவத்த்யானத்திற்கு அனுகூலமாகிறது. ப்ராணாயாமத்தால் அவ்வளவுதான் பிரயோஜனமே ஒழிய அதனால் முக்தியென்று சொல்லமுடியாது.

---

# 12-வது நாள் நடவடிக்கை.

## 15-3-31 பானுவாரம்.

இன்று ஏகாதசிஉபவாஸமானதால் சபைநடத்தப்படவில்லை.

---

# 13-வது நாள் நடவடிக்கை.

## 16-3-31 சோமவாரம்.

இன்று R.V. கிருஷ்ணமாசாரியார் அத்வைதமதப்படி ப்ரமம் உற்பத்தியாவதற்குக்காரணமில்லைஎன்று ஸ்ரீ ஸ்ரீ அவர்கள் பூர்வம் சொன்னதை அனுவாதம்செய்து பிரமம் அஜ்ஞதி என்று சொல்லலாமே அதில் தோஷமென்ன என்று பிரச்னை செய்தார். ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகள் அப்படிச் சொல்வதால் அனவஸ்தை என்னும் தோஷம் வரும் என்பதைத் தெளிவாய் காட்டினர். இந்த அனவஸ்தை தோஷமானது பீஜாங்குரபரம்பரைபோல் எண்ணப்படமுடியாது என்றும் இது அந்தபரம்பரைப்போல் தோஷாஸ்பதமென்றும் காட்டினர்.

---

# 14-வது நாள் நடவடிக்கை.

## 17-3-31 மங்களவாரம்.

இன்று கல்கத்தாவிலிருந்து மகாமகோபாத்யாய அனந்த கிருஷ்ணசாஸ்திரிகளும் ப்ரொபெஸர் சுந்தராமய்யர்வாளும் மற்றும் சிலரும் ஸ்ரீஸ்வாமிகளின் ஸன்னிதானத்திற்கு சுமார் 3-மணிக்கு வந்தனர். மறுநாள் 18—3—31முதல் அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் நடத்தப்போகவிருக்கும் துவைதாத்வைதவிவாதத்தின் சௌகரியத்துக்காகவென்று அடியிற்கண்ட நியமங்களை ஏற்படுத்திக்கொண்டனர். அதை இருகக்ஷியினரும் அங்கீகரித்தனர். அவர்கள் ஏற்படுத்திக்கொண்ட நியமங்களாவன:—

(1) பகவத்கீதை துவைதத்தைத் தெரிவிக்கிறதா அல்லது அத்வைதத்தைத் தெரிவிக்கிறதா என்பது முதலில் விசாரிக்க வேண்டிய விஷயம்.

(2) விசாரிக்கவேண்டிய விஷயத்தைத் தீர்மானிப்பதற்காக இருபக்ஷத்தாரும் தம் தம் மதத்திற்கு ஸாதகமாகவும் பிறமதத்துக்கு பாதகமாகவும் பேசவேண்டிய விஷயத்தை எழுத்துமூலமாக கொடுக்கவேண்டும்.

4

(3) இந்த விசாரம் நடக்கும்போது கீதாவாக்யத்தைத் தவிற வேறு யாதோரு வேதாந்த பிரமாணத்தையும் எடுத்துக்காட்டக் கூடாது. பதங்களுடைய அர்த்தத்தை நிச்சயிக்கும்பொழுது, முடியுமானல் கீதாவாக்யத்தையே மேற்கோளாகக் கொள்ளவேண்டும்

(4) த்வைதிகளையும் அத்வைதிகளையும் தவிர்த்து வேறு எவரும் வாதம் செய்ய இடம் கொடுக்கக்கூடாது.

(5) முதல்தினம் விசாரிக்கப்பட்ட விஷயம் மறுதினம் ஆரம்பமாவதற்குமுன்னமே அன்றன்று வ்யவஸ்தாபகர்களாக ஏற்படுத்தப்பட்ட மூன்று மனுஷ்யர்களுள் ஒருவருடையவாவது கையெழுத்துடன் வெளிப்படுத்தவேண்டும். இவ்வாறு கையெழுத்துப் போடாமல் வெளிவரும் ஸபையின் நடவடிக்கையின் முறை நம்பத்தக்கதில்லை.

(6) பிரம்மஸூத்திரம் உபநிஷத் இவைகளிலும் இம்மாதிரி விசாரம் செய்யவேண்டும்.

(7) பிறகு மூன்றையும் சேர்த்து இதேமுறையில் பலாபல விசாரம் செய்யவேண்டும்.

(8) ஒவ்வொரு நாளும் ஸாயங்காலம் $6\frac{1}{2}$மணிமுதல் $8\frac{1}{2}$மணி வரை விசாரம் நடைபெறவேண்டும்.

(9) இந்த சபை தத்வவிசாரத்திற்காகவே நடைபெறுகிறது. சிரத்தையுடன் கேட்பவர்களின் மனதை தெளிவித்து சந்தோஷப் படுத்துவதுதான் இந்த சபையின் முக்ய நோக்கம். விசாரம் மிக்க ஸஹோதரப்பான்மையிலேயே நடைபெறும்.

இத்துடன் இன்று சபை கலைந்தது.

---

# 15-வது நாள் நடவடிக்கை.

## 18—3—31. புதவாரம்.

இன்று சபை துவக்கும்முன் கும்பகோணம் யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் இந்த சபையை நடத்துவதால் அத்வைதிகளின் மனம் மிகவும் கலக்கமுற்றிருப்பதால் இதில் தனக்கிஷ்டமில்லை

என்று அறிவித்தார். ஸ்ரீஸ்வாமிகள் இதற்கு தாம் காரணமில்லை என்றும் திருவண்ணாமலையின் ஓர் பத்திரிகை நிரூபர்மூலமாய்தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலியோர் வாதத்திற்கு பஹிரங்கமாய் தம்மை அழைத்ததாயும் சபையில் சகோதரப்பான்மையுடன் வேதாந்தவிசாரம் செய்வதால் யாதொரு பாதகமுமில்லையென்றும் அப்படி வாதமாடுவதில் ஜனங்களுக்கிஷ்டமில்லாவிடில் தாம் சபையை நிறுத்திவிடத் தயாராக இருப்பதாயும் அறிவித்தார். பிறகு அநந்தகிருஷ்ணசாஸ்திரிகள் சாஸ்திரவிஷயங்களை சபையில் விவாதம் செய்வதால் ஏற்படும் நன்மைகளை எல்லாம் நன்கு அறிவித்ததுடன் இங்குள்ள சபையோர்களின் மனம் ஸ்ரீஸ்வாமிகள் கூறிய பதிலால் திருப்தியடைந்து உரக்க அனைவரும் கோவிந்தநாம ஸங்கீர்த்தனம் செய்து அனுமதித்திருப்பதால் வாதத்தைத் துவக்கலாமென்று வற்புறுத்தினர். ஸ்ரீஸ்வாமிகள் மீண்டும் இவர்களின் சம்மதியைக்கேட்க கோபாலதேசிகாசாரியார் அத்வைதிகள் இந்த வாதத்தால் மிகவும் வருத்தமுற்றிருப்பது உண்மையே என்று அறிவிக்க, சேங்காலிபுரம் ஸ்ரீனிவாஸய்யர் அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள்இவர்கள் அதை பொருட்படுத்தலாகாதெனச்சொல்லி விவாதத்தை நடத்தவற்புறுத்த, புரொபஸர் சுந்தரராமய்யர் வாதத்தை நடத்துவதில் தனது சம்மதியை அறிவிக்க, யஜ்ஞஸ்வாமி சாஸ்திரிகளும் இந்தக்காரணமெல்லாம் தமக்குத் தெரியாதென்று சொல்ல, மீண்டும் ஏகோபித்து அனைவரும் கோவிந்தாவென்று நாமோச்சாரணம்செய்துதங்கள்மன:ப்ரஸாதத்தைக்காட்ட, சபை ஆரம்பிக்கப்பட்டது.

பிறகு அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள் முன் செய்துகொண்ட விவஸ்தைப்படி (2-வது நியமவிதியின்படி) சில விஷயங்களை அவைகள் அத்வைதத்திற்கு சாதகமானதென்றும் துவைதத்திற்கு பாதகமானதென்றும் எழுதிக்கொண்டுவந்து அவைகள் விசாரத்திற்காக சபையில் கொண்டுவரப்படுவதற்குமுன்பு அவைகளடங்கிய ஸ்டேட்மெண்டில் எழுதியுள்ள நான்கு விஷயங்களை மட்டில் ஸங்கிரஹமாய் பிரமாணங்களைக் காட்டி உபன்யாஸம் செய்தார். அன்று அடியிற்கண்ட நான்கு விஷயங்கள்தான் சபையில் விவாதத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அந்த விஷயங்களாவன:—

i ஜீவர்கள் வியாபகர்கள்.

ii ஜீவப்ரம்மர்களில் அபேதமுண்டு.

iii ஜீவன் ஒருவனே.

iv ஜீவேசுவரர்களின் கர்த்தாவாயிருத்தல் சமானமே அல்லது கல்பிதமே.

இந்த நான்கு விஷயங்களும் அத்வைதிகளுக்கு பொருத்தமானவைகள், துவைதிகளுக்கு விருத்தமானவைகள். இந்த விஷயங்களுக்கு ஸாதகமாக அநந்தகிருஷ்ணசாஸ்திரிகள் பகவத்கீதையின் வசனங்களை உபன்யஸித்து கீதையில் துவைதமதத்திற்கு ஸாதகமான ப்ரமேயங்களில்லையென்றும் அதற்கு மாருக அத்வைதிகளுக்கு ஸம்மதமான விஷயங்கள்தான் காணப்படுகின்றன என்றும் சொல்லி மறுநாள் மற்ற விஷயங்களைச் சொல்வதாய் பிரஸங்கத்தை முடித்தார்.

நேரமாகிவிட்டதால் இத்துடன் இன்று சபை கலைந்தது.

## 16-வது நாள் நடவடிக்கை.

### 19-3-31 குருவாரம்.

இன்று வழக்கப்படி பெருங்கூட்டமும் சிதம்பரம் மகாமகோபாத்யாய தண்டபாணிதீக்ஷிதர் முதலியோரும் வந்திருந்தனர். சபை ஆரம்பிக்கப்படும்முன் முதல்நாள் அநந்தகிருஷ்ணசாஸ்திரிகளால் விவாதத்திற்காகக்கொண்டுவரப்பட்டிருந்த நான்குவிஷயங்களை இன்று விசாரம் செய்தபிறகு மற்ற விஷயங்கள் கொண்டுவரப்படலாமென்று அநேகரின் அபிப்பிராயப்படி தீர்மானிக்கப்பட்டது. அந்த நான்கு விஷயங்களைப்பற்றியுள்ள ஓர் ஸ்டேட்மெண்டை அநந்தகிருஷ்ணசாஸ்திரிகள் சபையில் கொடுத்துவிட்டு ஸ்ரீஸ்வாமிகள் என்ன விஷயம் விசாரிக்கப்படவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிருர் என்பதை அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிகள் தாம் எழுதிக்கொண்டுவந்த ஸ்டேட்மெண்டை சபையில் கொடுத்தார். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

1. ஸ்ரீகிருஷ்ணர்தான் பரபிரம்மம். ஸ்ரீ கிருஷ்ணரைத்தவிர வேறு நிர்குணபிரம்மமென்பதில்லை. அவரே ஸர்வோத்தமர். அவர் ஜகத்சிருஷ்டிக்கு கர்த்தாவாயிருத்தல் முதலானதர்மங்களைக் கொண்டவர்.

2. ஜீவேசுவரர்களில் பேதமும் அந்த பேதத்தைக் காட்டக் கூடிய தர்மங்களும்,

3. ஜகத்தின் ஸத்யத்வம் முதலான விஷயங்களும்,

பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஜீவேசுவரர்களின் ஐக்யம், ஜகத்தின் மித்யாத்வம் (பொய்யாயிருத்தல்) பிரம்மத்திற்கு ஸர்வகுணமில்லாமை முதலான விஷயங்கள் பகவத்கீதையில் சொல்லப்படவில்லை. இந்த விஷயங்கள்தான் ஸபையில் விசாரிக்கப்படவேண்டுமென்று ஸ்ரீஸ்வாமிகள்எழுதிக்கொடுத்தார்.

*அனந்த:*— முன் கூறப்பட்ட நான்கு விஷயங்களில் எது விசாரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்?

*ஸ்ரீஸ்ரீ:*— விசாரம் செய்யப்படவேண்டிய விஷயங்களில் ஜீவபிரம்மர்களின் அபேதமென்பது முக்யமாதலால் அதைத்தான் இப்பொழுது விசாரிப்போம்.

*அநந்த:*— ஜீவபிரம்மர்களின் பேதத்தை அறிவிக்கும் வாக்யங்கள் இன்னதென்பதை கீதையிலிருந்து எடுத்துக்காட்ட வேண்டும்.

*ஸ்ரீஸ்ரீ:*- சரி அப்படியே அந்த வாக்யங்களைக் காட்டுகிறோம்.

1. **उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः ।**
(உத்தம: புருஷஸ்த்வன்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:)

2. **न त्वेवाहं जातुनासं नत्वं ने मे जनाधिपाः ।**
(நத்வேவாஹம் ஜாதுநாஸம் நத்வம் நேமே ஜனாதிபா:)

3. **मत्तः परतरं नान्यत्किंचिदस्ति धनंजय ।**
(மத்த: பரதரம் நான்யத்கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய)

4. **अविभक्तं विभक्तेषु ।**
(அவிபக்தம் விபக்தேஷு)

*அநந்த:*— இவ்வளவுதானா?

*ஸ்ரீஸ்ரீ:*— **सर्वापि गीता** எல்லா கீதையும்தான்.

*அனந்த:*— இவைகள் எப்படி ஜீவேசுவரர்களின் பேதத்தை சாதிக்கிறதென்பதைக் காட்டவேண்டும்.

*ஸ்ரீஸ்ரீ:*— நாம் காட்டிய சுலோகங்களில் பேதத்தை ஸ்பஷ்டமாய் போதிக்கக்கூடிய அன்யமுதலான பதங்கள் காணப்படு

கின்றனவே. அபேதவிஷயத்தில் எங்கேயாவது கீதையில் ஸ்பஷ்டமாய் அபேதத்தை போதிக்கக்கூடிய அபின்ன அனன்ய முதலான பதங்களிருந்து வருகின்றனவா? காட்டுங்கள்.

அனந்த: ஜீவேசுவரர்களின் அபேதவிஷயத்தில் [அபின்ன அநன்ய முதலான பதங்களில்லாமலிருந்தபோதிலும்]

1. क्षेत्रज्ञं चापि मां विद्धि
க்ஷேத்திரக்ஞம் சாபிமாம் வித்தி

2. ज्ञानी त्वात्मैव मे मतम् ।
(ஞானீத்வாத்மைவ மே மதம்)

3. सर्वभूतान्यशेषेण द्रक्ष्यस्यात्मन्यथोमयि ।
(ஸர்வபூதான்யசேஷேண த்ரக்ஷ்யஸ்யாத்மன்யதோமயி)
முதலியவை பிரமாணங்களாகின்றன.

ஸ்ரீஸ்ரீ:— 'க்ஷேத்திரக்ஞம் சாபிமாம் வித்தி' என்னும் சுலோகம் எப்படி அபேதத்தை போதிக்கும்?

அனந்த:— 'க்ஷேத்திரக்ஞம் சாபி' என்பதில் க்ஷேத்திரக்ஞனென்னும் பதம் ஜீவனைச்சொல்லுகிறது. மாம் என்பது பரமாத்மாவைச் சொல்லுகிறது. இந்த வாக்யத்தில் க்ஷேத்திரக்ஞம் மாம் இந்த இரண்டு பதங்களும் ஒரே வேற்றுமையுடனிருப்பதால் அதாவது ஸாமாநாதிகாணியமிருப்பதால்இந்த வாக்யத்திற்குஜீவன் பரமாத்மாவிடமிருந்து தனிப்பட்டவனன்று அதாவது அபின்னனே என்று அர்த்தமாகிறது.

इदं शरीरं कौन्तेय क्षेत्रमित्यभिधीयते । एतद्योवेत्तितं प्राहुः क्षेत्रज्ञ इति तद्विदः । (இதம் சரீரம் கௌந்தேயக்ஷேத்ரமித்யபிதீயதே ஏதத்யோவேத்திதம் ப்ராஹு: க்ஷேத்ரக்ஞ இதி தத்வித:) என்னும் முன் சுலோகத்தால் க்ஷேத்திரக்ஞனென்னும் பதம் ஜீவனைச் சொல்லுவதாய்த் தெரிகிறது. ஆதலால்ஜீவபிரம்மர்களின் அபேதம் இந்த வாக்யத்தால் போதிக்கப்படுவதாய் சித்தித்தது.

ஸ்ரீஸ்ரீ:— க்ஷேத்திரக்ஞனென்னும் பதம் ஜீவனைச்சொல்வதாயிருக்குமாயின்ஸமாநாதிகாணத்தால் அந்த ஜீவபிரம்மங்களின் அபேதத்தை அந்த வாக்யம் போதிப்பதாய் அறிந்துகொள்ளலாம். ஆனல் அப்படி இல்லை. "இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்திரமித்யபிதீயதே" என்று பகவான் முதலில் சொல்லி அடுத்தாப்

போல் "ஏதத்யோவேத்திதம்ப்ராஹு: க்ஷேத்திரக்ஞ இதி தத்வித:" என்று சொல்லியிருப்பதால் க்ஷேத்திரத்தை (சரீரத்தை) அறிந்தவன் க்ஷேத்திரக்ஞனுவான் என்று ஸ்ரீ கிருஷ்ணரே க்ஷேத்திரக்ஞசப்தத்திற்கு அர்த்தத்தை அறிவித்திருப்பதாய் ஆகிறது. க்ஷேத்திரசப்தத்தால் இந்த சரீரத்தை எடுத்துக்கொண்டாலும் பரமாத்மாவும் க்ஷேத்திரத்தை அறிந்தவராதலால் க்ஷேத்திரக்ஞன் பரமாத்மாவும் ஆகலாம். (ஜீவன்தான் என்று சொல்லவேண்டியதில்லை.) தவிரவும் க்ஷேத்திரமென்பது இந்த சரீரமாகமாட்டாது.

ஏனெனில் **तत्क्षेत्रं यच्चयादृक्च यद्विकारि यतश्चयत् । सचयो यत्प्रभावश्च तत्समासेन मे श्रुणु ॥** (தத்க்ஷேத்ரம் யச்சயாதருக்ச யத்விகாரியதஸ்சயத் ] ஸசயோ யத் ப்ப்பாவஸ்ச தத்ஸமாஸேன மே ச்ருணு) என்று முதலில் சொல்லிவிட்டு பிறகு **महाभूतान्हंकारो बुद्धिरव्यक्तमेव च । इंद्रियाणि दशैकं च पञ्चचेंद्रियगोचराः ॥ एतत्क्षेत्रं समासेन सविकारमुदाहृतं ।** (மஹாபூதான்யஹங்காரோ புத்திரவ்யக்த மேவச ] இந்திரியாணி தசைகம் ச பஞ்சசேந்திரிய கோசரா: ]] ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரமுதாஹ்ருதம் ]]) என்று சொல்லியிருப்பதால் இந்த சுலோகங்களில் மகாபூதம் முதல் திருதிவரையிலுள்ள ஸவிகாரமான எல்லா தத்வங்களும் க்ஷேத்திரமென்னும் பதத்தின் அர்த்தமென்றுதான் ஸ்ரீகிருஷ்ணர் அறிவித்திருக்கிறார்.

'தத்க்ஷேத்ரம் யச்ச' என்னும் சுலோகத்திற்கு ஸ்ரீசங்கராசாரியாள் **यन्निर्दिष्ट मिदं शरीरमिति तत्तच्छब्देन परामृशति ॥**

(யன்னிர்திஷ்டமிதம் சரீரமி திதத்தத்சப்தேன பராமிருசதி) "இதம் சரீரம் கௌந்தேய" என்னும் சுலோகத்தில் எதுஇதம் சரீரம் என்னும் வாக்யத்தால் சொல்லப்படுகிறதோ அந்த சரீரத்தையே தத்க்ஷேத்ரமென்னும் சுலோகத்திலுள்ள தத் என்னும் பதத்தால் எடுத்துக்கொள்கிறார்" என்றிவ்வாறு தமது பாஷ்யத்தில் சொல்லியிருப்பதைக் கொண்டு க்ஷேத்திரக்ஞசப்தத்திற்கு மகாபூதாதி திருத்யந்தமான பதார்த்தங்களின் (அதாவது எல்லாபிரபஞ்சத்தின்) ஞானம் பரமாத்மாவுக்குத்தான் பொருந்துமேயல்லாது ஜீவனுக்கு பொருந்தவே பொருந்தாது. ஆதலால் க்ஷேத்திரக்ஞன் பரமாத்மாதானுவான். அதைக்கொண்டு "க்ஷேத்திரக்ஞம்சாபி மாம் வித்தி" என்னும் சுலோகத்திற்கு மாம் என்னை (ஸ்ரீ கிருஷ்

ணமை) க்ஷேத்திரக்ஞம்-ஸகல, க்ஷேத்திரத்தை அறிந்த பரமாத்மா என்றறி என்று அர்த்தமாகிறது. ஆகவே இந்த 'க்ஷேத்திரக்ஞம் சாபி' என்னும் வாக்யத்தால் ஜீவேசுவரர்களின் அபேதம் சித்திக்கவில்லை.

அனந்த:— (1) க்ஷேத்திரக்ஞனென்னும் பதத்திலுள்ள க்ஷேத்திரபதம் இந்த சரீரத்தைச்சொல்வதாய் ஏற்பட்டாலும் அதை அறிந்தவன் பரமாத்மாவும் ஆவானென்றும் (2) க்ஷேத்திர பதம் மகாபூதம்முதல் திருதிவரையிலுள்ள பதார்த்தங்களைச் சொல்வதாய் பகவத்கீதையில் இனி சொல்லப்போகிற வாக்யங்களால் தெரியவருவதால் அந்த பதார்த்தங்களை அறிந்தவன் க்ஷேத்திரக்ஞன் பரமாத்மாதானென்றும் ஸ்ரீஸ்வாமிகள் இரண்டு ப்ரகாரமாய்ச் சொன்னார்கள். முதல் பக்ஷத்தைப்பற்றி பின்பு விசாரிக்கிறேன். இப்பொழுது இரண்டாவது பக்ஷமாகிய க்ஷேத்திரபதத்தின் அர்த்தம் மகாபூதம்முதல் திருதிவரை என்பதைப் பற்றி சிறிது விசாரம் செய்கிறேன்.

(1) "ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரமுதாஹ்ருதம்" என்னும் சுலோகத்தில் க்ஷேத்திரத்திற்கு விகாரம் சொல்லப்பட்டிருக்கிறது. க்ஷேத்திரக்ஞனென்னும் பதத்திலுள்ளக்ஷேத்திர பதத்தின் அர்த்தம் அந்தக்ஷேத்திரத்தின் விகாரமான இச்சாதிகளுக்குக்கூட பொருந்தாது. மேலும் 'இதம் சரீரம்' என்பதால் ப்ரத்யக்ஷமாய் கண்ணிற்படும்சரீரத்தை இதம் என்னும் பதத்தால் காட்டி அதுதான் க்ஷேத்ரமென்றுபகவான் அறிவித்திருக்கிறார். இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீ சங்கரபாஷ்யம் தங்களுக்கு அனுகூலமென்றுதாங்கள் காட்டியிருக்கும் வாக்யம் தங்களுக்கு சாதகமான அர்த்தத்தை போதிப்பதாய் இல்லை. 'யன்நிர்திர்ஷ்டம்' என்பதில் பூதார்த்தத்தை (அதாவது இறந்த காலத்தை) போதிக்கும் त प्रत्ययम् த ப்ரத்யயம் (த என்னும் விகுதி) இருப்பதால் அந்த பதத்தால் அறிவிக்கப்படும் நிர்தேசமானது பின்னடி சொல்லப்பட்டிருந்ததாய் அர்த்தமாகிறது. அதனால் இறந்த காலத்தை அறிவிக்கும் நிர்தேசமானது இதம் சப்தத்தால் சொல்லப்பட்டதாயும் ப்ரத்யக்ஷசித்தமுமான கேவல சரீரத்திற்குத்தான் பொருந்துமேயல்லாதுஇனிமுன்னடிசொல்லப் படப்போகும் மகாபூதாதி திருத்யந்த பதார்த்தங்களுக்கு பொருந்தாது. ஆதலால் க்ஷேத்திரக்ஞசப்தம் பரமாத்மாவைத்தான் போதிக்கிறதென்று ஸ்ரீஸ்வாமிகள் கூறும் வழி சரியாக இல்லை.

தவிரவும் (2) க்ஷேத்திரக்ஞசப்தம் பரமாத்மாவை போதிப்பதாய் இருந்தால் மாம் என்னும் சப்தமும் பரமாத்மாவை போதிப்பதன் நிமித்தம் மாம் மாம் என்னை என்னை என்று பகவான் சொன்னது போலாகி "க்ஷேத்திரக்ஞம்சாபி மாம் வித்தி" என்னும் வாக்யம் சரியானபடி சாப்தபோதத்தை உண்டுபண்ணுது.

ஸ்ரீ ஸ்ரீ:— பகவான் 'இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்திரம்' என்று ஆரம்பித்து "தத்க்ஷேத்திரம் யச்சயாதிருக்ச............. தத்ஸமாஸேனமே ச்ருணு" என்று அர்ஜுனனுடைய கவனத்தை இழுத்து அவனை தன் வார்த்தையை கவனிக்கும்படி செய்து கொண்டு "மஹாபூதான்யஹங்கார: ............... ஸவிகாரமுதாஹிருதம்" என்று சொல்லி முடித்திருக்கிறார். ஆதலால் "ஸவிகாரம் ஏதத்க்ஷேத்திரமுதாஹிருதம்" என்று பகவானின் வசனமிருப்பதைக்கொண்டு மகாபூதம்முதல் திருதிவரையிலுள்ள பதார்த்த சமுதாயம் க்ஷேத்திரபதத்தின் அர்த்தம் என்றிருப்பதை யார்தான் தடுக்கமுடியும்? [அப்படியென்றால் மகாபூதாதி திருதிவரையிலுள்ள பதார்த்தசமுதாயங்கள் என்பதுதான் க்ஷேத்திரசப்தத்தின் அர்த்தமென்பது கீதாவாக்யத்திலிருந்தே சித்திக்கிறது.]

தவிரவும் இந்த சுலோகத்திற்கு வியாக்யானம் செய்யும் பொழுது ஸ்ரீசங்காராசாரியாள் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

**तदुपसंहरति एतत्क्षेत्रं समासेन । सविकारं सहविकारेण महदादिना उदाहृतं उक्तम् ॥ यस्य क्षेत्रभेदजातस्य संहतिः इदं शरीरं क्षेत्रमित्युक्तं तत्क्षेत्रं व्याख्यातं महाभूतादि भेदभिन्नं धृत्यन्तम् ।** (தது பஸம்ஹரதி ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரம் ஸஹவிகாரேண மஹதாதினா உதாஹ்ருதம் உக்தம் ॥ யஸ்யக்ஷேத்ரபேதஜாதஸ்ய ஸம்ஹதி: இதம்சரீரம் க்ஷேத்ரமித்யுக்தம் தத்க்ஷேத்ரம் வியாக்யாதம் மஹாபூதாதி பேதபின்னம் திருத்யந்தம்)

இந்த பாஷ்யவசனங்களால் மகாபூதாதி திருத்யந்த பதார்த்தங்கள் க்ஷேத்திரபதத்தின் அர்த்தமென்று சித்திக்கிறது.

'இதம் சரீரம்' என்பதில் சொல்லப்பட்டிருக்கும் சரீரபூதமான க்ஷேத்திரம் மகாபூதாதி திருத்யந்தமானதுதான் என்று ஸ்ரீசங்காராசாரியாள் ஒப்புக்கொண்டுதானிருக்கிறார். விகாரமாயிருக்கும் இச்சாதிகள் க்ஷேத்திரபதத்தால் அர்த்தமாவதில்லை

என்று நீங்கள் சொன்னீர்கள். ஸ்ரீசங்காராசாரியாள் இச்சாதிகளில் ஒவ்வொன்றுமே க்ஷேத்திரம்தானென்று தனித்தனியாகச் சொல்லியிருக்கிறார். ஆதலால் கீதாவாலும் சரிதான், ஸ்ரீசங்கா பாஷ்யத்தாலும் சரிதான், க்ஷேத்திரபதத்தின் அர்த்தம் மகா பூதம் முதல் திருதிவரை என்று ஏற்படுவதால் அத்தகைய க்ஷேத்திரத்தை அறிந்தவன் க்ஷேத்ரக்ஞன் பரமாத்மா ஆகிறாரே ஒழிய ஜீவன் ஆகிறதில்லை.

2. க்ஷேத்ரக்ஞசப்தம் பரமாத்மாவைபோதிப்பதாகில் மாம் என்னும்சப்தம் பரமாத்மாவின் பரமாயிருப்பதின் நிமித்தம்என்னை என்னையென்று அர்த்தமாகிறதென்று நீங்கள் சொன்னீர்கள். அப்படிச் சொல்வது சரியல்ல. ஓர் உதாஹரணம் சொல்லுகிறேன். ராமம்ஸீதாபதிம் வித்தி என்னும் ஓர் வாக்யம் இருக்கிறது. ஸீதாபதியும் ராமனும் ஒருவர்தான். ஆயினும் ஸீதாபதி என்னும் சப்தத்தால் அவரிடம் ஸீதைக்குப் பதியாயிருத்தல் என்பது இருப்பதாய் தெரியவருகிறதல்லவா? அதுபோல் க்ஷேத்திரக்ஞனென்பதால் பகவானிடம் க்ஷேத்திரத்தைஅறிதல் என்பது இருப்பதாய் ஏற்படுகிறது. ராமன் ராமனே என்றால் தோஷமுண்டு. ராமன் ஸீதாபதி என்பதால் தோஷமில்லை. அதுபோல் மாம் மாம் என்றால் தோஷமுண்டு. மாம் க்ஷேத்ரக்ஞமென்றால் தோஷமில்லை.

அனந்த: -[இடையே] "ஸர்வக்ஷேத்ரேஷு மாம் வித்தி" என்னுமிடத்தில் ஸர்வக்ஷேத்ரேஷு என்று பஹுவசனம் (பன்மை) இருப்பதன் நிமித்தம் ஸர்வக்ஷேத்ரங்களின் ஸம்பந்தமானது ஜீவனுக்குத் தான் நன்கு பொருந்துகிறது.

ஸ்ரீ ஸ்ரீ:- ஸர்வக்ஷேத்ரஸம்பந்தமானது வியாபகரான பகவானுக்குத்தான் பொருந்தும். *

இந்த இடத்தில் சொல்லவேண்டிய விஷயமொன்று உண்டு. அதாவது இந்த அத்தியாயத்தில் க்ஷேத்ரம் க்ஷேத்ரக்ஞன் இவைகளின் ஞானத்தைச் சொல்வதாய் பகவான் பிரதிக்ஞைசெய்திருக்கிறார்.

அவ்வாறு பிரதிக்ஞைப்படி பகவான் 'மகாபூதானி' முதற்கொண்டு 'ஸவிகாரமுதாஹ்ருதம்' வரையில் க்ஷேத்ரமின்னதென்

* இந்தவிஷயம் இந்தசந்தர்ப்பத்தில் இல்லாமல் வேறு சந்தர்ப்பத்தில் நடந்ததாய் கையெழுத்துப்போடும்போது சொல்லப்பட்டது.

பதை நிரூபணம் செய்தார். பிறகு க்ஷேத்ரக்ஞன் இன்னாரென்பதை நிரூபணம் செய்யவேண்டியதாயிற்று. அதனால் **ज्ञेयंयत्तत्प्रवक्ष्यामि यद्ज्ञात्वाऽमृतमश्नुते** (க்ஞேயம் யத்தத்ப்ரவக்ஷ்யாமி யத்ஞாத்வாமிருதமச்னுதே) என்னும் சுலோகத்தால் க்ஷேத்ரக்ஞர் இன்னாரென்பதை நிரூபித்தார், அந்த க்ஷேத்ரக்ஞனை அறிந்துகொள்வதற்கு சாதனங்களாயுள்ள அமானித்வம் முதலான குணங்களை 'அமானித்வமதம்பித்வம்' என்னும் சுலோகங்களால் இடையில் அறிவித்தார். இதனால் 'க்ஞேயம் யத்தத்' என்னும் சுலோகத்தால் க்ஷேத்திரக்ஞன் பரமாத்மாவென்று சொல்லப்படுவதாய் பகவத்கீதையாலேயே ஏற்படுகிறது. ஸ்ரீ சங்காசாரியாளும் கூட இந்த சுலோகத்தில் க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாதான் என்று தமது பாஷ்யத்தில் சம்மதிகொடுத்திருக்கிறார். எப்படியெனில் 'அமானித்வமதம்பித்வம்' என்னும் சுலோகத்தில் சங்கரபாஷ்யத்தின் அவதாரிகையில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. **क्षेत्रज्ञो वक्ष्यमाण विशेषणः यस्यसप्रभावस्य क्षेत्रज्ञस्य परिज्ञानात् अमृतत्वं भवति । तं ज्ञेयं यत्तत्प्रवक्ष्यामीत्यादिना सविशेषणं स्वयमेव वक्ष्यति भगवानिति ।** என்றால் எந்த சாமர்த்தியம்பெற்ற க்ஷேத்ரக்ஞனின் ஞானத்தால்மோக்ஷமுண்டாகிறதோ அந்த சாமர்த்யமாகும் விசேஷணத்தைக்கொண்ட க்ஷேத்ரக்ஞனை க்ஞேயம் யத்தத்ப்ரவக்ஷ்யாமி முதலான சுலோகங்களில் பகவானே கூறுகிறார்.

தவிரவும் 'க்ஞேயம் யத்தத்ப்ரவக்ஷ்யாமி' என்னும் சுலோகத்தால் சொல்லப்படும் க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாதானென்றுஅவசியம் சொல்லவேண்டியிருக்கிறது.ஏனெனில் 'யத்க்ஞாத்வா அமிர்தமச்னுதே' என்று க்ஷேத்ரக்ஞனை அறிவதால் மோக்ஷபலனுண்டாவதாய் சொல்லப்பட்டிருக்கிறது. மோக்ஷபலமானது பரமாத்மாவின் ஞானத்தாலன்றி வேறு எந்த ஞானத்தாலும் வராததால் க்ஷேத்ரக்ஞசப்தம் பகவானைத்தான் குறிக்கும். மேலும் அடுத்தாப்போலவே 'அனாதிமத் பரம் பிரம்ம, என்று அந்த க்ஷேத்

---

குறிப்பு:— க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி என்னும் சுலோகத்திலுள்ள க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாதான், ஜீவனன்று என்று ஸ்ரீ கிருஷ்ணர் கூறுகிறதால் க்ஷேத்ரக்ஞ சப்தம் ஜீவனைத்தான் குறிக்கிறதென்று ஸித்தமாவதில்லை-

ரக்ஞர் பரப்ரம்மமென்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது இவ்வாறிருக்க க்ஷேத்ரக்ஞசப்தத்தால் ஜீவனையெடுத்துக்கொள்வது முற்றிலும் தகாது. ஸ்ரீ சங்கராசாரியாளும் கூட அப்படித்தான் அதாவது க்ஷேத்ரக்ஞர் பரமாத்மாவென்றுதான் சம்மதித்திருக்கிறார். ஆகவே முன்னுடியுள்ள கீதாவாக்யத்தாலும் ஸ்ரீ சங்கரபாஷ்யத்தாலும் க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாதானென்று ஏற்படுவதால் 'க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி' என்னும் சுலோகத்திலுள்ளக்ஷேத்ரக்ஞன் பரமாத்மாதானுகிறான். ஆதலால் ஸ்ரீ கிருஷ்ணர் தம்மை க்ஷேத்ரக்ஞன் ஸகலக்ஷேத்ரங்களை அறிந்திருக்கும் பரபிரம்மமாய் அறி என்று சொல்லியிருப்பதைக்கொண்டு 'க்ஷேத்ரக்ஞம் சாபி' என்பது ஜீவேசுவரர்களின்ஐக்கியத்திற்குபிரமாணமாகமாட்டாது.

சபையின் காலம் கடந்துவிட்டதால் இத்துடன் இன்று சபை கலைந்தது.

---

# 17-வது நாள் நடவடிக்கை.

## 20-3-31- சுக்கரவாரம்.

ஸ்ரீ ஸ்ரீ:- 'க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்தி' என்பதில் க்ஷேத்ரக்ஞ சப்சமானது பரமாத்மாவைத்தான் குறிக்கும். க்ஷேத்ரம்-சரீரம், ஜானுதீதி-க்ஷேத்ரக்ஞனென்று வ்யுத்பத்தியை செய்துகொண்டாலும், அந்த பதத்திற்கு யோகவிருத்தியாலுண்டாகும் அர்த்தபுஷ்டி (யோகார்த்த பௌஷ்கல்யம்) பரமாத்வைத்தான் சேரும். உண்மையில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் "தத்க்ஷேத்ரம் யச்ச யாவச்சதத்ஸமாஸேனமே சிருணு" என்றுக்ஷேத்ரமின்னதென்று சொல்வதாய் ப்ரதிக்ஞை செய்துகொண்டு "மகாபூதான்யஹங்கார:...........ஸவிகாரமுதாஹிருதம்" என்பதால் எல்லா தத்வங்களும் க்ஷேத்ரந்தானென்று சொல்லியிருக்கிறார். அந்த தத்வங்களின் சமூகம்தான் சரீரமாகும். அதுவும் க்ஷேத்ரமென்னும் பதத்தின் அர்த்தம்தான். இது "யன்னிர்திஷ்டமிதம் சரீரமிதி........... தத்தத்சப்தேன பராமிருசதி" என்று ஸ்ரீ சங்கரா

சாரியாள் "தத்க்ஷேத்ரம் யச்ச யாவச்ச" என்னும்சுலோகத்திற்கு செய்த பாஷ்யத்தில் சொன்ன வாக்யங்களாலும் "ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேன ஸவிகாரம் ஸஹவிகாரேண மஹாதாதிஞ உதாஹ்ருதம் உக்தம்; யஸ்ய க்ஷேத்திரபேதஜாதஸ்ய ஸம்ஹதி: இதம் சரீரமித்யுக்தம் தத்க்ஷேத்ரம் வ்பாக்யாதம் மஹாபூதாதி திருத்யந்தம்" என்று உள்ள ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யவாக்யங்களாலும் கூட ஏற்படுகிறது இச்சை துவேஷம் முதலியவைகளில் ஒவ்வொன்றும் கூட க்ஷேத்திரமென்றே ஸ்ரீ சங்கரபாஷியத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. எப்படியெனில் "இதி க்ஷேத்ரம்" என்னும் சுலோகத்தின் பாஷியத்தில் ஸ்ரீ சங்காசாரியாள் 'இதி-ஏவம், க்ஷேத்ரம்-மகாபூதாதி திருத்யந்தம்" என்றுசொல்லியிருக்கிறுர். ஆகவே இந்த தத்துவங்களின் சமூகாத்மகமான க்ஷேத்திரமென்னும் பதத்தால் குறிக்கப்படும் சரீரத்தின் ஞானமானது பரமாத்மாவுக்குத்தானிருப்பதால் இங்கு க்ஷேத்ரக்ஞனென்பவன் பரமாத்மாதாஞவான். ஸ்ரீ சங்கராசாரியாளும் கூட "க்ஷேத்ரக்ஞோ வக்ஷ்யமாண விசேஷண: யஸ்ய ஸப்ரபாவஸ்ய க்ஷேத்ரக்ஞஸ்ய பரிக்ஞாஞத் அமிர்தத்வம் பவதி தம் க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமீத்யாதிஞ ஸவிசேஷம் ஸ்வயமேவ வக்ஷ்யதிபகவான்" என்று "அமானித்வம் அதம்பித்வம்' என்னும் சுலோகத்தின் பாஷியத்தில் சொல்லியிருக்கிறுர்.

"க்ஞேயம் யத்தத்ப்ரவக்ஷ்யாமி" என்னும்சுலோகமோ க்ஷேத்ரக்ஞனைப்பற்றிப்புறப்பட்டது என்பதை இருககூஷியினரும்அபிப்பிராயபேதமின்றி ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அதில்க்ஷேத்ரக்ஞனின் ஞானம் மோக்ஷத்தை தரக்கூடியதென்று பகவான்ஸ்பஷ்டமாய் வாய்விட்டு கூறியிருக்கிறுர். அதில் சொல்லியுள்ள க்ஷேத்ரக்ஞன் "அஞதிமத்பரம்பிரம்ம நஸத்தன்ஞஸதுச்சயதே" என்னும் சுலோகத்தில் பரபிரம்மமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ சங்காசாரியாளும்கூடஇந்த'அஞதிமத் பரம் பிரம்ம' என்னும் சுலோகத்தின் பாஷ்யத்தில் க்ஷேத்திரக்ஞன் பரபிரம்மனென்று தான் அர்த்தம் செய்திருக்கிறுரேயன்றி இதாளென்றுஅர்த்தம் செய்யவில்லை.

ஆதலால் இவைகளையெல்லாம் அனுஸரித்துப் பார்த்தால் "க்ஷேத்ரக்ஞம்சாபி" என்னும்சுலோகத்திலும்கூட க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாவைக் குறிப்பதாகவே அர்த்தம் செய்வது யுக்தமாகவி

ருக்கிறது. ஆகவே "க்ஷேத்ரக்ஞம்சாபிமாம்" வித்தி" என்னும் சுலோகம் ஜீவேசுவரர்களின் அபேதத்தை எப்படிபோதிக்கக்கூடும்?

‡தண்டபாணிதீக்ஷிதர்:- தத்வசமூகங்கள் க்ஷேத்ரபதத்திற்கு அர்த்தம் என்பதற்கு பிரமாணமாக ஸ்ரீ சங்கரபாஷ்யம் காட்டியிருப்பது சரியன்று. அந்த பாஷ்யவசனங்களால் கேவலம் சரீரம் தான் க்ஷேத்ரபதத்தின் அர்த்தமென்று தெரியவருகிறது.

அந்த பாஷ்யத்திலுள்ள வாக்யத்தின் ஓர் பகுதியை மட்டில் தாங்கள் வாசித்துக்காட்டியிருக்கிறீர்கள். மற்றபாகத்தை விட்டு விட்டீர்கள். தங்களால் விடப்பட்டபாகம் தங்களுக்கு பாதகமானது.

க்ஷேத்ரக்ஞசப்தம்பரமாத்மாவைக்குறிப்பதாய் தமது அபிப்பிராயத்தை ஸ்ரீ சங்கராசாரியாள் "க்ஞேயம் யத்தத்" என்னும்சுலோகத்தின் பாஷ்யத்தில் சொல்லியிருப்பதாக தாங்கள் சொல்வதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இந்த இடத்தில் மட்டிலும் அல்ல. பலவிடங்களிலும்அவ்வாறு க்ஷேத்திரக்ஞசப்தம் பரமாத்மாபரமென்று அறிவித்திருக்கிறார். ஆனால் "க்ஷேத்ரக்ஞம்சாபிமாம் வித்தி" என்னும்சுலோகத்திலேக்ஷேத்திரக்ஞசப்தம் ஜீவபரமென்றுதான் நாம் சொல்லுகிறோம். ஸ்ரீ சங்கரபகவத்பாதாளும் அப்படியே தான் வ்யாக்யானம் செய்திருக்கிறார். "க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்தி" என்னும் சுலோகத்தில் பரமாத்மாவிடமிருந்து அபின்னன் அதாவது தனியானவனன்று என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் ஜீவனைத்தான் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் குறிப்பதாய்எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் ஜீவன் பரமாத்மாவே ஆவான். அதனால்தான் அந்த ஞானமானது மோக்ஷஸாதனமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் **क्षेत्रक्षेत्रज्ञयोर्ज्ञानं यत्तद्ज्ञानं मतं मम** (க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞயோர்ஞானம் யத்தத்க்ஞானம் மதம் மம) என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருப்பது சரியாய் பொருந்திருக்கிறது.

§ தண்டபாணிதீக்ஷிதர்:— **इदं शरीरं क्षेत्रमित्युक्तमिति सत्यं** (இதம் சரீரம் க்ஷேத்ரமிதயுக்தமிதிஸத்யம்) உபஸம்ஹாரத்தில்

---

‡இவ்வாறு சொல்லப்பட்டதாய் துவைதிகள் வாதித்தனர்.

§ இவ்வாறு சொல்லப்பட்டதாய் அத்வைதிகள் வாதித்தனர்.

மகாபூதாதிகளுக்கு க்ஷேத்ரத்தன்மை இருப்பதாய் சொல்லப்பட்டிருப்பது உண்மையே. ஆயினும் அந்த வாக்யத்தில் **यस्य क्षेत्रभेदजातस्य संहतिः** (யஸ்யக்ஷேத்ரபேதஜாதஸ்ய ஸம்ஹதி:) என்றுள்ள பாகத்தை வாக்யார்த்தத்தைக் கூட்டிச் சொல்லும்பொழுது ஸ்ரீஸ்வாமிகள் சொல்லாமல் விட்டுவிட்டார். அதையும் சேர்த்துப்படித்தால் "க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்பதில் க்ஷேத்ரபதத்தின் அர்த்தம் மகாபூதாதிகள் இல்லையென்றும் ஆனால் மகாபூதாதிகளின் சமூகமான சரீரம்தானென்றும் ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது. அவ்வாறாகவே க்ஷேத்ரபதத்தின் அர்த்தம் மகாபூதாதி திருத்யந்தம் என்பதில் யாருக்கும் விவாதமில்லை. ஆனால் இந்த விஷயத்தில் தான் விவாதமிருக்கிறது. எதினாலென்றால் க்ஷேத்ரக்ஞனென்னும் பதத்திலுள்ள க்ஷேத்ரபதத்தின் அர்த்தம் சரீரமா அல்லது மகாபூதாதிகளா? ஸ்ரீ சங்கராசாரியாள் எதை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதில்தான். முன்னே நிரூபித்தபடி க்ஷேத்ரக்ஞபதத்திலுள்ள க்ஷேத்ரபதமானது மகாபூதாதிகளின் கார்யமான சரீரம்தானென்று ஸ்ரீசங்கராசாரியாளின் அபிப்பிராயப்படி சித்தமாகுமேயல்லாது மகாபூதாதிகள் க்ஷேத்ரக்ஞ பதத்திலுள்ள க்ஷேத்ரபதத்தின் அர்த்தமென்று சித்திக்காது. "இதம் சரீரம்" என்னும் சுலோகத்தின் பாஷ்யத்தில் ஸ்பஷ்டமாய் ஸ்ரீசங்கராசாரியாள் **इदं शरीरं क्षेत्रं यो वेत्ति विजानाति आपादतलमस्तकं ज्ञानेन विषयी करोति** (இதம் சரீரம் யோவேத்தி விஜானாதி ஆபாததலமஸ்தகம் ஞானேன விஷயீ கரோதி) க்ஷேத்ரம்என்னும் சரீரம் தான்க்ஷேத்ரக்ஞ பதத்திலுள்ள க்ஷேத்ரபதத்தின்அர்த்தமென்றுகூறியுள்ளார்.

"க்ஷேத்ரக்ஞசாபிமாம்வித்தி" என்னும் சுலோகத்தில் க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவனுக்கு பிரம்மத்தினின்றும் அபேதமானது சொல்லப்பட்ட பிறகு பிரம்மத்தினின்றும் அபின்னனாய்ப் போன க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவன் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் க்ஞேயனென்று சொல்லப்படுகிறான். ஆதலால் "க்ஷேத்ரக்ஞம்சாபிமாம் வித்தி" என்பதில் க்ஷேத்ரக்ஞபதம்ஜீவனை குறிக்கிறதென்பதுதான் சரி. பரமாத்மவைக் குறிக்கிறதென்பது சரியன்று. ஆகையால் ஜீவ பரமாத்மாக்களின் அபேதவிஷயத்தில் "க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்னும் சுலோகம் பிரமாணம் தான்.

† இதில் ஓர் ரஹஸ்யமுண்டு. பகவத்கீதையில் ஸகுணப்ரம்மமும் சரியே நிர்குணப்ரம்மமும்சரியே ஸவிசேஷணப்ரம்மனும் சரியே, நிர்விசேஷபிரம்மனும்சரியே பகவானுல் சொல்லப்பட்டிருக்கிறது எந்த இடத்தில் ப்ரதமபுருஷத்தால் இருக்கிறுன் செய்கிறுனென்று படர்க்கை ஒருமை வினைமுற்றில் சொல்லப்படுகிறதோ அங்கு ஸகுணப்ரம்மம் ஸவிசேஷணபிரம்மம்சொல்லப்படுவதாகும். எந்த இடத்தில் அஹம் மம நான் என்னுடையதென்று சொல்லப்படுகிறதோ அங்கு நிர்குணப்ரம்மம் நிர்விசேஷப்ரம்மம் சொல்லப்படுவதாகும். இது ஸம்பிரதாயக்ஞர்களின் விவஸ்தை, ஆதலால் "மத்த: பரதரம் நான்யத்" என்னும் சுலோகத்தில் அஸ்மத் சப்தத்தால் சொல்லப்பட்டிருப்பதுசுத்தனுன நிர்குணநிர்விசேஷபிரம்மம்தானுதும். அந்தபிரம்மனிடமிருந்து தனிப்பட்ட வேறு எந்தவஸ்துவுமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் "க்ஷேத்ரக்ஞப் சாபிமாம் வித்தி" என்னும்சுலோகத்திலும் கூட மாம் என்னும் பதத்தால் சொல்லிக்கொள்ளப்படும் சுத்தனுன நிர்குணப்ரம்மனுக்கு, க்ஷேத்ரக்ஞபதத்தால் கூறப்படும் ஜீவனின்றும் அபேதம் சொல்லப்படுவது சரியானதே.

ஆதலால் பிரம்மத்தினின்றும் அபேதத்தை அடைந்த க்ஷேத்ரக்ஞனுன ஜீவனின் ஞானம் மோக்ஷத்தைத் தரக்கூடியதாகவே ஆகிறது, அப்பேர்பட்ட ஜீவனுக்கு "அனுதிமத்பரம் பிரம்ம" என்னும் சுலோகத்திலுள்ள பரப்ரம்மமென்ற சொல் பொருத்தமாகவே இருக்கிறது. ஆதலால் அத்வைதிகளுக்கு எதுவும் ப்ரதிகூலமாயிருப்பதாய் ஏற்படுவதில்லை.

ஸ்ரீ ஸ்ரீ:- ஸ்ரீ சங்கரபாஷ்யத்தின் ஓர் பாகத்தைவிட்டு விட்டு மற்றொருபாகத்தைமட்டில் நாம் அனுகூலமாய்காட்டியிருப்பதாய் கூறப்பட்டது. அப்படிச் சொல்வது பிசகு. நாம் பூராவாய்த்தான் ஸ்ரீ சங்கரபாஷ்யவாக்யத்தை நமக்கு அனுகூலமென்றுகாட்டினேும். இப்பொழுதும் அதை பூராவாய்வாசித்துக்காட்டுகிறேும்

அந்த பாஷ்யவசனங்களால் க்ஷேத்ரபதத்தின் அர்த்தம் மகாபூதாதிதிருத்யந்தமென்று ஏற்படுவதாகவே இப்போதும் சொல்கிறேும். நீங்களும் பூராவாய் அந்த வாக்யத்தை வாசித்துப்பாருங்

† இதுமுதல் இருதரத்தாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

கள். பகவத்கீதையாலேயே க்ஷேத்ரபதத்தின் அர்த்தம் மகா பூதம் முதல் திருதிவரையிலுள்ளவைகளின் சமூகமென்று தெரிய வருகிறது. ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யவாக்யமும் இதற்கு அனுகூலமாகத்தானிருக்கிறதென்று காட்ட நாம் அந்த வாக்யத்தை எடுத்துக்காட்டினோமேயல்லாது பகவத்கீதையாலேயே ஏற்பட்ட இந்த அர்த்தத்தை எடுத்துக்காட்ட அவருடைய அனுமதியைப் பெறவேண்டியது நமக்கு அவசியமில்லை.

"க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்னும் சுலோகத்தில் ஜீவப்ரம்மர்களின் அபேதம் சொல்லப்பட்டிருப்பதால் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில், பிரம்மத்தினின்றும் அபேதத்தை அடைந்த க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவனை எடுத்துக்கொண்டிருப்பதன் நிமித்தம் அவனுடைய ஞானத்திற்குமோக்ஷபலனுண்டாவது சரியாய் பொருந்துமென்றும் அந்த ஜீவனாகியக்ஷேத்ரக்ஞனை பரபிரம்மமென்று சொல்வது விருத்தமாகாது என்றும் சொல்லப்பட்டது. இது கொஞ்சமேனும் பொருந்தாது.

எப்படியெனில் "க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்னும் சுலோகத்திலுள்ள க்ஷேத்ரக்ஞ பதத்திற்கு ஜீவனென்று அர்த்தமா பரமாத்மாவென்று அர்த்தமா என்று விசாரம்செய்துகொண்டு வருகிறோம். இன்னமும் அதன் முடிவு ஏற்படவில்லை. இந்த சந்தேக நிலைமையில் நீங்கள், க்ஷேத்ரக்ஞன் ஜீவனே என்று நிச்சயப்படுத்திக்கொண்டு இங்கு ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் ஐக்யம் சொல்லப்பட்டிருப்பதாய் ஏற்படுத்திக்கொண்டு "இங்கு ஐக்யம் சொல்லப்பட்டிருப்பதால் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் பிரம்மத்தினின்றும் அபேதம் அடைந்த ஜீவனை எடுத்துக்கொள்ளப்பட்டதென்றும் அந்த ஜீவனுடைய ஞானம் மோக்ஷபலனைத் தரக்கூடியதென்றும் நீங்கள் சொல்வது சரியன்று. ஜீவபரமாத்மாக்களின் 'அபேதம் 'க்ஷேத்ரக்ஞம்சாபி' என்னும் சுலோகத்தால் சித்தித்திருந்தால் நீங்கள் சொல்லும் அபிப்பிராயம் சரியெனலாம். 'க்ஷேத்ரக்ஞம் சாபி' என்பதிலுள்ள க்ஷேத்ரக்ஞ பதம் ஜீவபரமென்று சித்தமான பிறகு அந்த க்ஷேத்ரக்ஞனை ஜீவனுக்கு மாம் என்னும் சப்தத்தால் அறியப்படுகிறவனை பரமாத்மாவுடன் ஐக்யம் சித்திக்கலாம். நாம் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் க்ஷேத்ரக்ஞன் பர

பிரம்மமென்றும் மோக்ஷத்தைத் தரும் ஞானத்திற்கு விஷயனென்றும்சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டுபூர்வத்தில்'க்ஷேத்ரக்ஞம் சாபி' என்னும் சுலோகத்தில் சொல்லப்பட்டுள்ள க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாவே தவிர ஜீவனில்லை என்று சொன்னதற்கு நீங்கள் "க்ஷேத்ரக்ஞம் சாபி" என்னும் சுலோகத்தில் க்ஷேத்ரக்ஞபதத்தின் அர்த்தமான ஜீவனுக்கும் மாம் என்னும் பதத்தின் அர்த்தமான பரமாத்மாவுக்கும் அபேதம் சொல்லப்பட்டிருப்பதாய் ஏற்படுத்திக்கொண்டு இனி முன்னே சொல்லப்போகும் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் சொல்லப்படும் பிரம்மத்வமும் மோக்ஷம்தரும் ஞானத்திற்கு விஷயத்வமும் ஜீவனுக்கு வந்து சேருகிறதென்று சொன்னீர்கள். இப்படி நீங்கள் சொன்னால் உங்கள் வாக்யத்திற்கு அன்யோன்யாசிரய தோஷம் வந்து சேருகிறது. எப்படியெனில் மோக்ஷத்தைத் தரும் ஞானத்திற்கு விஷயனும் பரபிரம்மனும் ஜீவன் ஆகவேண்டுமானல் "க்ஷேத்ரக்ஞம்சாபி மாம் வித்தி" என்னும் சுலோகத்தில் ஜீவபரமாத்மாக்களின்அபேதம் சித்தித்திருக்கவேண்டுமென்பதை நாம் மேலே காட்டியிருக்கிறோம். இந்த "க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்னும் சுலோகத்தில் ஜீவபரமாத்மாக்களின் அபேதம் சித்திக்கவேண்டுமானல் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் சொல்லப்பட்டவைகளானமோக்ஷத்தைத்தருவதாயுள்ள ஞானத்திற்கு விஷயனுயிருப்பதும் பரபிரம்மனுயிருப்பதும் ஜீவனுக்கு பாதகமாயில்லாதிருக்கவேண்டியதுடன் க்ஷேத்ரக்ஞனென்னும் பதத்திற்கு ஜீவனென்றுதான் அர்த்தமென்றும் ஏற்படவேண்டும். அப்போதுதான்ஜீவப்ரம்மர்களின்அபேதம்சித்திக்கும். மேலேசொல்லப்படும் பிரம்மத்வமும்மோக்ஷத்தைத்தரக்கூடிய ஞானத்திற்குவிஷயனுயிருப்பதும் ஜீவனுக்குபாதகமாயில்லாமலிருக்க வேண்டுமானல் ஜீவப்ரம்மர்களின் அபேதம் சித்தித்திருக்கவேண்டும். [ஆகவே சுருக்கிச்சொல்லின் க்ஷேத்ரக்ஞம் சாபி என்னும் சுலோகத்தில் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் எப்படி அபேதம் சித்திததென்றல் இனி "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் அவன் பரப்ரம்மனென்றும் மோக்ஷத்தைத் தரும் ஞானத்திற்கு விஷயனென்றும் சொல்லப்பட்டிருக்கிறதென்கிறீர்கள்.பரபிரம்மனுயிருப்பதும் மோக்ஷத்தைத்தரும் ஞானத்திற்கு விஷயனுயிருப்பதும் அந்த சுலோகத்தில் ஜீவனுக்கு எப்படிப்பொருந்தும், அவைகள் அவ

னுக்கு பாதகமில்லையா என்று கேட்டால் க்ஷேத்ரக்ஞம்சாபி என்பதில் ஜீவபரமாத்மாக்களின் அபேதம் சித்தித்துவிட்டதென்கிறீர்கள்.] ஆதலால் அன்யோன்யாச்ரயமென்னும் தோஷம் எப்படியும் உண்டாகிறது.

மேலும் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகம் க்ஷேத்ரக்ஞனைச் சொல்வதாகவும் அந்தக்ஷேத்ரக்ஞன் "அனாதிமத்பரம் ப்ரம்ம" என்னும் சுலோகத்தில் பரப்ரம்மமென்றும் அவனுடைய ஞானத்திற்கு அமிர்தத்வரூபமான பலனிருப்பதால் அவன் பரமாத்மாதானென்றும் நீங்கள் உங்கள் இஷ்டத்திற்கு மாறாகவே ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். இதைக்கொண்டு "க்ஷேத்ரக்ஞம் சாபி" என்னும் சுலோகத்தில் முன்னாடியுள்ள "க்ஞேயம் யத்தத்" என்னும் பகவத்கீதை சுலோகத்தின் ஆதாரத்தால் க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாதான் என்று சொல்கிறோம். ஆகையால் இந்த க்ஷேத்ரக்ஞம் சாபி" என்னும் சுலோகம் ஜீவபரமாத்மாக்களின் அபேதத்திற்கு பிரமாணம் ஆகமாட்டாது.

मत्तः परतरं नान्यत्किंचिदस्ति धनंजय । (மத்த: பரதரம் நான்யத் கிஞ்சிதஸ்தி தனஞ்ஜய) என்னும் சுலோகம் பரப்ரம்மத்தினின்றும் தனிப்பட்ட வஸ்துவில்லை என்று அறிவிப்பதாய்சொன்னது சரியன்று. என்னைவிட பரதரம் மேலானதான வஸ்துவில்லை என்று சொல்லப்பட்டதேயன்றி வேறு ஒருவஸ்துவுமில்லைஎன்று சொல்லப்படவில்லை. அப்படிக்கிருந்தால் மத்த: அன்யத் என்னைத் தவிர வேறு வஸ்துவில்லை என்றுசொல்லப்பட்டிருக்கவேண்டும். என்னைவிட மேலான வஸ்துவில்லை என்றுதான் ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆகவே இந்த "மத்த: பரதரம்" என்னும் சுலோகமும் பிரம்மத்தைத் தவிர்த்துள்ள இதர வஸ்துவில்லை என்பதற்கு சாதகமாக இல்லை.

மேலும் निर्गुणं गुणभोक्तृ च (நிர்குணம் குணபோக்த்ருச) என்னும் சுலோகத்தில் நிர்குணம் என்னும் பதத்திற்கு गुणाः सत्वरजस्तमांसितैर्वर्जितं (குணா: ஸதவரஜஸ்தமாம்ஸிதைர்வர்ஜிதம்) குணங்களென்றால் ஸத்வரஜஸ்தமோகுணங்கள் அவைகளில்லாதவரென்று ஸ்ரீ சங்கராசாரியாளே அர்த்தம் செய்திருக்கிறார்.

ஆதலால் இப்படி எல்லா கீதாவாக்யங்களையும் பரிசீலனை செய்தால் நிர்குணனும் நிர்விசேஷனுமான பிரம்மமொன்றுஇருப்பதாக அறிவிக்கும் வாக்யமோ அல்லது ஜீவபராமாத்மாக்களின் ஐக்யத்தைக்குறிக்கும் வாக்யமோ பூராகீதாவிலுமில்லை என்று நாம் நிச்சயமாய்ச் சொல்கிறோம்.

இத்துடன் இன்று சபை கலைந்தது.

---

# 18,19-இந்த நாட்களின் நடவடிக்கைகள்.

21—3—31 சனிவாரம்.

22—3—31 பானுவாரம்.

இந்த இரண்டு தினங்களில் மன்னார்குடியில் தஞ்சைஜில்லா பிராம்மணமகாஸபையின் வருஷாந்தரமகாநாடு கூடியதால் அங்கு த்வைதிகள் அத்வைதிகள் விசிஷ்டாத்வைதிகளாகிய பிராம்மணர் களநேகர்போகவேண்டியதன்நிமித்தம் ஏற்கனவே நிச்சயித்தபடி இந்த நாட்களில் த்வைதாத்வைதவிசாரம் நடத்தப்படவில்லை. ஸ்ரீ ஸ்வாமிகளிடமிருந்தும் பிரதிநிதிகள் போயிருந்தனர்.

---

# 20-வது நாள் நடவடிக்கை.

23-3-31 சோமவாரம்.

இன்று மதராஸிலிருந்து கருங்குளம் கிருஷ்ணசாஸ்திரிகள் பத்மநாபசாஸ்திரிகள், ராமசந்திர தீக்ஷிதர், முதலியோரும் வழக்கப்படி கல்கத்தா அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள், புரொபெஸர்சுந்தராமய்யர் முதலியோரும் வந்திருந்தனர். ஏற்கனவே செய்துகொண்ட நியமவிதிகளுக்கும் 15,16,17-வது நாட்களின் நடவடிக்கைகளின் ஸம்ஸ்கிருத ரிபோர்ட்டுகளுக்கும் கையொப்பமிடப்பட்டது. கையெழுத்துப்போடுவதற்காக இரு கக்ஷியினால் புரொப

ஸர் சந்தாராமப்பர்வாள் கோபாலதேசிகாசாரியார், வக்கீல் நரசிம்ஹராவ் இவர்கள் நியமிக்கப்பட்டு இவர்கள் இருகக்ஷியினர்களையும் அந்த ஸம்ஸ்கிருத ரிபோர்ட்டை நன்கு படித்துப்பார்க்கும்படிச் செய்து அவர்களின் அபிப்பிராயத்தை ஒட்டி அவர்களின் சார்பாககையெழுத்திட்டனர் மேற்படி நாட்களின் நடவடிக்கைகளாக இங்கு பிரசுரிக்கப்பட்டிருப்பது அந்த கையெழுத்திட்ட ரிபோர்ட்டில் காணப்படும் விஷயங்களின் விபரம்தான். இவைகளுக்கெல்லாம் கையெழுத்தாகிமுடியவெகு நேரமானதால் இன்று இத்துடன் ஸபை கலைந்தது.

---

## 21-வது நாள் நடவடிக்கை.

### 24-3-31 மங்களவாரம்.

அனந்த:- பூர்வதினத்தில் தண்டாபாணிதீக்ஷிதரவர்கள்கூறிய விஷயத்தை ஒட்டியே நான் விசாரம் செய்கிறேன். ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யத்தில் "யஸ்யக்ஷேத்ரபேதஜாதஸ்ய ஸம்ஹதி: சரீரம் க்ஷேத்ரம் க்ஷேத்ரமித்யுக்தம் தத்க்ஷேத்ரம் வியாக்யாதம் மகாபூதாதிபேதபின்னம் திருத்யந்தம்" என்ற வாக்யமிருக்கிறது. இந்த வாக்கியத்தில் முன்னுடியுள்ள "யஸ்யக்ஷேத்ரபேதஜாதஸ்ய ஸம்ஹதி:" என்னும் பாகத்தை விட்டுவிட்டு தாங்கள் மேலேயுள்ள வாக்யத்தைத் தான் தங்களுக்கு அனுகூலமென காட்டியிருக்கிறீர்கள். இந்த பாஷ்ய வாக்யத்திலுள்ள ஸம்ஹதி என்பது கார்யமென்னும் அர்த்தத்தை அறிவிக்கிறது. அதாவது மகாபூதாதி திருத்யந்தமான பதார்த்தங்களின் காரியம்தான் சரீரமாகும். அதுவே "இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே" என்னும் சுலோகத்திலுள்ள க்ஷேத்ரபதத்தின் அர்த்தமாகிய சரீரமென்று ஸ்ரீ சங்கராசாரியாள் ஒப்புக்கொண்டிருப்பதாய் ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது. ஆகவே இதம் சரீரம் என்று சொல்லப்படுவது பூர்வம் சொல்லப்பட்டதான மகாபூதாதி திருத்யந்தங்களின் காரியமான ப்ரத்யக்ஷமாய் கண்ணிற்படும் சரீரம் தான். இப்படியிருக்க ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யம் தங்களுக்கு எப்படி ஸாதகமாக இருக்கமுடியும்.

"க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்னும் சுலோகத்தில் உள்ள க்ஷேத்ரக்ஞசப்தம் ஜீவனைத்தான் குறிக்கிறதென்று அவரே ஸ்பஷ்டமாய் பின்வருமாறு வாய்விட்டுச் சொல்லியிருக்கிறார். एतच्छरीरं क्षेत्रं योवेत्ति विजानाति आपादतलमस्तकं ज्ञानेन विषयीकरोति ஏதச்சரீரம் க்ஷேத்ரம் யோவேத்தி விஜாநாதி ஆபாததலமஸ்தகம் ஞானேன விஷயீகரோதி" "இந்த சரீரமாகிய க்ஷேத்ரத்தை உள்ளங்கால் முதல் சிரஸுவரையில் எவன் அறிகிறானோ" என்று சொல்லியிருக்கிறார். இந்த பாஷ்யவசனத்தாலும் க்ஷேத்ரக்ஞசப்தத்திலுள்ள க்ஷேத்ரசப்தத்திற்கு கண்ணிற்படும் சரீரம் தான் அர்த்தமென்பது ஸ்ரீ சங்கராசாரியாளின் அபிப்பிராயமென்று ஸ்பஷ்டமாய் தெரியவருகிறது.

மேலும் க்ஷேத்ரக்ஞசப்தம் இங்கு ஜீவனைத்தான் குறிப்பதாய் ஸ்ரீ சங்கராசாரியாள் அபிப்பிராயப்பட்டிருக்கிறாரென்பது ननु सर्वक्षेत्रेषु एक एव ईश्वरः (நநுஸர்வக்ஷேத்ரேஷு ஏக ஏவ ஈச்வர:) முதலான மேற்கொண்டுள்ள பாஷ்யவசனங்களால் தெரியவருகிறது.

"कार्यकारणकर्तृत्वेहेतुः प्रकृतिरुच्यते(கார்யகாரணகர்த்ருத்வேஹேது: ப்ரக்ருதிருச்யதே) என்னும்சுலோகத்திற்கு வியாக்யானம் செய்யுங்கால் पुरुषो जीवः क्षेत्रज्ञः भोक्ता इतिपर्यायः (புருஷோ ஜீவ: க்ஷேத்ரஞ: போக்தா இதி பர்யாய:) புருஷன் ஜீவன் க்ஷேத்ரக்ஞன் போக்தா ஆகிய இந்த சப்தங்கள் ஓரே அர்த்தத்தைத்தான்குறிப்பிடுகிறவைகள் என்று ஸ்ரீ சங்கராசாரியாள் சொல்லியிருக்கிறார். இவ்வாறு எல்லாவற்றையும் யோசித்தால், க்ஷேத்ரசப்தத்திற்கு கண்ணிற்படும் இந்த சரீரத்திலிருந்து பின்னமான மகாபூதாதிருத்யந்தம் அர்த்தமென்றும் க்ஷேத்ரக்ஞ பதத்திற்கு பரமாத்மாவென்று அர்த்தமென்றும் இதற்கு ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யம் தமக்கு அனுகூலமென்றும் தாங்கள் சொல்வது சரியில்லை என்று ஏற்படுகிறது. ஸ்ரீ சங்கரபாஷ்யம் தங்களுக்கு அனுகூலமில்லை என்று மட்டிலல்ல. ப்ரதிகூலமாகவும் இருக்கிறது.

தவிரவும் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் சுலோகத்தில் க்ஷேத்ரக்ஞனின் ஞானத்தால் மோக்ஷமுண்டாகிறதென்றும் க்ஷேத்ரக்ஞன் பரபிரம்மனென்றும் சொல்லியிருப்பதைக் கொண்டு க்ஷேத்ரக்ஞ சப்தம் பரமாத்மாவைத் தான் அறிவிப்ப

தாய் கீதையாலேயே சித்திக்கிறதென்றும் ஸ்ரீ சங்காசாரியாள் ''க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி'' என்னும் சுலோகத்தில் க்ஷேத்ரக்ஞன் பரமாத்மா (பரப்ரம்மம்) என்றே சொல்வதாய் வியாக்யானம் செய்திருக்கிறாரென்றும் தாங்கள் சொல்வது தங்களுக்கு சாதகமில்லை. ''க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி'' என்னும் சுலோகத்தால் ஜீவனுக்கு பரமாத்மாவுடன் அபேதத்தை (ஐக்யத்தைச் சொல்லியிருப்பதால் ஜீவனும் பரமாத்மாவும் ஒன்றேயாயினர் என்று வைத்துக்கொண்டு ஜீவனாகிய க்ஷேத்ரக்ஞனின் ஞானத்தால் மோக்ஷம் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் ஜீவனாகிய க்ஷேத்ரக்ஞனே பரப்பிரம்மன் பரமாத்மாவென்று சொல்லப்பட்டிருக்கிறதென்றும் தண்டபாணிதீக்ஷிதர்வாள் சமாதானம்சொன்னதற்கு தாங்கள் அன்யோன்யாச்ரய தோஷத்தைச்சொன்னீர்கள். அது சரியல்ல. இனி முன்னாடிசொல்லப்போகும் சுலோகத்தை 'க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி'' என்னும் சுலோகத்தால் ஜீவபரமாத்மாக்களுக்கு அபேதத்தை நாம் சாதிக்க வேண்டுமென்று எனக்கில்லை.

क्षेत्रज्ञ आत्मनि (க்ஷேத்ரக்ஞ ஆத்மனி) என்றும் அமரகோசத்திலிருப்பதால் क्षेत्रं आत्मत्वेन जानातीति क्षेत्रज्ञः देहाद्यभिमानी-जीवः। (க்ஷேத்ரம் ஆத்மத்வேன ஜாநாதீதி க்ஷேத்ரக்ஞ: தேஹாத்யபிமானீ ஜீவ:) க்ஷேத்ரத்தை சரீரமாக அறிகிறானதலால் க்ஷேத்ரக்ஞன் தேஹாதிகளின் அபிமானமுள்ள ஜீவன் என்று அதன் வ்யாக்யானமிருப்பதால் அதைக்கொண்டு க்ஷேத்ரக்ஞ சப்தம் ஜீவனிடம் பிரசித்தமாயிருப்பதால் க்ஷேத்ரக்ஞனாகிய ஜீவனிடமிருந்து மாம் என்னும் பதத்தால் சொல்லிக்கொள்ளப்படும் சுத்தப்ரமனுக்கு அபேதம் சொல்ல எந்தபாதகமுமில்லை.

ஆகவே பிரம்மனிடமிருந்து அபின்னனென சொல்லப்படும் ஜீவனை 'க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி'' என்னும் சுலோகத்தில் எடுத்துக்கொள்ளவும் அவனுக்கு பரபிரம்மனென்னும் சப்தமும் அவனுடைய ஞானத்தால் மோக்ஷமுண்டாகிறதென்று சொல்வதும் பாதகமாவதில்லை. ஆதலால் அன்யோன்யாச்ரயதோஷம் வர ப்ரஸக்தியே இல்லை. ஆதலால் ''க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி'' என்னும் சுலோகம் ஜீவபரமாத்மாக்களின் அபேத விஷயத்தில் பிரமாணமாகிறதுதான்.

ஸ்ரீ ஸ்ரீ:- பகவத்கீதையிலுள்ள பதங்களுக்கு அர்த்தம் செய்யவேண்டுமானல் கீதையிலேயே முன்னடியும் பின்னடியும் உள்ள சுலோகங்களில் அந்த பதங்களுக்கு எந்த அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அர்தத்தின்படியே தான் அர்த்தம் செய்யப்படவேண்டுமென்று வாதம் துவக்கப்படும் முன்பேநியமங்கள் செய்துகொள்ளப்பட்டிருக்கின்றன. அதன்படி "தத்க்ஷேத்ரம்யச்சயாத்ருக்ச, மகாபூதான்யஹங்கார:, இவை முதலான உத்தர சுலோகங்களில்க்ஷேத்திரமென்றுல் மகாபூதாதிதிருத்யந்தபதார்த்தங்களென்றும் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் உத்தர சுலோகத்தில் க்ஷேத்ராக்ஞன் பரபிரம்மன் பரமாத்மா என்றும் அர்த்தம் செய்யப்பட்டிருப்பதால் "இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே, க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்னும் சுலோகங்களிலுள்ள க்ஷேத்ரபதத்திற்கு மகாபூதாதி திருத்யந்தம் என்றும் க்ஷேத்ரக்ஞ பதத்திற்கு பரமாத்மாவென்றும் அர்த்தம் செய்யவேண்டும். ஸ்ரீ சங்கராசாரியாளும்கூட முன்னடியுள்ள சுலோகத்தின் பாஷ்யத்தில் க்ஷேத்ரமென்றுல் மகாபூதாதி திருத்யந்த பதார்த்தங்களென்றும் க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாவென்றும் சொல்லியிருக்கிருரென்று அவருடைய சம்மதி காட்டப்பட்டதேயன்றி "இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே" என்னும் சுலோகத்திலுள்ள க்ஷேத்ர சப்தம் மகாபூதாதி த்ருத்பந்தபரமென்றும் 'க்ஷேத்ரக்ஞம்சாபிமாம்வித்தி' என்னும் சுலோகத்திலுள்ள க்ஷேத்ரக்ஞசப்தம் பரமாத்மபரம் என்றும் ஸ்ரீ சங்கராசாரியாள் தமது பாஷ்யத்தில் சொல்லியிருப்பதாய் நாம் சொல்லவேயில்லை. நாம் சொல்லவேண்டிய அவசியமும் இல்லை.

---

[கீதையிலுள்ள க்ஷேத்ரக்ஞபதத்திற்கு மேலேசொல்லப்போகும் வாக்யத்தாலேயே பரமாத்மாவென்று அர்த்தம்செய்யப்படும்பொழுது அமரகோசத்தை ஆதாரமாய் எடுத்துக்கொள்வது சரியல்ல. அவ்வாறு எடுத்துக்கொள்ளலாகாதென்று ஆரம்பத்திலேயே நியமம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் அந்த அமரகோசம்கூட இந்த அர்த்தத்திற்கு சாதகமாகமாட்டாது. प्राणीतु चेतनोजन्मीजन्तुजन्य शरीरिण: (ப்ராணீதுசேதனே ஜன்மீ ஜந்து ஜன்யசரீரிண:) என்று முன்னடி ஜீவனைக்குறிக்கும சப்தங்கள் காட்டப்போவதால் க்ஷேத்ரக்ஞ ஆத்மா புருஷ: என்னும்கோசம் க்ஷேத்ரக்ஞனென்றுல் பரமாத்மா என்றுதான் அறிவிப்பதாய் ஆகும்.]

அனந்த:- க்ஷேத்ரசப்தத்திற்கு மகாபூதாதி திருத்யந்தம் அர்த்தமென்கிற விஷயத்திலும் க்ஷேத்ரசப்தத்திற்கு பரமாத்மா அர்த்தமென்கிற விஷயத்திலும் ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யந்தான் சம்மதியென்று தாங்கள் சொன்னீர்கள். கீதாவாக்யம் பிரமாணமென்று தாங்கள் சொல்லவில்லை இப்போது புதிதாய் இவ்வாறு சொல்லுகிறீர்கள். இது ப்ரதிக்ஞாந்தரம் வேறுசுலோகத்திலுள்ள க்ஷேத்ரசப்தத்திற்கு மகாபூதாதி திருத்யந்தமென்று அர்த்தமென்றும் மற்றொரு சுலோகத்திலுள்ள க்ஷேத்ரக்ஞ சப்தத்திற்கு பரமாத்மா என்று அர்த்தமென்றும் நாம் ஒப்புக்கொண்டே இருக்கிறோம். அந்த விஷயத்தில் எங்களிருவர்களில் விவாதமேயில்லை ஆதலால் தாங்கள் எங்கள் பாஷ்ய சம்மதியை அப்போதேகாட்டியது அனுபயுக்தம் தான்.

ஸ்ரீ ஸ்ரீ:- கீதையிலுள்ள பதங்களுக்கு கீதையாலேயே அர்த்தம் செய்யவேண்டும் என்று நீங்கள் ஏற்படுத்தியநிபந்தனையின்படி இதற்கு முன்னுடியுள்ள ஒன்றிரண்டு சுலோகங்களிலுள்ள க்ஷேத்ரபதத்திற்கு மகாபூதாதி திருத்யந்தமென்று அர்த்தம் செய்ய கீதையின் 13-வது அத்தியாயத்தின் 3, 5, 6-சுலோகங்களின் ஆதாரத்தைக்காட்டினேமேயல்லாதுஎங்கேயோ உள்ளசுலோகங்களை ஆதாரமாய்க் காட்டவில்லை. 3, 5, 6-சுலோகங்களுக்கு நாம் சொன்னது அர்த்தமென்னும் விஷயத்தில் ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யத்தின் சம்மதியைக் காட்டினேம்.

மேலும் க்ஷேத்ரசப்தத்திற்கு பாமாத்மா அர்த்தமென்னும் விஷயத்தில் "க்ஞேயம் யத்தத் ப்ரவக்ஷ்யாமி" என்னும் 13-வது சுலோகத்தை ஸம்மதியாகக் காட்டி அந்த சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கும் பாப்ரம்மம் க்ஷேத்ரக்ஞனென்பதில் ஸ்ரீ சங்காசாரியாளின் பாஷ்ய சம்மதியை கூட அறிவித்தோம். ஆகையால் முன்னுடியுள்ள கீதா சுலோகத்தாலும் முன்னுடியுள்ள ஸ்ரீ சங்கராசாரியாளின் கீதாபாஷ்யத்தாலும் க்ஷேத்ரமென்னும்பதத்திற்கு மகாபூதாதி திருத்யந்தமென்றும் க்ஷேத்ரக்ஞனென்னும் பதத்திற்கு பாமாத்மா என்றும் அர்த்தமாவதால் அதன்படி "க்ஷேத்ரமித்யபிதீயதே" என்னும் சுலோகத்தில் சொல்லப்பட்ட க்ஷேத்ர பதம் மகாபூதாதி திருத்யந்தமான பதார்த்தங்களின் சமுதாயம்

தானாகும். அதை அறிந்த க்ஷேத்ரக்ஞன் பரமாத்மாதானவான். ஆகையால் ஹே அர்ஜுனா ! மகாபூதாதி திருத்யந்தமான எல்லா க்ஷேத்ரங்களை அறிந்தவன் (அதாவது ஸர்வக்ஞனானவன்) நானே என நீ அறிவாய் என்று சொல்லப்பட்டிருக்கிறதேயல்லாமல் ஜீவனுக்கு பரமாத்மாவுடன் ஐக்யம் சொல்லப்படவே இல்லை. ஸ்ரீ சங்கராசாரியாள் க்ஷேத்ரமித்யபிதீயதே என்னும் சுலோகத்தில் உள்ள க்ஷேத்ரபதத்திற்கு கண்ணிற் புலப்படும் சரீரமென்று அர்த்தம் செய்ததும் "க்ஷேத்ரக்ஞம் சாபிமாம் வித்தி" என்னும் சுலோகத்திலுள்ள க்ஷேத்ரசப்தத்திற்கு ஜீவனென்று அர்த்தம் செய்ததும் கீதையில் மேலே சொல்லப் போகும்சுலோகங்களுக்கு முற்றிலும்விருத்தமானதே. ஆதலால்அந்த அர்த்தம் ஒப்புக்கொள்ளத் தகுந்தல்ல. "தாங்கள் க்ஷேத்ரபதத்திற்கு மகாபூதாதிதிருத்யந்தமென்று அர்த்தம் செய்ய கீதையின் சம்மதியைக்காட்டவில்லை ஸ்ரீ சங்கராசாரியாளின் பாஷ்யத்தின் சம்மதியைத் தான் காட்டினீர்கள். கீதையின் சம்மதியைக் காட்டினேமென்பது ப்ரதிக்ஞாந்தரம் (புதிதானப்ரதிக்ஞை) என்று சொன்னது சரியல்ல நமக்கும் உமக்கும் நடந்த சர்ச்சைகளெல்லாம் ரிபோர்ட்டாகஎழுதப்பட்டு அதற்கு மத்யஸ்தர்கள் கையொப்பமிட்டிருக்கின்றனர்.

இதோ அந்த ரிபோர்ட்டைப் பாருங்கள். இதில் நாம் கீதையின் சம்மதியைக்கொடுத்தோமென்று காணப்படுகிறது என்று சொல்லி மத்யஸ்தர்களின் கையொப்பமுள்ள ரிபோர்ட்டைக் கொடுத்தார்.

அனந்த:- [அந்த ரிபோர்ட்டில் சில பக்கங்களை பிறட்டிப் பார்த்துவிட்டு] நீங்கள் கீதாவின் சம்மதியைக் காட்டியதாய்க் காணப்படவில்லையே என்று சொன்னார்.

ஸ்ரீ ஸ்ரீ:- மத்யஸ்தர்களான புரொபஸர் K. சுந்தரராமய்யர் C. நரசிம்ஹராவ், அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் இவர்களின் சுருக்குகைஎழுத்தாகிய (Initials) K. S., C. N., அ ஸ்ரீ இவைகளுடனுள்ள 6-வது பக்கத்தைக் காட்டினார். அந்த பக்கத்தின் போடோ இதுவே.

"இவ்வாறு பகவானால் (ஸ்ரீ கிருஷ்ணரால்) மகாபூதாதி திருத்யந்தம் க்ஷேத்ரபதத்தின் அர்த்தமென்று சொல்லப்பட்டிருக்கிற" தென்று கீதையின் சம்மதியைக் காட்டியதை அறிவிக்கும் வாக்யத்தை வாசித்துக்காண்பித்தார்.

உடனே பதிற்கூறுமல் அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள், புரொபஸர்சுந்தராமய்யர், கருங்குளம் கிருஷணசாஸ்திரிகள்முதலிய அத்வைதபண்டிதர்களும் அத்வைத லௌகிக சாமானியர்களும் ஒருவர்பின் ஒருவராக சபையிலிருந்து வெளியேறிவிட்டனர்.

பிறகு ஸ்ரீ ஸ்வாமிகளும் பல விசிஷ்டாத்வைத பண்டிதர்களும் சிறிதுபேசினபின் சபை கலைந்தது.



கும்பகோணம் "மாத்வமித்திரன்" பத்திரிகை 3-வது வாலியம் 9-வது நம்பரிலிருந்து எடுக்கப்பட்டது:—

# ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகளின் கும்பகோணம் விஜயம்.

ஸ்ரீ உத்திராதிமடம் ஸமஸ்தானாதிபதியாகிய ஸ்ரீமத் ஸத்யத்யானதீர்த்த ஸ்ரீபாதாள் நமது நகருக்கு இச்சமயம் திக்விஜயம் செய்தது மாத்வ வகுப்பாரின் சரித்திரத்தில் எந்நாளும்போற்றத் தகுந்ததாயுள்ள ஓர் முக்ய ஸம்பவமேயாகும். ஸ்ரீ மத்வாசாரியாரின் துவைதமதத்திற்குத்தான் வேதாதிகளின் ஆதாரமிருப்பபதை ஆஸேது ஹிமாசலமுள்ள வைதிக மதத்தார் யாவருமே நன்கு கண்டுகொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் வாய்ந்தது. எங்கும் போல் ஸ்ரீ சுவாமிகள் சஞ்சாரக்கிரமத்தில் இந்நகருக்கு திக்விஜயம் செய்திருந்தால் நாம் இதைப்பற்றி அதிகமாய் வரையத் துணியோம். ஸ்ரீ மத்வஸித்தாந்தத்தைப்பற்றி பகிரங்கமாய் சபையில் வாதித்தும் இதற்கு நேர்விரோதியான அத்வைத மதத்தைக் கண்டித்தும் எமது மதத்தை நிலைநிறுத்துவதற்காகவென்றே இந்நகருக்கு ஸ்ரீஸ்வாமிகள் திக்விஜயம்செய்ததை உலகிலுள்ள எல்லா மாத்வர்களுமே கொண்டாடாமல் இருக்க முடியாது. ஸ்ரீஸ்வாமிகள் திருவண்ணாமலைக்கு விஜயம்செய்தபொழுது மைசூர் மகாராஜாகாலேஜ் லெக்சரர் ஸ்ரீமான் H. சுப்புராவ் M.A., ஸ்ரீமடத்தில்செய்த உபன்யாஸத்தில் ஸ்ரீ சங்கரமதமாகிய அத்வைதமதம் அவைதிகமென்றும் அது கண்டிக்கத்தக்க மதமென்றும் அது பௌத்தமதத்தின் கொள்கைகளைக் கொண்டதென்றும் அவருடைய ஆராய்ச்சிப்படி பல உதாஹரண பூர்வமாய் எடுத்துக்காட்டியதாயும், இந்தமடத்திற்கு தலைமைஸ்தானம் ஒன்றுமில்லை என்றும் இஃது தேசசஞ்சாரம்செய்யும் மடமென்றும் அத்வைத மதத்தையும் பிற மதங்களையும் கண்டித்து துவைதமதஸ்தாபனத்தின்பொருட்டே ஊர்கள்தோறும் சென்றுகொண்டிருக்கிறதென்றும் வாதிகள் எதிர்ப்படின் தம் ஆசாரியாள் வாதம்செய்யத்தயார் என்றும் ஸ்ரீ மடம் ஸர்வாதிகாரி ஏகாந்தத்தில் அறிவித்ததாயும் 26—1—31ல் சுதேசமித்திரனில் அவ்வூர்

நிரூபர் எழுதிய கடிதமொன்று பிரசுரமாயிருந்தது. அதைக் கண்டு சகியாது வத்திராயிருப்பு ஸ்ரீமான் A. சூரியநாராயணய்யர் என்ருெருவர் அத்வைதமதம்தான் வைதிகமதமென்று வாதம் செய்து ஸ்தாபனம்செய்ய அநேக பண்டித சிரோமணிகளான அத்வைதிகள் இப்போது தயாராய் இருந்துகொண்டிருக்கிருர்க ளென்றும் முக்யமாக ஸ்ரீசிருங்கேரி ஸமஸ்தானம் பிரம்மஸ்ரீ தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலியோர் உற்சாகமுள்ளவர்களாயிருக்கிருர்களென்றும் வாதம்செய்யும் ஸ்தலம் மத்யஸ்தர்கள் பந்தயவஸ்து இது விவரங்களை பகிரங்கப்படுத்தவேண்டுமென்றும் 4—2—31ல் சுதேசமித்திரன் மூலமாய் அறிவித்தார். இந்த ஏற்பாட்டை ஆமோதித்து ஸ்ரீமடத்திலிருந்து ஸ்ரீமான் H. சுப்புராவ் அவர்களும், இந்நகரிலிருந்து இம்மாத்வமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் பாகவத ரங்கனுதாசாரியாரும் பதில் கடிதங்கள் சுதேசமித்திரனில் பிரசுரிக்கப்பட அனுப்பியும் எக்காரணத்தாலோ அவைகள் வெளியாகவில்லை. விவாதத்திற்கு ஆஸ்பதமான கடிதங்களை கூடியவரையில் ஒதுக்கிவிடவேண்டியது பத்திரிகாசிரியர்களின் கடமையேயாகும். ஆனுல் அத்தகைய கடிதத்தைப் பிரசுரப்படுத்தி ஓர் கக்ஷியைக்கிளப்பிவிட்டபின் எதிர்கக்ஷியாரும் தமது அபிப்பிராயத்தை அறிவிக்க சந்தர்ப்பமளிக்க மறுதளிப்பது ஒழுங்கானதன்று. அவ்வாறு அந்த கடிதங்களை பிரசுரிக்காமல் விலக்கிவிட்டதால் இரு கக்ஷிக்காரர்களிலும் பலவகையான அபிப்பிராய பேதங்களும் குழப்பமும் உண்டாயின. துவைதஸித்தாந்த ப்ரதிஷ்டாபனுசாரியாளென்னும் பெயருக்கேற்ப பெரும் பாண்டித்யத்தைப் படைத்துள்ள ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் ஸ்ரீமான் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளின் வாத அழைப்புக்கிணங்காமல் சாமானியர்களால் வெகு அலக்ஷியமாய்க் கருதப்படும் எமது மதத்தை இன்னமும் இழிவாக எண்ணும்படி கைவிட்டனரோ என்று துக்கித்து தென்னுட்டில் இம்மதம் என்நாளுமே ஓங்கி நிற்க மகாசபையைக்கூட்டி வாதம்செய்து தகுந்த ஏற்பாடுகளைச்செய்யவேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமிகளைக்கேட்டுக்கொள்ள மாத்வ வகுப்பார்களின் சார்பாக தென்னுட்டு மாத்வர்களின் முக்ய பத்திரிகையான இம்மாத்வமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீ ஸ்வாமிகளின் கன்னபிராண்டி முகாமுக்குச் சென்ருர். எதிர்கக்ஷியினரான அத்வைதிகளும் சும்மா இருக்கவில்லை. நமது நகரிலிருந்து சிலர் தங்கள் கையெழுத்தன்றி 16—2—31டியில்

ஸ்ரீஸ்வாமிகளுக்கு ஓர் ரிஜிஸ்டர் கடிதமனுப்பினர். அதில் "தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகளின் நோட்டீசுக்கு இது வரையில் சுதேசமித்திரனில் ஜவாப் வெளிவராததினால் அத்வைதமதமே வைதிகமென்று நிச்சயம் செய்திருக்கிறோம். இந்த விஷயத்தில் ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகளுக்கு சந்தேகம் இருக்கும் பக்ஷத்தில் இவ்வூர் அநேக வித்வான்களும் வித்வத் சிரோமணிகளும் பிரம்மஸ்ரீ பண்டிதரத்ன யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள், ரெங்கசாமி சாஸ்திரிகள், சக்ரவர்த்தி ஆசாரியார் முதலான அத்வைத விசிஷ்டாத்வைத பண்டித ப்ரமுகர்களும் இருந்துவருகின்றனரென்றும் ஷியார்கள் எல்லோரும் வாதம்செய்யத்தயாராயிருக்கிறார்க"ளென்றும் இதற்கு சுதேசமித்திரன்வாயிலாக ஜவாபுவருமென்று எதிர்பார்ப்பதாயும் எழுதப்பட்டிருந்தது. ஸ்ரீஸ்வாமிகள் தாம் தமது மதத்தை வாதாடி நிரூபித்துக்காட்டபின் தயங்குவதாய் ஓர் தப்பான அபிப்பிராயம் எங்கும் நிலவிவருவதை அறிந்தவுடன் அரைக்ஷணமும் ஆலசியம் செய்யாமல் ஸ்ரீமடம் திவானவர்கள் மூலமாய் நேரில் சென்னைக்கே மனுஷ்யாளை அனுப்பிவைத்து பலபெரிய பத்திரிகைகளில் 4—3—31வ முதல் சுமார் 1-மாதம் கும்பகோணத்தில் ஓர் மகாசபையை நடத்துவதாயும் அங்கு அத்வைத பண்டிதர்கள் வந்துசேரலாமென்றும் பகிரங்கப்படுத்தச் செய்ததுமன்றி ஸ்ரீமான் தேதியூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் முதலிய பிரஸ்தாப பண்டிதர்களுக்கும் அறிவித்தார். அதன்படி கும்பகோணத்திற்கு அதிசீக்கிரம் சென்று துவைத வேதாந்தம்தான் வேதங்களின் தாத்பரியமென்பதை உலகத்தாருக்கு நிரூபித்துக்காட்டவேண்டுமென்று நிச்சயங்கொண்டார். இதுதான் ஸ்ரீ பகவத்பாதாளின் பரம கைங்கரியமென்று எண்ணங்கொண்டார். வேறு எங்கும்சஞ்சாரம் வேண்டாமென்று வெறுத்துத்தள்ளினர். இடையிலுள்ள ஊர்களை வெகு வேகமாய்க்கடந்து மாயவரம் வந்து சேர்ந்தார். அங்கு ஒரேநாள்தான் ஸ்ரீமான் T. R. ரகுநாதராயர் அவர்களின் வீட்டில் தங்கியிருந்து ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியை ரத்னகசிதமண்டபங்களில் பூஜைசெய்து பிக்ஷையைப்பெற்று நேராக இந்நகருக்கு 2—3—31வ சோமவாரம்மாலை 5-மணிக்கு மகாமகக்குளத்தின் மேல்கரையிலுள்ள ஸ்ரீஉத்திராதிமடத்து படித்துறையின் மண்டபத்திற்கு வந்துசேர்ந்தார். ஸ்ரீஸ்வாமிகள் கஜாரூடராய் சத்ரசாமராதி மகாவைபவங்களுடன் வரவேற்பதாய் நகரெங்கும்

அன்று இம்மித்திரனின் பத்திராதிபரின் கையெழுத்தில் அச்சி டப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் ஏராளமாய்வழங்கப்பட்டிருந்தன நகரிலுள்ள எல்லாவைதிக ளௌகிக மாத்வர்களும் அங்குவந்து தேங்காயைவைத்துப் பணிந்தனர். இதற்குள்ளாக ஸ்ரீ சாரங்க பாணிஸ்வாமி முதலிய தேவஸ்தானங்களிலிருந்து ஹாரம் முத லான ப்ரஸாதங்கள் அர்ச்சகர்களால் வேதமந்திர பூர்வமாய் ஸமர்ப்பிக்கப்பட்டன. திருவாடுதுறை ஆதீனத்திலிருந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் வரவேற்பு வைபவத்திற்காக எல்லா ஸ்தோமங் களும் வரவழைக்கப்பட்டிருந்ததால் அவைகள் சுமார் 1-பர்லாங்கு தூரம் நின்றிருந்தன. இந்நகர் பிரசித்த நாதசுரக்காரர் திறமைவாய்ந்த தன் கோஷ்டியுடன் அவரது வித்யா ஸாமர்த்யத்தை அடிக்கடி காட்டிவந்தார். ஸ்ரீஸ்வாமி கள் தம்முடைய மடத்து பெரிய யானையின்மீது வெகு சொகு சாய் ஜோடிக்கப்பட்டிருந்த ஹௌதாவில் அமர்ந்தார். ஊர்வலம் மெதுவாய்க் கிளம்பியது. வேதமோதிய அநேக வைதிகர்கள் பின்னடி பல கோஷ்டிகளாய் வகுத்து நின்று வேதபாராயணம் செய்து வந்தனர். முன்னடி பண்டிதர்களும் வித்தியார்த்திகளும் ஸ்ரீ மத்வ விஜயத்தை ஸுஸ்வரமாய் உரக்க ஏகோபித்துச் சொல்லிவந்தனர். உயரவானத்திலிருந்து சந்திரனும் தனது வெண்மையான கிரணங்களால் உலகத்தாரை ஆனந்தப்படுத்தி வந்தான். எங்கும் ஒரே பிரகாசமாயிருந்தது. அன்று ஸ்ரீ விசு வநாதஸ்வாமிக்கு ரதோற்சவமாயிருந்ததால் மாத்வர்களல்லா தார்களும் பதினாயிரக்கணக்காய் கூடியிருந்தனர். ஆகவே மகாமகக்குளத்தின் கரையில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஊர்வலம் கிளம்பிய பொழுது கூட்டம் அதிகமாய்ப்போய் நகரவும் முடியாமற் போயிற்று. ஸ்ரீஸ்வாமிகளின் பாந்தமுகமும், விசாலமான கண் களும், அரிய கல்வியால் ஜொலிக்கும் முககாந்தியும் எல்லோர் மனதையும் கவர்ந்தன. பரமதநிராகரண பூர்வமாய் த்வைத சித்தாந்தத்தை ஸ்தாபிப்பதற்காக பட்டணப்பிரவேசம் செய்யும் மகாபிரதாபசாலியான ஸ்ரீ ஸ்வாமிகளின் முகத்தில் அங்கார அக்ஷதை பளிச்சென்று துலங்குவதைக்கண்டு இப்பத்திராதிபர் மெய்மறந்தார். ஸ்ரீபகவத்பாதாளின் மகாசக்தியே இவர்களுக்குள் தாண்டவமாடுவதாய்க்கண்டார். வேதங்களுக்கெல்லாம் வியாக்யா னம்செய்த வித்யாரண்யரை ஜயித்த ஸ்ரீ ஜயதீர்த்தர் இவர்தானோ

வென்றார். அல்லது அப்பய்யதீக்ஷதரின் கல்வித்திறமோங்காமல் செய்து இந்நகரிலேயே சமாதி அடைந்த ஸ்ரீ விஜயீந் திரஸ்வாமிகளே இந்த உருவத்துடன் வந்தாரோ வென்றெண்ணினார். வாய்விட்டு லஜ்ஜைவிட்டு உரக்கவே "ஸ்ரீமத் த்வைதசித்தாந்த ப்ரதிஷ்டாபனாசார்யர்களிகே ஜேய்" என்று உத்கோஷித்தார். ஜனங்களும் அவ்வாறே ஜேய் சப்தம் போட்டனர். அந்த சம்பவம் ஓயாமல் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களின் மடம்வந்து சேரும்வரையில் ஜனங்கள் முன்கூறியபடியே ஜய கோஷம் செய்துவந்தனர். பொற்றாமரை வழியாய் ஊர்வலம் பெரியகடைத்தெருவுக்கு வந்தது. அங்கும் கூட்டமதிகமாய்ப் போய் சிலகாலம் ஊர்வலம் நிற்கவேண்டிவந்தது புஷ்பக்கடை வாசலில் வரும்பொழுது அங்குள்ளோர் புஷ்ப விருஷ்டியை ஸ்ரீஸ்வாமிகளின்மீது ஓயாமல்செய்து வந்தனர். அதனால் கடைத் தெரு எங்கும்புஷ்பமயமாகவே அச்சமயம்தோன்றியது. இத்தனை வைபவங்களுடன் ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீசக்ரபாணிஸ்வாமி ஆலயத் திற்கு ப்ரதக்ஷிணமாய் ஸ்ரீமடத்துக்கு வந்துசேர்ந்தார். வரும்வழி யிலெல்லாம் ஸுவாஸினி ஸ்திரீகள் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ஆரார்த் திகை செய்துவந்தனர். எங்கும் ஜயகோஷமே வியாபித்திருந் தது. அந்த சப்தத்தினிடையில் ஸ்ரீ ஸ்வாமிகள் யானையிலிருந்து இறங்கி ஸ்ரீமடத்தில் பிரவேசித்து சிம்ஹாஸனத்தில் அமர்ந்தார். எல்லோரும் சாஷ்டாங்கம் நமஸ்காரம்செய்ய ஸ்ரீஸ்வாமிகள்பரமா னந்தத்துடன் மந்த்ராக்ஷதைகளைத்தந்து எல்லோரையும் அனுக்ர ஹித்தார்.

---

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகை 3-வது வால்யூம் 7-வது நம்பரிலிருந்து எடுக்கப்பட்டது.

---

# ஓர் மறுப்பு.

ஆர்யதர்மபத்திரிகையில் 4-வது ஸஞ்சிகை 16-வது புஸ்தகம் 71வது பக்கத்தில் "வீண் சண்டை" என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள விஷயம் மிகவும் ஹாஸ்யாஸ்பதமாக இருக்கிறது. அங்கு வரையப்பட்டிருப்பதாவது:—

"சென்ற மாதம் உத்திராதிமடம் ஸ்வாமிகள் (மத்வ மதஸ்தர்) அத்வைதம் அவைதிகமென அறைகூவி சண்டைக்கு அழைத்ததாகக் கண்டோம், யானைகண்ட குருடர்போல் மதச்சண்டையிடுவோர் அடையும் பயன் யாது? நமது பரமாசார்யாள் எதிர்க்காத பூர்வபக்ஷமும் சொல்லாத ஸித்தாந்தமும் இனி எவராலும்சொல்லமுடியாது. எல்லோரும் சேர்ந்து இழந்துவரும் நமது ஸநாதனதர்மத்தை ப்ரசாரம் செய்வதை விட்டு நமக்குள்ளே போர்செய்வது அழகல்ல. இரு கக்ஷியினரும் பிடிவாதம் செய்வார். பிறருக்கு செவிகொடுப்பது கஷ்டம். காமக்ரோதங்களை அடக்கவந்த வேதாந்த நூல்களைக் கொண்டு மார்தட்டி சண்டைக்கு அழைப்பது நன்றன்று." இதனால் ஏதோ ஸ்ரீஸ்வாமிகள் வலுவில் பிராம்மணர்களில் மதச்சண்டையை விளைவிக்கிறாரென்றும் எமது சநாதனதர்மானுஷ்டானங்களில் திருஷ்டி வைக்கவில்லை என்றும் ஸாமானியர்களில் ஓர் அபிப்பிராயம் நிலவும்படி எழுதப்பட்டிருக்கிறது. சாஸ்திரங்களைக்கற்ற கல்விமான்களும் மடாதிபதிகளும் சாஸ்திரவிருத்தமாய் சாஸ்திரங்களில் விபரீதமான அர்த்தங்கொண்டு செய்யப்படும் காரியங்களைத் தடுத்து ஆஸ்திகர்களை நல்வழியில் திருப்ப உபதேசம் செய்வது க்ரோதமூலமென்று 'ஆரிய தர்மம்' எப்படி அபிப்பிராயப்பட்டதென்பதுதான் நமக்கு விசித்ரமாக இருக்கிறது. தந்தை மகனை "அகார்யம்செய்யாதே நற்காரியங்களைச்செய்து சரியான ஞானத்தை அடைவாய், சன்மார்க்கத்திலிருப்பாய்" என்று சொன்னால் அது காமக்ரோதமூலமாகிவிடுமா? 'யானை கண்ட குருடர்போல் மதச்சண்டையிடுவோர் பயன் யாது? என்று இப்பத்திரிகை கேட்கிறது. அத்வைதமதத்தை அவலம்பித்து அத்வைதமதாசாரியாளின் ஆதரணையில் நடத்தப்படும் இப்பத்திரிகை இவ்வாறு கூறுவது சரியாகாதென்றே நாம் உறுதியாகக் கூறுவோம். யாதொரு மதத்தையும் தழுவாதவனும் அல்லது தான்கொண்ட

மதத்தின் பலனை அடையாதவனும்தான் இவ்வாறுசொல்வான். மோக்ஷாதி மகாபுருஷார்த்தங்களை அடைய எண்ணங்கொண்டு தம்தம் மதங்களி லுள்ள குறைகளை அறிந்து அவைகளை நிவர்த்திசெய்துகொள்ள உபாயங் களையாவது தேடவேண்டும், அல்லது அந்தந்த மதங்களை நன்குகற்றறிந்த கல்விமான்களின் மூலமாய் தம் தம் சம்சயங்களை பரிகாரம் செய்து திட மான நிச்சயத்தை அடையவேண்டும், இதுதான் புத்திமானின் கடமை. இப்பத்திரிகையின் மதமாகிய அத்வைதமதத்தை நன்கு கற்றறிந்தவரும் ஸ்ரீசிருங்கேரி மடாதிபதி ஸ்ரீசங்கராசாரியார்ஸ்வாமிகளுக்கு சாஸ்திரங்களை உபதேசித்தவருமாகியமகாமகோபாத்யாயம்தர்மாதிகாரி பிரம்மஸ்ரீ மைசூர் விருபாக்ஷசாஸ்திரிகள் போன்ற அநேக அத்வைத வைதிக லௌகிகர்கள் அத்வைதமதத்திலுள்ளகுறைகளைப்பற்றிஸ்ரீஉத்ராதிமடம்ஸ்வாமிகளாக்ஷே பிப்பதற்குசமாதானம்சொல்வதற்கானஉபாயங்களைத்தெரிந்துகொள்ளமை சூரில் 22-9-30வஓர்ஸபைகூட்டிஇப்பரதநாட்டிலுள்ள19அத்வைதமடாதி பதிகளுக்கு"ஸ்ரீஉத்திராதிமடம்ஸ்வாமிகள்அத்வைதமதம்அவைதிகமென்று சொல்வதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? வைதிகமென்று ஸ்தாபிக்க உங்களுக்குத் தெரியுமா? வைதிகமென்று ஸ்தாபிக்க என்ன எத்தனம் செய்கிறீர்கள்? இதை சீக்கிரத்தில் அறிவிக்கவேண்டும்"என்று மேற்கண்ட மடாதிபதிகளுக்கு அறிவிக்க தீர்மானம் செய்து சபையின் நடவடிக்கை கள் அச்சிட்டு துண்டுப்பிரசுரங்கள் மூலமாயும் பத்திரிகைகள் மூலமாயும் பிரசுரித்திருக்கின்றனர். இப்படியிருக்க மதங்களை பரிசீலனை செய்வதால் பயன் யாதென்று கேட்டது நாஸ்திகர்களின் வாக்யத்திற்கு ஒப்பாகும். தவிரவும் மதத்தில் திருஷ்டிவைக்கவேண்டாமென்று முதலில் கூறிவிட்டு அடுத்தாப்போல் அத்வைதம் சரியானதென்று கூறுவது ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவே இருக்கிறது. தவிரவும் இதே பத்திரிகையின் இரண் டாவது பக்கத்திலேயும் "அன்றியும் முன்னொரு காலத்தில் வால்மீகி பக வான் இப்புவியில் ஒரு சுலோகம் சொல்லியிருக்கிறார். அதாவது இப் பொழுதும் சாஸ்திரத்திலும் ஸதாசாரத்திலும் உறுதியுள்ள மனி தன் தர்மவிரோதிகள் விஷயத்தில் பீடாகரமான கார்யமேதுவோ அதைத்தான் செய்யவேண்டும்" என்று கூறியிருப்பதால் தர்ம விபரீதமாய் நடத்துபவர்களை பீடித்தாவது நல்லபுத்தியுண்டாகும்படி உபதேசிக்கவேண்டும். அதற்கு சக்தியில்லாவிடில் உபேக்ஷை செய்துவிட வேண்டியது. இதிலிருந்து அந்த துஷ்டர்கள் அடங்காமல் அனிஷ்டத் தையே அடைவார்களானால் அப்பொழுது புண்யவான் பொறுமையடைய வேண்டும்" என்று பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அப்பத் திரிகையின் துவக்கத்தில் தர்மோபதேசத்தை சிரமப்பட்டாவது செய்ய வேண்டுமென்று வற்புறுத்திவிட்டு அடுத்தாப்போல் தர்மோபதேசம் செய்ய வேண்டாமென்று சொல்வது எவ்வளவு தூரம் பொருந்துமென்பதை எமது நேயர்களே கவனிக்கட்டும். இவ்வாறு பரஸ்பரம் விருத்தமாய்ப்

பேசுவது அத்வைதமதத்திற்குத்தான் பொருந்தும். இது நம்முடைய அபிப்பிராயமன்று. அத்வைதமதத்தின் வெகுபுராதனமான ஆசாரியர்களே.

अनवस्थादयो दोषाः सत्तां निघ्नन्ति वस्तुनः ।
अद्वैतिनां ते सुहृदः प्रपञ्चयेतत्प्रसञ्जकाः ॥

அத்வைதசித்தி பிரம்மானந்தீயம் பக்கம் 472 (பூனா எடிஷன்)

என்று அவர்களின் மூதோர்வாக்யத்தை உதாஹரித்திருக்கின்றனர். இதன் தாத்பர்யமாவது பரஸ்பர விரோதமாய்ப் பேசுவது முதலிய தோஷங்கள் அத்வைதிகளுக்கு தூஷணங்களாகமாட்டா அவ்வாறு கூறுகிறவர்கள் அத்வைதிகளுக்கு மித்திரர்களேயாவார்கள். அப்படி சொல்வதற்குக்காரண மென்னவென்றால் அத்வைதமதத்தின்படி ஸர்வமும் பொய் (மித்யை) என்று சிந்திக்கவேண்டியிருக்கிறது. அதற்கு இவ்வாறு விருத்தமாய்ப் பேசுகிறவர்களின் வார்த்தையில் ஜனங்களுக்கு சரியான நம்பிக்கைபோய் எல்லாம் கெட்டுப்போய் உலகமே பொய் என்று சித்தித்துவிடும். அதனால் எமது சகோதரப்பத்திரிகை உண்மையான அத்வைதமதத்தைத் தழுவிய தென்றெனலாம். அப்படிச் சொல்லவும் பாதகமிருப்பதாய்த் தோன்று கிறது. அத்வைதமதாசாரியாளான ஸ்ரீ சங்கராசாரியார் "தசசுலோகி" என்ற நூலில்

न शास्ता न शास्त्रं न वर्णाः न वर्णाश्रमाचारधर्माः ।
नमेधारणाध्यानयोगादयोऽपि । न माता पितावा न देवा न लोकाः ।
न देहाः न यज्ञाः न तीर्थं ब्रुवंति । என்றும்
கீதாபாஷ்யத்தில் मुमुक्षोः सर्वकर्मसन्यासविधानात् ।

என்றும் பலவிடங்களில் ஸ்நாநம், ஸந்தியாவந்தனம், யாகம், சிராத்தம், சிரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலிய எல்லா ஸநாதன வர்ணாசிரம தர்மங்களும். செய்யத்தகுந்ததல்லவென்றும் சர்வக்ரியாஹீனமானபரபிரம் மத்துடன் ஜீவன் ஐக்யமடைவதால் ஸநாதனதர்மானுஷ்டானம் போதா தென்றும் கூறியிருக்கிறார். ஆதலால் வர்ணாசிரமாசார அனுஷ்டானங்கள் அத்வைதமதத்திற்கு ஒத்ததல்லவென்றே ஆகும். நாஸ்திகனென்றவன் நேரில் கண்ணுக்குத் தோன்றும் பதார்த்தங்கள் உண்மை என்று ஒப்புக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாதவைகள்தான் பொய்யென்று உரைக்கி றான். அத்வைதமோ கண்களுக்குப் புலப்படாதவைகளை பொய் என்று சொல்வதுமின்றி தற்போது கண்ணுக்குப் புலப்படுகிறவைகளும், இதற்கு முன் புலப்பட்டவைகளும், இனி புலப்படப்போகிறவைகளும் பொய் யென்று சற்று அதிகமாகவே உறைக்கிறது. நமது பரமாசாரியாள் எதிர்க் காத பூர்வபக்ஷமும், சொல்லாத விஸ்தாரமும் இனி எவராலும் சொல்ல

முடியாதென்று கூறப்பட்டிருக்கிறது. ஆதைப்பற்றி நம்மவர்கள் விவாதிப்பதில்லை. அத்வைதமதம் புதிதானதென்றும் வேறு எந்த மதாசாரியாளும் அத்வைதத்தை சொல்லவில்லை என்றும் மனுமாந்தாதாதிகள் அனுஷ்டித்து வந்தது த்வைதந்தானென்றும் நம்மவர்கள் ஸ்பஷ்டமாய்க் கூறுகின்றனர். ஸமஸ்தமான 'பிரபஞ்சமும் மித்யை என்றும் நானே ஈசுவரன் என்றும் சொல்வதை "அஸத்யமப்ரதிஷ்டம்தே, ஈசுவரோஹமஹம் போகீ" முதலிய சுலோகங்களால் நிஷேதித்து "மாமப்ராப்யைவ கௌந்தேய ததோயாந்த்யதமமாம்கதிம்' என்ற பிரமாணங்களால் அநந்தமான துக்கமுண்டாகுமென்று ஸ்ரீ பகவத்கீதை அறிவிப்பதாலும் "குர்வன்னேவேஹகர்மாணி" முதலிய பல சுருதிகளாலேயும் 'ஸ்வேஸ்வேகர்மண்யபிரத;' என்ற பல கீதா வாக்யங்களாலேயும் "ஓம் ஆவிருத்திரஸக்ருதுபதேசாத்முதலிய பிரம்மசூத்திரங்களாலேயும்எல்லோராலும்அனுஷ்டிக்கப்படவேண்டிய வர்ணாசிரமாசாரங்கள் த்வைதமதத்திற்கே பொருத்தமானவைகளென்றும் அவைகளை அந்த த்வைதமதத்தின்படி சரியான பாவனையுடன் அனுஷ்டித்து அவைகளை நன்கு காப்பாற்றிவரவேண்டுமென்றும் எமது ப்ராசீனமகரிஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வர்ணாசிரமாசாரங்கள் கலியின் கொடுமையால் சம்பூர்ணமாய் அழிந்துபோக இன்னமும் வெகுகாலமாவதை தற்போதே அத்வைதமதத்தில் பிரமைகொண்டு அழித்துப்போடலாகாதென்றும் அத்வைதமதத்திற்கு ஸ்பஷ்டமான பிரமாணங்கள் வேதத்தில் காணப்படுவதில்லை என்றும் எண்ணத்துடன்தான் ஸ்ரீஉத்திராதிமடம் ஸ்வாமிகள் த்வைதாத்வைத விசாரங்களை ஆங்காங்கு நடத்திவருவதாய் அறிகிறோம். வீணாக அத்வைதமதத்தையோ அம்மதத்தைத் தழுவியவர்களையோ அவமதித்துப்பேசவோ அல்லது கலகத்தை விளைவிக்கவோ ஸ்ரீ ஸ்வாமிகள் இவ்வாறு செய்வதில்லை. தம் தம் கொள்கைகளைப்பற்றி பகிரங்கமாய் விவாதம் செய்து ஸ்தாபிக்க முன்வருவது மடாதிபதிகளின் கடமையே ஆகுமென்பதை நம்மவர்கள் நிச்சயிப்பார்களாக.

---

கும்பகோணம் "மாத்வமித்ரன்" பத்திரிகை **3**-வதுவாலியம் **9**-வது நம்பரிலிருந்து எடுக்கப்பட்டது:—

# இது பெரியாரின் மேன்மையே.

26—3—31வ வெளியான 'ஆரியதர்மம்' பத்திரிகையில் "இது பெரியாரின் பெருமைக்கழகா" என்ற தலைப்பின்கீழ் ஓர் சாஸ்திரியார், ஸ்ரீ உத்தராதிமடம் ஸம்ஸ்தானாதிபதியாகிய ஸ்ரீமத் ஸத்யதியான தீர்த்த ஸ்ரீ பாதாள் தற்போது நடத்தி வரும் துவைதாத்வைத விசாரத்தைக் குறைகூறி நீண்டதோர் வியாஸத்தை எழுதியுள்ளார். அதில் ஸ்ரீஸ்வாமிகள் பொறுப்பில்லாமல் மனம்போனபடி இவ்வாறு சொல்லிவிடலாகாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. எண்ணிறைந்தசிஷ்யர்களுக்கு ஆசார்யத் தன்மையை வகித்திருக்கும் த்வைதாசாரியாள் "த்வைததத்வமானது வேதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்று ப்ரஸ்தானங்களால் கூறப்பட்டிருக்கிறது. அவைகளால் சித்தமாயுள்ள துவைத சித்தாந்தத்தையே அவலம்பித்து பரபிரம்மத்தின் அனுக்ரஹத்தால் அதிகாரிகள் ஸம்ஸார நிவிருத்தியைப்பெற்று ஆனந்தானுபவமடையவேண்டுமென்றும் வேதம், பிரம்மசூத்ரம், பகவத்கீதை ஆகிய இந்த ப்ரஸ்தான த்ரயங்களிலும் சொல்லப்படாததால் அவைதிகமாயுள்ளதாயும் "அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹு—ரநீச்வரம், ஈசுவரோஹப ஹப்போகீ" முதலான ப்ரமாணங்களால் நிந்திக்கப் பட்டதாயுமுள்ள அத்வைத தத்வத்தை ஆசிரயித்து அனர்த்தங்களை அடையாதீர்க" ளென்று கூறி துவைதமதஸ்தாபகாளான பூர்வாசாரியர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தத்வங்களின் உபதேசத்தை, ஸாதுக்களுக்காக அவர்கள் அப்பிராமாணிகமானமதங்களை பாவித்துநாசமடையலாகாதென்ற நல்ல எண்ணத்துடனும் மேலான விருப்பத்துடனும் ஸாதுக்களின் ஸமாஜங்களில் ஸாதுக்களிடமுள்ள கருணையால் ஸ்ரீஸ்வாமிகள் உபதேசம்செய்வது பொறுப்பற்றதன்று. இவ்வாறு உபதேசம்செய்வதைக்கேட்டுவிட்டு நஞ்சன்கூடு ரங்கண்ணா என்பவர் "அத்வைதமதம் அவைதிகமென்பதை நீங்கள் ஓர் சபையில் ஸ்தாபிப்பீர்களா" என்று கடிதமூலமாய் ஸ்ரீ உத்தராதி மடம் ஸம்ஸ்தானாதிபதியவர்களைக் கேட்கவும் அவர் ஸபையில் ஸ்தாபிப்பதாய் பதிலளித்தார். அப்போதுமட்டிலல்ல. இப்போதும் சபையில் அவ்வாறு ஸ்தாபிக்கத் தயாராயிருப்பதாய் அறிவித்திருக்கிறார்.

துவைதமதம் அத்வைதமதம் ஆகிய இவ்விருமதங்களும் ஒன்றுக்கொன்று எதிரிடையானவைகளே. இவ்வாறு பரஸ்பரம் விருத்தமான இருமதங்களும் எல்லோருக்கும் பிரமாணபூதமாயுள்ள ப்ரஸ்தான த்ரயங்களால் ஸித்தமாகமாட்டா என்பதை ஸாமானிய ஜனங்களும் ஒப்புக்கொள்ளத் தகுந்தது. இவ்விரண்டு மதங்களில் ஒன்றைத்தான் இவைகள் நிர்ணயித்துக்கொடுத்திருக்க வேண்டும். ஆகையால் இவ்விரண்டு மதங்களின் ஸ்தாபகர்களான ஆசாரியார்களில் யாரோ ஒரு ஆசாரியாள் அக்ஞானத்தாலோ அல்லது பிரமத்தாலோ தம்மதம் ஒன்றை ஸ்தாபித்திருக்கவேண்டும் என்றுசொல்லத்தான் வேண்டியிருக்கிறதே ஒழிய வேறுவழியில்லை. இப்படியிருக்க த்வைதம் அத்வைதம் இரண்டு மதங்களும் வைதிகமென்றும் அந்தந்த மதஸ்தாபகாசாரியர்கள் சரியாகத்தான் அந்தந்த மதஸ்தாபனம் செய்திருக்கின்றனரென்றும் இந்தசாஸ்திரிகள் சொல்வது யுக்தமாகாது. புத்தர்ஸாக்ஷாத் பகவானின் அவதாரமானதுபோல் அந்தந்த மதாசாரியர்கள் அவதாரபுருஷர்களாயிருக்கலாம். ஆயினும் பகவானின் அவதாரமான புத்தரின்வாக்யம் எப்படி நம்பத்தகாததாய்பிறரை ஏமாற்றவேண்டி கிளம்பியதோ அப்படியே தான் துவைதாசாரியாளோ அல்லது அத்வைதாசாரியாளோ இவ்விருவர்களிலொருவர் அவதாரபுருஷராயிருப்பினும் பிறரை ஏமாற்ற வேண்டி பௌத்த மதத்தைப்போல ஓர் மதத்தை ஏற்படுத்தியதாய் நாம்சொல்லவேண்டியிருக்கிறது. ஆகையால் கஷ்டசாத்யமான மகாபுருஷார்த்தத்திற்காக யத்தனப்படுகிறவன் தனக்குவரும் மஹத்தானபயன் யாது? அதற்கு ஸாதனங்கள் எவை? என்பதை நிர்ணயப்படுத்திக்கொண்டு பிரவிருத்திக்கவேண்டுமேயல்லாது இது தன்னுடைய ஆசாரியாள் சொன்னது என்பதைக்கொண்டுமட்டில் கேவலம் சிரத்தையால் மயங்கிப்போய்ப்பலனைத்தாததாயும் அனர்த்தத்திற்கு ஸாதனமாயுமுள்ள தத்வங்களை வைத்துக்கொண்டு பிரவிர்த்திக்கலாகாதென்று உபதேசிப்பது எல்லா மதாசாரியர்களின்கடமையே ஆகும். ஆகவே ஸ்ரீ சங்கராசாரியாள் முதலான எல்லா மதாசாரியர்களும் இதர மதங்களிலுள்ள தோஷங்களை எல்லாம் அறிவித்துக்காட்டி இதர மதங்கள் தோஷமுள்ளவைகளென்றும் அவைகளில் சொன்னபடி அநுஷ்டிக்காதீர்களென்றும் தாம் சொன்னபடித்தான் அநுஷ்டித்து மகாபலனை அடையுங்களென்றும் உபதேசம்செய்திருக்கின்றனர்.

தங்கள் தங்கள் மதம் பிராமணிகமென்றும் இதர மதங்கள் அபிராமணிகமென்றும் நிரூபிக்கும் பௌத்தமதம், மகம்மதிய மதம், நாஸ்திகமதம், ஜைனமதம், கிருஸ்தவமதம், முதலான மதங்களிலும் அந்தந்த மதங்களில் அபிமானமுள்ளவர்கள் அந்தந்த ஆசாரியாளிடம் "மகிமையையும், ஞானபலத்தையும், கருணையையும், லோகோபகார சிந்தையையும், தர்மஸ்தாபனத்தில் அவர்களுக்கிருந்த ஊக்கத்தையும்" காண்கிறார்கள். அவர்கள் அவதார புருஷர்களென்றும் சொல்லுகின்றனர்.

அத்வைத மதாசார்யாள் நாஸ்திக ஜைனாதி மதங்களைப்பிரமாணத்தை மூலமாகக் கொள்ளவில்லையென்று எங்ஙனம் கூறத் துணிந்தார்களென்று மேற்கூறிய மதத்தார்கள் கேட்டால் அந்த மதங்கள் ப்ரமாணங்களால் சித்தமானதல்லவென்றும் அந்த மதங்களின்படி ஆசரணைகளைச் செய்தால் பலனில்லாதிருப்பதுடன் அனர்த்தம் நேரிடுமென்றும் ஜனங்கள் தோஷங்கொண்ட மதத்தை ஆசிரயித்து கெடலாகாதென்றும் அத்வைத மதாசாரியாள் நிர்வியாஜமான கருணையால்தான் நிரூபித்திருக்கிறாரேயன்றி இதர மதங்களின்மீது துவேஷத்தால் சொன்னதன்று என அத்வைதிகள் பதில்சொல்வார்களல்லவா? அதையே நாம் இப்பொழுது அத்வைதிகள் குறைகூறுவதற்கு பதில் கூறவேண்டியிருக்கிறது.

"வைதிக மதங்களுக்குள் முதன்மையாய் விளங்கும் அத்வைத மதத்தை ஸ்தாபனம்செய்த ஸ்ரீ பரமேசுவரமூர்த்தியின் அவதாரரூபாளான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியாள் பரமவைதிகோத்தம சிகாமணிகளென்றும் அறிவே அவனியில் மானிட உருவமாய்த்தோன்றிய மூர்த்தி என்றும் மறைகளின் தத்வார்த்தங்களை அஞ்ஞானிகளுக்குபதேசித்து பிறவிப்பிணியைப் போக்க வேண்டுமென்று இப்புவியிலவதரித்த கருணைக்கடலென்றும் மேனாட்டிலுள்ள புறமதஸ்தர்களான மேதாவிகள் தங்கள் நூல்களில் வெளியிட்டிருக்கிறார்கள்" என்று சாஸ்திரிகள் கூறுகிறார். இச்சந்தர்ப்பத்தில் நமது நேயர்கள் கவனிக்கவேண்டியது மற்றொரு விஷயமுமுண்டு. மேனாட்டுக் கல்விபடைத்தவர்களாயும் புறமதஸ்தர்களுமான ப்ரொபஸர் S. ராதாகிருஷ்ணன் எம். ஏ; S. தாஸ்குப்தா எம் ஏ; பி. எச். டி. W. S. ஊர்காட் பி, எச்.டி.

முதலானவர்கள் இயற்றியுள்ள நூல்களில் அத்வைத மதம் பௌத்த மதந்தானென்றும், பௌத்தமதந்தான் வேதமென்னும் போர்வையைப் போர்த்துக்கொண்டு அத்வைத மதமென்று வெளியில் உலாவுகிறதென்றும் அத்வைதமதம் ஸ்ரீசங்காசாரியாளின் சுதந்திரமான மதமேயன்றி வேதம்முதலிய ப்ரஸ்தான த்ரயங்களால் சித்தமான தல்லவென்றும் நன்கு அறிவித்திருக்கின்றனர்.

அத்வைதமதம் பௌத்தமதமென்னும் வியவஹாரம் இப்பால் வந்ததல்ல. ஆதிசங்காசாரியாளின் பாட்டன் (பரம குருவான) ஸ்ரீ கௌடபாதாசாரியாள் காலம் முதற்கொண்டே இந்தவ்யவஹாரம் ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவருகிறது. எப்படியெனில் கௌடபாதாசாரியாள் விக்ஞானவாதிகளாகிய பௌத்தர்களைப்போல் ஞானத்தில் எல்லா பிரபஞ்சமும் கல்பிதமானது என்றும் இந்த பிரபஞ்சம் மித்யை (முக்காலத்திலுமில்லை) என்றும் சொல்வதால் பௌத்தமதமேதான் தம்மால் (அத்வைதிகளால்) வெளியிடப்பட்டிருப்பதாய் என் சொல்லக்கூடாதென்று அவர் சங்கித்துக்கொண்டு ஞானத்தில் ஜகத் கல்பிதமானது (மித்யை) என்று சொல்லும் பௌத்தர்களைப்போல் ஜகத்தை பொய் என்று தாம் நிராகரணம் செய்கிறாயினும் எந்த ஞானத்தில் ஜகத்தை கல்பிக்கப்படுகிறதோ அந்த ஞானம் தன்னுடைய (அத்வைதிகளுடைய) மதத்தில் ஸகல பேதாகிதமானதென்றும் பரிபூர்ணமானதென்றும் உற்பத்தி நாசம் இவைகளில்லாததென்றும் கேவலஞானரூபமானதென்றும் உபநிஷத்தால் மட்டில் அறியப்பட அருகமுள்ள தத்வமென்றும் சொல்லப்படுவதாயும், பௌத்த மதத்திலோ இவ்வாறு அந்த ஞானம் சொல்லப்படுவதில்லை என்றும், ஆதலால் தம்முடைய அத்வைதமதமும் பௌத்தமதமும் ஒன்றென்ற சம்சயம் ஏற்பட அவகாசமில்லைஎன்றும் சமாதானம் சொல்லியிருக்கிறார். இதனால் அத்வைதமதம் பௌத்தமதமென்னும் வியவஹாரம் ஆதிசங்காசாரியாளின்முன் முதலே வந்து கொண்டிருப்பதாய் எண்ணப்படுகிறது. அதுவுமன்றி ஆதிசங்காசாரியாள் காலத்திலும் "விக்ஞானவாதஸ்யசகிம்விபேதகம் பவன் மதாத்ப்ரூஹி இதி: பரம்வ்ராஜ, விக்ஞானவாதீக்ஷணிகத்வமேஷாம் அங்கீசகாரேதிமகான்விசேஷ:" என்று ஆதி சங்காசாரியாளை உங்கள் மதத்திற்கும் விக்ஞானவாதத்திற்கும் (பௌத்

தமதத்திற்கும்) உள்ள வித்தியாசத்தைச்சொன்னபின் தான் ஓர் ஆலயத்தில் பிரவேசிக்கலாமென்று பலர் வற்புறுத்தவும் அதன் பேரில் ஸ்ரீ சங்காாசாரியாள் " விக்ஞானத்திற்கு க்ஷணிகத்வ பஹுத்வத்தை பௌத்தர்கள் சொல்லுகின்றனர், நாங்கள் (அத்வைதிகள்) விக்ஞானமொன்றே நித்யமெனச்சொல்லுகிறோம். ஆதலால் எங்கள் மதத்திற்கும் பௌத்தர்களின் மதத்திற்கும் பல பேதங்களுண்டு '' என்று சொல்லியுள்ளார். மேலும் பஞ்சபாதிகா விவரணாதி அத்வைத கிரந்தங்களில் " எங்களை பௌத்தரெனச் சொல்லாதீர்கள். பௌத்தரெனச்சொல்லாதீர்கள் எங்களுக்குள் பேதமிருக்கிறது'' என்று முறையிடப்படுகிறது. இதனால் அத்வைதமதம் பௌத்தமென்று பாம்பரையாய்ப்பண்டிதர்களால் சொல்லபபட்டுவருவதாய் ஏற்படுகிறது. இந்த ஆக்ஷேபணையை பரிகரித்துக்கொள்ள அவர்கள் பிரயத்தனப்படுகின்றனரேயன்றி அது பரிகாரமாவதில்லை என இந்த ஸ்வாமிகளே பம்பாய் மாகாணத்தில் நடந்த ஸபையில் நிரூபித்துக்காட்டியிருக்கிறார். அந்த விக்ஞான தத்வத்தை அத்வைதிகளைப்போல் நித்யமென்று சொல்லுகிறவர்களும் பௌத்தமதத்திலுமிருக்கின்றனர். ஆதலால் அத்வைதமதம் பௌத்தமதத்திலிருந்து தனியானது என்று சொல்லும் காரணம் நிலைநிற்காமற்போய் அத்வைதமதம்பௌத்தமதமென்றேஆகிறது. அத்வைதமதத்தின் பிரம்மரூபமான விக்ஞானதத்வத்தை ஸகல பேதவிகலமென்று சொல்லியிருப்பதால் அந்தவிக்ஞானம் பௌத்தர்களின் விக்ஞான தத்வத்தினின்றும் எப்படி பின்னமாகுமோ தெரியவில்லை. ஒருபேதமுமில்லை என்றால் பௌத்தரின் விக்ஞான பேதமும் அத்வைத பிரம்மத்திற்கில்லாமற்போகும். அதனால் இரண்டும் ஒன்றுதானென்றாகும். இவ்வாறு ஞாதாஞேயன் இவை ரகிதமான விக்ஞானதத்வமானது. எந்த உபநிஷத்திலும் சொல்லப்படவில்லையென வாதிக்கப்படுகிறது.

"அத்வைத மதத்தார் வேதத்திற்குபிராமாண்யத்தை ஒப்புக்கொண்டிருக்கின்றனர், வேதோக்தமாய் அவரவர்களின் வர்ணாசிரமோசிதமான ஸ்நானம் ஸந்தியாவந்தனம் யக்ஞம் முதலான எல்லா காரியங்களையும் இன்னமும் செய்துகொண்டு பிரம்மார்ப்பணமென்று சொல்லுகின்றனர், பௌத்தர்களோ வேதத்தை பிரமாணமென்று சொல்வதில்லை, யக்ஞாதிகளைச்செய்து பிரம்மார்ப்பணமென்று சொல்வதில்லை, அப்படியிருக்க அத்வைதிகள்

எப்படிபௌத்தர்களாவார்கள்'' என்றுசம்சயம் வரக்கூடும். "நவர்ணா: நவர்ணாச்ரமாசார தர்மா :, நமேதாரணா த்யான யோகாத யோபி, நவேதா: நயக்ஞா: நதீர்த்தம் ப்ருவந்தி, ந சாஸ்தா நசாஸ்த்ரம் நசிஷ்யோ நசிக்ஷா'' இவ்வாறு அநேக அத்வைதிகளின் நூல்களில் பிராம்மண்யம் பொய், வர்ணாசிரமாசாரங்கள் பொய் (பொய்யென்றால் இப்பொழுது செய்துவருவதும் பொய் நேற்று செய்தவைகளும் பொய், இனி செய்யப்போகிறவைகளும்பொய்) தேவதைகள் பொய், வேதம்பொய், தீர்த்தங்கள் பொய் என்று சொல்லியிருப்பதைக்கொண்டுஜீவன்தான்எப்போதும்நிர்குணனும் நிஷ்கிரியனும் பிரம்மசொரூபனுமாவதால் ஜீவனுக்குஸ்நானம்ஸந்தியை, யக்ஞம் முதலான வர்ணாசிரம தர்மங்களைச்செய்வதற்கு கிரியாசக்தி இல்லாமற் போய்விடுகிறதுமன்றி ஸ்நானஸந்தியாதிகள் கிரியைகளாக ஏற்படுகிறதில்லை. ஜீவனே பிரம்மமாயிருப்பதால் இந்த வர்ணாசிரம கர்மங்களைச் செய்து பிரம்மத்திற்கே அர்ப்பணம் செய்வது எப்படியோ? ஆதலால் அத்வைதமதத்தின்படி கர்மாசாரணைகளை நடத்துவது பொருந்துவதில்லை. பிரமாணமென்றால்அது தத்வஞானத்தைத் தருகிறதென்றுஅர்த்தமிருப்பதன் நிமித்தம் பௌத்தர்கள் வேதத்தை அபிரமாணமென்கிறார்களென்றால் உண்மையாயுள்ள தத்வங்களின் ஞானத்தை வேதம் தருவதில்லை என்று சொல்வதாய் அர்த்தமாகிறது. அதாவது வேதங்களில் சொல்லப்பட்ட தத்வங்கள் பொய் மித்யை என்று சொல்லுகின்றனர். பிரம்மஸத்யம், ஜகன்மித்யை என்னும் அத்வைதமதத்தின்படி ஸத்யபூதமான பிரம்மம் அவாச்யனும் அக்ஞேயனுமாயிருப்பதன் நிமித்தம் வேதாதிகளால் பிரம்மம் சொல்லப்படமாட்டாது. அதனால் மித்யையாயுள்ள ஜகத்துதான் வேதத்தால் சொல்லப்படுவதாய் சொல்லவேண்டும். வேதத்தால் சொல்லப்படும் தத்வம் பொய் (மித்யை) என்றால் இல்லாமலிருக்கும் அர்த்தத்தை வேதம் கூறுகிறது, அதனால் அது அபிரமாணம் என்றிவ்வாறு சொல்வதுபோல் ஆகிறதல்லவா ? ஆகவே பௌத்தர்கள் (விக்ஞானவாதிகள்) சொல்வதுபோல் ஞானமொன்றே ஸத்யம், ஜகத்மித்தை, வேதம் அபிரமாணம் என்று சொல்லும் மதமும் பௌத்தமதம் தானாகும். ஆகையால் அத்வைதமதம் வைதிகமதமென்று எண்ணாதீர்களென்று ஸ்ரீஸ்வாமிகள் கூறுகிறார்.

"வேதங்களெனப்பெயர்பெற்ற கடலைக்கடந்து அதிலிருந்தும் ஸாரார்த்தமான அத்வைதமென்கிற அமுதத்தைப்பெற்று" என்று சாஸ்திரிகள் ஏதோ அடுக்குகிறார். நசாஸ்தா: நசாஸ்த்ரம் நவேதா: என்றுசொல்லும் அத்வைதமதத்தில் வேதங்களும் சாஸ்திரங்களும் ஏது? அவைகளை கடைவதெப்படியோ? அத்வைத அமிர்தம் எப்படித்தான் கிடைத்ததோ தெரியவில்லை. இப்படிச் சொல்வது எப்படி இருக்கிறதென்றால் "ஏஷவந்த்யா ஸுதோயாதி கபுஷ்பகிருதசேகர:, மிருகதிருஷ்ணும்பஸிஸ்னுத: சசசிருங்கதனுர்தா:" "இதோ இவன் மலடிமகன். அவன் ஆயாயத்திலுண்டான புஷ்பத்தைச் சூட்டிக்கொண்டருக்கிறான். கானல் ஜலத்தில் அவன் ஸ்நானம்பண்ணினான். முயற்கொம்பைப்பிடித்து தனுஸ்ஸாகக் கொண்டிருக்கிறான்" என்ற கதையாகிறது எனவேண்டும்.

பிரமத்தால் அஸத்யமான இப்பிரபஞ்சத்தில் ஸத்யபுத்தி ஜனங்களுக்கு ஏற்பட்டிருப்பதாய் சாஸ்திரிகள் சொல்லுகிறார். ஜகத்தை அஸத்தியமென்று அறிபவர்கள் அஸுரர்களென்றும் அவர்கள் அதோகதிதான் அடைகிறார்களென்றும் பகவான் பகவத்கீதையில் அஸத்யமப்ரதிஷ்டம்தே முதலான ஸ்லோகங்களில் சொல்லியிருப்பதை பரிசீலனை செய்திருந்தால் "ஜகத்தை ஸத்யமென்று அறிவதுஸகல அனர்த்தங்களைபுண்டுபண்ணுகிற" தென்று எழுதியிருக்கமாட்டார்தான். ஈசுவரோஹம் இத்யாதிகளை அறிந்துகொள்பவர்கள் அசுரஸுபாவமுள்ளவர்களென்று பகவத்கீதையில் சொல்லப்பட்டிருப்பதன் நிமித்தம் அதற்கு விருத்தமாக ஜீவன் பிரம்மன் இருவர்களின் ஐக்யத்தைச்சொல்வது எப்படி ப்ராமாணிகமாகும்?

"இவ்விதம் ஸ்பஷ்டமாய் மூலாசார்யர்களால் வேதமூலமாகவே அத்வைதமதத்தை ஸ்தாபிக்கிறேனென்று பிரதிக்ஞை செய்துகொண்டு தொடங்கிய விஷயத்தை அற்பமும் கவனியாமல் அவைதிகமெனச்சாற்றி சான்றோர் உள்ளத்திற்கு கலக்கத்தை உண்டுபண்ணி ஆனந்திப்பது அறிஞர்கள் செய்கையாகுமா?" என்று சாஸ்திரிகள் கேட்கிறார். கபிலர், காணாதர், ஜினர் முதலானவர்கள் ஸ்பஷ்டமாய் தம்தம் மதங்களை வேதாதிப்ராமாணங்களால்தான் ஸ்தாபனம் செய்கிறோமென்று பிரதிக்ஞை செய்துகொண்டு தொடங்கிய விஷயத்தை அற்பமும் கவனியா

மல் எல்லாமதங்களும் அப்பிரமாணிகமென்று சொல்லி கபிலர் முதலான மகான்களின் மனதிற்கு கலக்கத்தை விளைவித்து ஆனந்திப்பது ஞானிகளின் செய்கையாகுமா என்றுநாம் அத்வைதிகளை திருப்பிக்கேட்டால் அவர்கள் என்ன உத்தரம் சொல்வார்களோ அதைத்தான் நாங்களும் திருப்பிச்சொல்லவேண்டும்.

'வைதிகசிரோரத்னமாய் விளங்கும் ஓர் மதத்தைக்குறைகூற வேண்டியாபலமடமங்களைப்பெரியோர்கள்ஏற்படுத்தியிருக்கிறார்க' ளென்கிறார் சாஸ்திரியார். இவ்வாறு கேட்பது ப்ராமாணிகர்களுக்கு மிகவும் ஹாஸ்யாஸ்பதமாக இருக்கிறது. "ஸ்வபக்ஷஸாதன பரபக்ஷோபாலம்பாப்யாம்நிர்ணய:" என்று சொன்னபிரகாரம் பரஸ்பரம் முற்றிலும் விருத்தமான மதங்களில் ஓர் மதத்திற்குள்ள தோஷங்களைக்காட்டாமலும் அதைக்குறைகூறாமலும் மற்றமதத்தை அபிவிருத்தி செய்வதெப்படி? மடாதிபதிகளாயிருப்பவர்கள் பரஸ்பரம் விருத்தமான எல்லாமதங்களும் உத்தமமானவைகளென்று சொன்னால் ஒரே பதார்த்தத்தைப் பார்த்து இதுவெள்ளியெனத் சொல்லுகிறவனும் ஸத்யம்தான் பேசுகிறான், இது வெள்ளியல்லவெனச் சொல்லுகிறவனும் ஸத்யம்தான் பேசுகிறானென்று மத்யஸ்தம் பேசுகிறவனைப்போல் அறிவு கெட்டவர்களேயாவார்கள். பூர்வாசாரியர்களால்ஓர்மதத்தைஸ்தாபித்து அந்த மதமானது இதர மதத்தால் அடிபட்டு அழியலாகாதென்றுதான் மடங்களை ஸ்தாபித்திருக்கின்றனரேயல்லாது ராவண: ஸ்வஸ்தி, ராம: ஸ்வஸ்தி என்று நாஸ்திகமதமும் ஸரி, பௌத்தமதமும் ஸரி, நியாயமதம் ஸரி, கபிலமதம் ஸரி, அத்வைதமதமும் ஸரி, துவைதமதமும்ஸரி என்று சொல்லிவிட மடங்களை ஸ்தாபிக்கவில்லை. எல்லாமதங்களும் ஸரியென்று சொல்வதாயிருந்தால் மடங்களால் ஜனங்களுக்கு யாது பிரயோஜனமுண்டு? ஓர் பதார்த்தத்தை மற்றொருவன் பலாத்காரமாய் அபகரித்திருந்து இது தன்னுடையதே அவனுடையதல்லவென்று இருவர்களும் வழக்கிட்டுக்கொண்டிருந்தால் அதை தீர்மானம் செய்ய நியாய இலாகா, போலீஸ் இலாகா முதலியவை வேண்டியிருக்கிறதல்லவா? அது எல்லோருடையது தானென்றிருந்தால் நியாய ஸ்தானம் முதலியவை அனுவசியம் தான். அதுபோல் ஜினர் கபிலர் முதலான எல்லா மதங்களும் ஸரியாகவே இருந்தால் மதஸ்தாபகர்களான ஆசாரியர்கள் செய்வதென்னமோ?

அந்த பீடாதிபத்யத்தைப்பெற்று அவர்கள் செய்யவேண்டிய வேலைதானென்னவோ? அலங்காரமாய் உட்கார்ந்துகொண்டு மிருஷ்டான்னத்தை போஜனம் செய்வதுதான் இவர்களின் வேலையாகும்.

இவ்வாறு அத்வைதம் அவைதிகமெனச் சொல்லி வருவதால் என்ன பிரயோஜனம். அத்வைதிகள் தங்கள் மதத்தை விட்டு விடப்போகிறார்களா என்னவென்று பலர் கேட்கின்றனர். ஒருவன் மதுபானம் செய்துகொண்டே இருக்கிறான், அவனுடைய தந்தை இந்த அகார்யத்தைச்செய்யாதே என்று சொல்லிப்பார்க்கிறார். மகன் யோக்யனாயிருந்தால் தந்தையின் சொற்படி நடந்து அதை விட்டுவிடுகிறான். அயோக்யனாயிருந்தால் அதை விடுவதில்லை. இதனால் தந்தைசொன்னது வியர்த்தமாகுமா என்ன? நாஸ்திகமதம் ஜினமதம் முதலியவை சரியானதன்று, நீங்கள் அவைகளின்படி ஆசரணைகளைச்செய்யாதீர்களென்று வைதிக மதாசாரியர்கள் பன்முறை உபதேசம்செய்தும் நாஸ்திகாதி எல்லா மதத்தினர்களும் அவரவர்களின் மதங்களைவிட்டுவிலகிச் சென்றனரா என்ன? சில யோக்யர்கள் விலகிச்சென்றனர், சிலரில்லை. அதுபோல் ''த்வைதாசாரியாள் அத்வைதமதம் வேதாதிப் பிரமாணசித்தமன்று, அந்த அத்வைதமதத்தை ஆசிரயித்துநானே பிரம்மமென்று உபாஸனைசெய்து பாழாய்ப்போகாதீர்க''ளென்று தத்வார்த்தத்தை அறிய விரும்புகிறவர்களிடம் பரமகருணையுடன் தந்தை மகனுக்கு உபதேசம் செய்வதுபோல் உபதேசிக்கிறார். சரியானபலனை அடையக்கருத்துள்ளவர்கள் கேட்கட்டும். பலனை வேண்டாதவர்கள் வேண்டாமே! அதனால் என்னபாதகம்?

''நம்மைப்போல் அந்தந்த மதங்களில் அபிமானங்கொண்டவர்களும் அவரவர்களின் ஆசார்யாளுடைய சித்தாந்தத்தை அங்கீகரித்தவர்களும் சிறந்த ஞானத்தாலும் குணங்களாலும் பலராலும் போற்றக்கூடிய மகிமைபெற்ற மகான்களான அனேகம் மடாதிபதிகளும் பண்டிதசிகாமணிகளான அவரவர்களுடைய சிஷ்யகோடிகளும் ஆங்காங்கு பிரகாசித்துக்கொண்டிருக்கின்றனர்'' என்கிறார். இது உண்மையே. ஆயினும், அவரவர்கள் தம்தம் மதங்கள் வேதாதிப்ரமாண சித்தமானதென்று ஸ்தாபனம்செய்வது அவரவர்களின் கடமைதான். மடாதிபதிகள்

நேரிலேயே நின்று அத்வைதம் அவைதிகமென்னும் வாதத்தை நிராகரணம் செய்யலாம். அல்லது உத்தமசீடர்களின்மூலம் இந்த வாதத்தை நிராகரிக்கலாம். ஆனல் வாதம் செய்பவர்கள் இந்நகரில் நடந்துகொண்டதுபோல் நடுவில் எழுந்துபோய் விடாமல் கடைசிவரையில் நின்று வாதாடி நிர்ணயம் செய்யவேண்டும். சரியான விதிகளை ஏற்படுத்திக்கொண்டு மதராஸிலேயே இச்சபை நடத்தப்படலாம். மத்யஸ்தமாயிருந்து சபையின் நடவடிக்கைகளைப் பிரசுரிக்க எம்மதத்தாரும் கிடைப்பார்கள்.

"தாம் எடுத்துக்கொண்ட ஸித்தாந்தத்திற்கு ஸாதகமாக சுருதிகளைக்காட்டி அவைகளுக்கு கௌணமாகவும் சில இடங்களில் பொருள்கூறியிருக்கலாம். அந்த ஸித்தாந்தத்தையனுஷ்டிக்கும் அதிகாரிகள் அதை பிரமாணமாகக்கொள்வது உசிதமே. கௌணமாகப் பொருள் கூறப்பட்ட சுருதி வாக்யங்களுக்கு மற்ருெரு ஆசார்யாள் முக்யமான வேறு கருத்தைக்கூறி தம் சித்தாந்தத்திற்கு ஆதாரமாய் காட்டியிருந்தால் இதைத் தவறு என்று எப்படிக்கூறமுடியும்?" என்று சாஸ்திரியார் கேட்கிருர். எந்த மதம் சுருதியால் முக்யமாய் சொல்லப்படுகிறதோ அந்த மதம் தான் சரியானதாகும். அமுக்யமாய் கௌணமாய்ச் சொல்லப்படும் மதம் சுருதி ஸம்மதமாய் சரியானதென்று ஆகாது. இல்லையேல் சார்வாகம், பௌத்தம், முதலிய எல்லா மதங்களும் வைதிகமே ஆகவேண்டும்' அந்த மதங்களுக்கேற்றபடி சுருதிகளுக்கு கௌணமான அர்த்தத்தை கல்பிக்கலாம். மதாசாரியார்கள் துவைதப்ரதிஷ்டாபஞசாரியாள் என்றும் அத்வைதமதப்ரதிஷ்டாபஞசாரியாள் என்றும் விருதுக்களை வெகு டம்பமாய் அச்சடித்து வைத்துக்கொண்டு அவரவர்கள் செய்யவேண்டிய துவைதாத்வைத மதங்களின்பிரதிஷ்டாபன காரியங்களைச் செய்யாமல் மடத்தில்போஜனம் செய்துகொண்டிருந்தால்தான் அவர்களின் பெருமைக்கு சிறுமை ஏற்படுமேயன்றி அவரவர்கள் செய்யவேண்டியதாயுள்ள மதஸ்தாபன விஷயத்தில் எத்தனைப்பட்டால் அவர்களின் கடமையை அவர்கள் முடித்து கீர்த்தியையும் புண்ணியத்தையுமடைவார்களென்பது நிச்சயம். ஓர் போலீஸ் உத்தியோகஸ்தரோ அல்லது நியாயாதிபதியோ குற்றவாளிகளை விசாரித்து சிக்ஷிக்காமல் தம் ஸ்தானத்தில் உட்கார்ந்துகொண்டு திருடனுகிய நீ உத்தமன், திருட்டுத்தனம் செய்யாத நீயும் உத்தமன்,

வியபிசாரியாகிய நீ உத்தமி, அதைச்செய்யாதிருப்பவளும் உத்தமி, கொலை செய்தவனும் உத்தமன் கொலைசெய்யாதவனும் உத்தமனே என்று சொல்லிக்கொண்டிருந்தால் அவனுக்குற்ற பெருமைநிலைநிற்குமா என்ன? "ஸகலஜாதிமத ஆச்ரமங்களுக்கும் அடிப்படையான நம் ஸனாதன தர்மத்திற்கேற்பட்டிருக்கும் இப்பெரிய ஆபத்தை அடியோடு விலக்கவேண்டு"மென்று சாஸ்திரிகள் கூறுகிறார். பிராம்மண்யாதிகள் பொய், (முக்காலத்திலுமில்லை) ஸ்வர்க்கலோகம் முதலியவை எல்லாம் பொய், யக்ஞாதி கிரியைகள் பொய், அவைகளால் ஏற்படும் பலன்கள் பொய், பலனைத் தரும் ஈசுவரனும் பொய் முதலியவைகளை போதிக்கும் அத்வைத மதத்தை நிராகரணம்செய்துதான் பிராம்மண்யாதிகள் ஸத்யம் பரலோகம் என்பது உண்டு, யக்ஞாதிகிரியைகள் உண்டு, அதற்கு பலன் என்பதும் உண்டு, பலதாதாவான ஈசுவரனும் உண்டு என்று ஸ்தாபனம்செய்து ஸநாதன தர்மத்தை ஸ்தாபிக்கவேண்டியிருக்கிறது என்றும் அதே வேலையைத்தான் தாம் செய்துகொண்டிருப்பதாயும் ஸ்ரீ ஸ்வாமிகள் கூறுகின்றார். உடம்பில் பல உபாதிகள் இருப்பினும் வெளியில் துண்ணூறுபூசி உடம்பை சுத்தமாய்க்காட்டுவதுபோல், பிராம்மண்யாதிகள்பொய், யக்ஞாதிகள் பொய், வேதம் பொய், தீர்த்தம் பொய், தேவதைகள்பொய் என்று மனதில் பாவனைசெய்துகொண்டு வெளியில் நாம்,வைதிகர்கள், வேதத்தை மூலமாகக்கொண்டவர்கள், யக்ஞத்தைச் செய்கின்றோம், தீர்த்த ஸ்நானம் செய்கின்றோம், தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் பூஜைசெய்கின்றோமென்று அத்வைதிகள் சொல்லிவருவது மனதிலொன்று வாக்கிலொன்று என்றதுபோலாகுமெனப்படுகிறது.

உபாதிவந்த பாலகனுக்கு ஔஷதம் கொடுத்துவந்தால் உபாதி நீங்குமளவும் அது அவனுக்கு கஷ்டமாகவே இருக்கும் ஔஷதத்தைத் தருபவரிடம் கோபமுமுண்டாகும், ரோகம் நீங்கியபின்பு ஔஷதம் தந்தவரிடம் நன்றி பாராட்டுவான். அப்படியே அதிகமான அன்பையும் கொள்வான், அவ்வாறு அந்தந்த மதத்தில் வீணான அபிமான ரூபமான உபாதி இருக்குமளவும் இதா மதாசாரியாள் செய்யும் தத்வோபதேசமாகிய ஔஷதத்தைக் கொடுத்துவரும் ஆசாரியாளிடம் க்ரோதமுமுண்டாகும். மதத்தின் நிஜமான தத்வத்தை அறிந்துகொண்டு வீண்

அபிமானமாகிய உபாதி நீங்கிய பின் ஔஷத ரூடமாகிய உபதேசத்தைத்தந்த ஆசாரியாளிடம் அவர்கள் நன்றிபாராட்டுவார்கள் தான். ஆதலால் விவேகிகள் எந்த மதத்திற்குச்சரியான பிரமாணமிருக்கிறது, எந்தமதத்திற்குச் சரியான பிரமாணமில்லை. என்பதை விசாரப்செய்து சரியான பிரமாணமுள்ள மதத்தை அவலம்பித்து ஐஹிகம், ஆமுஷ்மிகம், எல்லாபலன்களையும் அடைய வேண்டுமென்றுதான் பெரியோர் பல காரியங்களைச்செய்கின்றனர். அதனால் அவர்களின் மேன்மை வரவர விருத்தியேயடையுமென்பதில் ஆக்ஷேபணையில்லை.

பாகவத. ரங்கநாதாசாரியார்.

---



மாத்வர்களுக்கு மட்டில் தான்-

ஸ்ரீ உத்தராதிமடம் ஸமஸ்தானாதிபதியாகிய

## ஸ்ரீ ஸத்யதியான தீர்த்தஸ்வாமிகள்

அருளிச்செய்த

# ஸ்ரீ கீதாதத்வம்.

கும்பகோணம் மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் (ஆக்யம்) பாகவத ரங்கநாதாசாரியாரால் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீ பகவத் கீதையில் த்வைதமதம்தான் சொல்லப்படுகிறதென்பது நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ மத்வ மதத்தின் பிரமேயங்கள் பலவாறு வகுக்கப்பட்டு அவைகளில் ஒவ்வொன்றுக்கும் ஸ்ரீ பகவத்கீதையிலுள்ள ஆதாரங்கள் வெகு சிலாக்யமாய் எடுத்துறைக்கப்பட்டிருக்கின்றன. தேவநாகரத்திலும் தமிழிலும் மூலசுலோகங்களும் அவைகளுக்கு தமிழில் த்வைதபரமான அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த காகிதத்தில் அச்சாகிவரும் சுமார் 400 பக்கங்கள் கொள்ளும் முதற்பாகம் தற்பொழுது ஆர்டர் செய்கிறவர்கட்கு மட்டில் ரூ. 1–8–0 அட்வான்ஸாக அனுப்பப்படவேண்டும். பிரதி மாதமும் சுமார் 66 பக்கங்களுக்கு குறையாதசஞ்சிகையாய் இனுமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். சுமார் 80 பக்கங்களைக்கொண்ட முதற் சஞ்சிகைமட்டில் V.P.P. யில் அனுப்பப்படும். V.P.P. சிலவு வேறு. ஏராளமான டிமாண்டுகளிருக்கின்றன. இதுவரையில் இம்மாதிரியான புஸ்தகம் வேறு எவராலும் வெளியானதில்லை. மகாபண்டிதரான ஸ்ரீஸ்வாமிகளின் நூல் மாத்வர்களுக்கு எவ்வளவு உபயோகமுள்ளதென்பது நாம் சொல்லத்தேவையில்லை. தாமதியாது உடனே தங்கள் விலாஸத்தை தெளிவாய் எழுதி ஆர்டர் செய்யுங்கள்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

---

**ஸ்ரீ மத்வமதத்தின் கிரந்தங்களை சரியான எளிய தமிழ் நடையில் போதிக்கும் உயர்தர மாதப்பத்திரிகையான, மாத்வமித்திரனுக்கு, உடனே சந்தாதாரராய்ச்சேருங்கள். வருட சந்தா முன் பணமாய் ரூ மூன்றுதான்.**

# மகத்தான விற்பனை விளம்பரம்.

## மாத்வமித்திரன்.

**முதல் வாலியம்:**—இதில் ஜகத்சிருஷ்டியின் காலம் காரணம் வகைகள் முதலியவை பகவானுடைய வ்யூஹாவதாரங்கள் அவதாரங்கள் பகவத் ஆவேசம் பெற்றவர்களின் ஜாபிதா. தேவர்கள் தேவஸ்திரீகள் இவர்களின் பிரதிபிம்பபாவம், குணங்களின் சங்கியை, தாரதம்மிய விவரம், பஞ்சபேதம், பக்தியின்பெறுமை, பக்தர்களின் மகிமை உபாஸனை கிரமம், மோக்ஷத்தின் பிரகாரம், சற்குருவின் லக்ஷணம், பீமசேனருக்கு அதிகபலமிருந்ததின் காரணம், வாயுபகவானின் மேன்மை, பலித்தா சூக்தத்தின் அர்த்தம், மத்வமதத்தின் சிறப்பு, வேதத்தின் அநாதி அபௌருஷேயம், வர்ண நித்யத்வ வாதம், ஸ்ரீவேதவியாஸரின் வரலாறு, ஸ்ரீவாயு ஸ்துதியின் சரியான மொழிபெயர்ப்பு, ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் அற்புதச்செயல்கள், ஸ்ரீமத்வாசாரியார், ஸ்ரீஜயதீர்த்தர், ஸ்ரீபுரந்தரதாஸர் இவர்களின் ஜீவிய சரித்திரம், ஸ்ரீகிருஷ்ணரின் கைலாஸ யாத்திரை, சந்திரஹாஸ சரித்திரம் முதலிய ரஸமான கதைகள், ஸந்தியாவந்தன மந்திரங்களின் அர்த்தம். பிஷ்டபசுவிசாரம் முதலிய அரியபெரிய விஷயங்களடங்கியது. சுமார் 120 பக்கங்களைக்கொண்டது. சொற்ப காப்பிகள்தான் பாக்கி. இதன் விலை ரூ. 4—0—0.

**இரண்டாவது வாலியம்:**—இதில் பிரம்மாண்டத்தின் உற்பத்தி லயத்தின் பிரகாரம், வராஹாதி அவதாரங்களின் சரிதை, ராவணாதிகளின் உற்பத்தி, யுகங்களின் பரிமாணம், தசரதனின் பூர்வ விருத்தாந்தம், தேவர்களின் அம்சங்கள்பெற்ற வானரங்களின்விபரம், ஹரிஹரர்களின் யுத்தம், அதில் ஸ்ரீஹரியின் வெற்றி, ராமரும் பரசுராமரும் ஐக்யமானது. கூனியின் வரலாறு, குரங்காசுர வதம், மகாலட்சுமியின் லீலை, சீதை கைலாஸம்சென்ற விருத்தாந்தம், ஹரி வாயுக்களின் நட்பு, வாலியின் பக்தியும் மரணமும், ஹனுமாரின் பராக்கிரமம், வேதப்பிராமாண்யவாதம், வேதாபௌருஷேய வாதம் வேதவிஷயமான பல அரிய நிருபங்கள், சார்வாகமத கண்டனம், பரமாணுவாதம், போஜன பதார்த்தங்களிலும் அன்னமயாதி கோசாதிகளிலுமிருக்கும் பகவத் ரூபங்களின் சங்கியையும் விபரமும், ஸாலக்கிராமத்தின் மகாத்மியம், தத்துவமஸி வாக்ய விமரிசை, ஸ்ரீராகவேந்திரர், ஸ்ரீகோபாலதாஸர் சரித்திரம் முதலிய எண்ணிறந்த விஷயங்கள் நிறைந்துள்ளது சுமார் 160 பக்கங்களைக்கொண்டது. இதன் விலை இனி ரூ 4—0—0.

இவ்வருடத்திய சந்தாதாரர்களுக்கு மட்டில்

| | | | |
|---|---|---|---|
| 1 & 2 வாலியம் சேர்ந்து | ... | ... | ரூ. 5—0—0 தான் |
| 1 வாலியம் மட்டில் ... | ... | .. | ரூ. 3—0—0 |
| 2 ,, | ... | ... | ரூ. 3—0—0 |

மானேஜர் மாத்வமித்திரன் ஆபீஸ்,
ஸ்ரீவியாஸ விலாஸம், கும்பகோணம்.


---

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரிண்டிங் ஒர்க்ஸ், கும்பகோணம்.

## மாத்வர்கள் யார்?

**ஸ்ரீமத்வமதத்தை அறிந்தவர்களே !**

அதற்கு கும்பகோணம்

# மாத்வமித்திரன்

பத்திரிகையை-வாசியுங்கள், தமிழ்நாட்டில் வெகு தீவிரமாய் பிரசாரமடைந்துவரும் மாத்வர்களின் முதன்மையான பத்திரிகை இதுவே. இப்போது மூன்றாவது வருடம் நடைபெறுகிறது. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள், புராணகதைகள் மாத்வ மகனீயர்களின் சரித்திரங்கள், ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம், யுக்திமல்லிகை போன்ற பல உயர்தர நூல்கள், புருஷஸூக்தம் வாயு ஸ்துதிபோன்ற பல சிறு நூல்கள், இவைகளின் சரியான எளியநடை தமிழ் மொழிபெயர்ப்புக்கள், உலக விருத்தாந்தங்கள் முதலிய அனேக விஷயங்கள் வெளியாகின்றன. பிரதிமாதமும் பௌர்ணமியன்று 1000 பிரதிகள் பிரசுரமாகின்றன.

10,000 வாசகர்கள் தமிழ்நாடு முழுவதிலுமிருக்கின்றனர். முன்பணமாய் வருடசந்தா ரூ 3-தான். பழைய பிரதிகள் விலைக்குக்கிடைக்கும். சந்தாதாராய்சேர உடனே அடியிற்கண்ட விலாஸத்துக்கு எழுதுங்கள்.

அறிவிப்பு.

---

தபாற்செலவுக்காக 1அணா போஸ்டேஜ் ஸ்டாம்பை அனுப்பி மாத்வர்கள் இப்புத்தகத்தை இனாமாகப் பெறலாம்.

மானேஜர்:—

"மாத்வமித்திரன்"

ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.